# பொருளியல் நோக்கு

ஏப்ரல்
1989

## தயார் செய்யப்பட்ட ஆடைகள்



மக்கள் வங்கி வெளியீடு



## ஆடை தயாரிப்பு

எமது தொழிற்சாலைகளின் வழக்கமான காட்சிகள்

செ. மதுசூதனன்

# பொருளியல் நோக்கு

மலர் 15 | இதழ் 1 | ஏப்ரல் 1989

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை.

## நிரல்கள்

| | | |
|---|---|---|
| நிகழ்ச்சிக்குறிப்பேடு | 2 | நிகழ்ச்சிக்குறிப்பேடு |
| பொருளாதாரம் | 20 | வரி மன்னிப்புக்கள், கறுப்புப்பணம், வரிவிதிப்பு |
| வியாபாரப் பொருட்கள் | 22 | தேயிலை - அதிக உற்பத்தி |

## விசேஷ அறிக்கை

| | |
|---|---|
| 3 | தைத்த ஆடைகள் |
| 5 | இலங்கையின் ஆடைக் கைத்தொழில் |
| 10 | 1988 இல் இலங்கை ஆடையுற்பத்திகளின் ஏற்றுமதி |
| 13 | ஏற்றுமதியாளர்களின் கருத்துக்கள் |
| 17 | ஆடைத் தயாரிப்பு வர்த்தகத்தின் உலகளாவிய போக்கு |
| 18 | பா. கொ. பொ. ஆணைக்குழுவின் கருத்து |

## சிறப்புக்கட்டுரை

| | | |
|---|---|---|
| ஸ்ரீயானி ஹுலுகல்ல | 24 | ஏற்றுமதித் துறைமீது தாராளக் கொள்கைகளின் தாக்கம் — இலங்கை, தென் கொரிய ஒப்பீட்டாய்வு |

## அடுத்த இதழில்

- ★ மனிதனும் சுற்றுச் சூழலும் - உயிரினச் சூழல் சமநிலையை அழித்து விடுவதனால் ஏற்படக்கூடிய அபாயங்களும் இலங்கை தொடர்பான பிரச்சினைகளும்
- ★ கொடியை தொடரும் வணிகம் — இந்திய விரிவாதத்தின் தன்மை
- ★ இலங்கையில் வறியோருள் வறியோர்

அட்டைப்படம்
செபஸ்டியன் பீரிஸ்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிபரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவின் வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது.
பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும், எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பனவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களை பிரதிபலிப்பனவுமாகா. இத்தகையக் கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.
பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

மார்ச்

1 கொழும்பு நுகர்வோர் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் மார்ச் 1989 ல் 780.08 புள்ளிகளாக இருந்ததென தொகை மதிப்பீட்டு, புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்தது. இது பெப்ரவரி 1989 ல் 786.05 புள்ளிகளாகவும் மார்ச் 1988 ல் 714.07 புள்ளிகளாகவும் இருந்தது. கடந்த 12 மாதங்களுக்குமான சராசரி 752.7 புள்ளிகளாகும்.

கடன் திட்டத்துக்கென ஜப்பான் இலங்கைக்கு 179,335,000 யென்களை (ஏறத்தாழ 4.7 கோடி ரூபா) நன்கொடையாக வழங்கும். கடன் மீள் கொடுப்பனவுகளை மேற்கொள்வதில் இலங்கை எதிர்நோக்கக்கூடிய கஷ்டங்களை சீராக்கும் நோக்கில் இந்தக்கொடை வழங்கப்படுகிறது. இந்த உதவி திட்ட சார்பற்ற பணக்கொடுப்பனவுகளின் வடிவில் இருப்பதனால் பெறும் நாடு இதனைக் கொண்டு மூன்றாவது மண்டல நாடுகளிலிருந்து பொருட்களை கொள்வனவு செய்யவும் முடியும். அதன் மூலம் சுயதேச சென்மதி நிலுவைப் பிரச்சினைகளைத் தணித்துக்கொள்வதற்கு வாய்ப்புக்கிட்டுகிறது.

ஜப்பானின் நிப்பன் ஏயார்வேய்ஸ் நிறுவனம் போயிங்கின 747 ஜம்போ ஜெட் விமானங்கள் 20 ஐ கொள்வனவு செய்ய இருப்பதாக 'எகனமிஸ்ட்' சஞ்சிகை தெரிவித்தது. இதற்காகும் செலவு 320 கோடி டொலர்களாகும்.

11 ஏற்கனவே இணங்கியிருந்த பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஆர்ஜன்ரைனா தவறியமையின் காரணமாக உலக வங்கி அந்நாட்டுக்கான 35 கோடி டொலர் கடன் நிறுத்தி வைத்திருக்கிறது. ஆர்ஜன்ரைனா வர்த்தக வங்கிகளுக்கு தவணை தப்பிய வட்டியாக மட்டும் 200 கோடி டொலர் செலுத்த வேண்டியிருக்கிறது. வங்கிகள் வட்டிக் கொடுப்பனவுகளைப் பெற வேண்டுமாயின் அவை கடன்களை வழங்க வேண்டுமென ஆர்ஜன்ரைனா ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்தார்.

13 ஜனாதிபதி புஷ் சமர்ப்பித்த ஐக்கிய அமெரிக்காவின் புதிய வரவு செலவுத்திட்டம், கடந்த வருடத்தில் 4.2 சதவீதமாக இருந்த அந்நாட்டின் பணவீக்கத்தினை 1990 ஆரம்பத்தில் 5.5 சதவீதமாக அதிகரிக்கச் செய்யும்.

14 திருகோணமலை மாவட்டத்தில் புனருத்தாரண செயல்திட்டங்களின் கீழ் 22 கிராமியக் குளங்களை புதுப்பிப்பதற்கு நிதியுதவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருக்கிறது. சிறிய நீர்ப்பாசன செயல்திட்டமொன்றாக கமநல சேவைகள் திணைக்களம் இத்திட்டத்தினை மேற்கொள்ளும். இதற்காகும் செலவு 27 இலட்சம் ரூபாவாகும். இந்த திட்டம் பூர்த்தியடைந்த பின்னர் 1,620 ஏக்கர் காணியில் வெற்றிகரமாக நெற்செய்கையை மேற்கொள்ள முடியும். அத்துடன் வீட்டுபயோகத்துக்கும் நீர் வழங்கக்கூடியதாகவும் இருக்கும்.

வீதிகளை திருத்துவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி அளிக்கிறது; இதற்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூ 800,000; அலுவலக தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கென மேலும் 100,000 ரூபா வழங்கப்படும்.

21 இலங்கையில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் சர்வதேச நீர்ப்பாசன முகாமை நிறுவனம், சூடான் நாட்டின் பாசன நீர்ப்பாசன வாய்ப்புக்களை விருத்தி செய்யும் நோக்கில் அந்நாட்டுடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டது. ஆபிரிக்க கண்டத்துடனான நிறுவனத்தின் ஈடுபாட்டினை இந்த ஒப்பந்தம் அறிமுகம் செய்கிறது.


உடவளவே நீர்த்தேக்க திட்டத்தின் நீர்ப்பாசனத்துக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 1 கோடியே 30 இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கியிருக்கிறது. இதன் கீழ் உடவளவே அபிவிருத்திப் பகுதியில் இருக்கும் சுமார் 12,000 ஹெக்டேயர் நிலம் யாலா, மகா இரு போகங்களிலும் நெற் செய்கைக்கான நீர்ப்பாசன வசதிகளைப் பெறும். இதனால் இப்பகுதியில் வாழும் 15,000 விவசாயிகள் நன்மையடைவர். உடவளவே நீர்த்தேக்கத்திலிருந்து சந்திரிகாவௌ குளத்துக்கு நீர் வழங்கும் பிரதான நீர்ப்பாசன கால்வாய் இத்திட்டத்தின் கீழ் புதுப்பிக்கப்படும் என்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சைச் சேர்ந்த பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

25 நாட்டின் மேற்கு கரையோரப் பகுதியில் புதிதாக மீட்கப்பட்ட நிலத்தில் இஞ்சோனில் மிகப்பெரிய விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு தென் கொரியா திட்டமிட்டுள்ளது. இப்போது உச்சமட்ட அளவில் பயன்படுத்தப்படும் சியோலின் கிம்போ விமான நிலையத்தின் பளுவை இது குறைக்கும் என்று 'எகனமிஸ்ட்' சஞ்சிகை தெரிவிக்கிறது.


28 இலங்கைக்கு 7.4 கோடி ரூபா பெறுமதியான மூளைக்காய்ச்சல் தடுப்பு மருந்தினை நன்கொடையாக வழங்க ஜப்பானிய அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக கொழும்பில் அமைந்துள்ள ஜப்பானிய தூதுவராலயம் அறிவித்தது. இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில், ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை சுகாதார துறை அதிகாரிகள் எடுக்கும் சிறப்பான ஆர்வத்தை கருத்திற்கெடுத்து இந்த நன்கொடை வழங்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

30 ஏற்கனவே இடம்பெற்றுவரும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐ. அமெரிக்க முகவரகத்தின் உதவியுடனான (USAID) செய்திட்டங்களுக்கென 1 கோடியே 52 இலட்சம் டொலர் (சுமார் 51 கோடி ரூபா) சர்வதேச உதவி வழங்குவது தொடர்பான மூன்று ஒப்பந்தங்களில் இலங்கை, ஐக்கிய அமெரிக்க அரசாங்கங்கள் கைச்சாத்திட்டதாக நிதியமைச்சின் செய்திக் குறிப்பொன்று கூறியது. இதில் 10 இலட்சம் டொலர் (இரண்டாவது தவணைப்பணம்) வடக்கு - கிழக்கு பிரதேச புனருத்தாரண செயல்திட்டத்துக்கானதாகும். கலவரங்களால் பாதிக்கப்பட்ட இப்பகுதிகளில் வேலைவாய்ப்புக்களையும், விவசாய விளைதிறனையும் அதிகரிப்பது இதன் நோக்கமாகும்.

தனியார் துறையின் வளர்ச்சிக்கு சாதகமானதாக இருக்கும் சூழல் ஒன்றினை தோற்றுவித்து, பொருளாதார அபிவிருத்தியை தூண்டுவதற்கான தனியார் துறை கொள்கை ஆதார திட்டமொன்றுக்காக 38 இலட்சம் அமெரிக்க டொலர் வழங்கப்படுகிறது. மூன்றாவதாக, தனியார் தொண்டர் ஸ்தாபனங்களின் சிறுமட்ட அபிவிருத்தி முயற்சிகளுக்கு 14 இலட்சம் டொலர் வழங்கப்படுகிறது.




இலங்கையின் மாறிவரும் ஏற்றுமதி அமைப்பு 1968, 1978, 1988




இலங்கையின் முழுப் பொருளாதாரத்தி லும், கைத்தொழில் துறையிலும் தயார் செய்யப்பட்ட ஆடைகள் கைத்தொழி லின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை இந்த வரைபடம் காட்டுகிறது. நாட் டின் ஏற்றுமதி அமைப்பிலும், கைத் தொழில் துறையிலும் மாற்றங்கள் நிகழ் வதற்கு இது வழிகோலியுள்ளது. எனி னும் ஒரே சந்தையில் ஆகக்கூடிய கவ னத்தை செலுத்துவதனுல் ஏற்படக் கூடிய ஆபத்துக்களையும் நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

- விவசாய ஏற்றுமதிகள்
- கைத்தொழில் ஏற்றுமதிகள்
- இரத்தினக்கல் ஏற்றுமதிகள்
- ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகள்

# தயார் செய்யப்பட்ட ஆடைகள்

கடந்த 12 ஆண்டுகளில் தயாரித்த ஆடைகளின் வியாபாரத்தில் ஏற்பட்ட பிரமாண்டமான விஸ்தரிப்பானது ரூபா அளவுகளில் 200 மடங்குக்கும் மேலானதாக வளர்ச்சி பெற்றது. 1976ல் 76 கோடி ரூபாயிலிருந்து 1988ல் 1365 கோடி ரூபாவாக இது அதிகரித்திருந்தது, தயாரித்த ஆடைகள் துறையைக் கைத்தொழில் பரப்பின் மிகப் பெருந் துறையாக வளர்த்தெடுப்பதில் இம்மாற்றம் பெரும் பங்கினைக் கொண்டிருந்தது. அத்துடன் பெருமளவில் தொழில் வழங்கும் துறையாகவும், அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் துறையாகவும் இது திகழ்ந்தது. 1980 களின் இடைக் காலத்திலிருந்து கடற்றொழில், கட்டடவாக்கம், சுற்றுலா மற்றும் ஏனைய சேவைத் துறைகளின் வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடைந்து சென்ற வேளையில், 1980களின் ஆரம்பத்தில் ஏற்பட்ட தீவிர வளர்ச்சிக்கு ஏனைய கைத்தொழில்களைப் போல புடவை, ஆடை தயாரிப்புத் துறை பெருமளவில் உதவிற்று. 1970 களின் ஈற்றில் ஆரம்பித்த அதன் வளர்ச்சி வேகம் அடுத்த தசாப்தத்திலும் தொடர்ந்தது. எனினும், இன்று இத்துறை பல பிரச்சினைகளையும் எதிர்காலச் சவால்களையும்எதிர்கொள்வதாக உள்ளது. கடந்த 12 ஆண்டுகளில் கட்டியெழுப்பப்பட்ட அதன் வளர்ச்சி வேகத்தைப் பேணுவதிலேயே அதன் எதிர்காலம் தங்கியுள்ளது. இன்னும் பல ஆண்டுகட்கு நிலைத்திருக்கக்கூடிய ஸ்திரமான அத்திவாரம் இக் கைத்தொழில் துறைக்கு இடப்பட்டுள்ளது என்பதில் ஐயத்துக்கு இடமில்லை. எனினும், எதிர்வரும் ஆண்டுகளில் எதிர்கொள்ளக்கூடிய பெரும் சவால்களை எதிர்கொள்வதற்கு இத்துறை இன்னும் அதிக முன்னேற்றம் காணவேண்டியுள்ளது. இத்துறையின் நிகர அந்நியச் செலாவணி உழைப்பு இன்னும் 25-35 சதவீதமாக மட்டும் இருந்து வருவது கவலைதருவதாக உள்ளது. எனினும், வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் நிகழ்கா

லச் சூழலில் இக்கைத்தொழிலிலும், இதற்குத் தேவையான துணைப்பொருட்கள் ஆக்கித்தரும் கைத்தொழில்களிலும் பெருமளவு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கக்கூடியதாக இருப்பதனால் கணிசமான சமூக-பொருளாதார நலன்கள் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் 65-70 சதவீதம்கொண்ட தனியொரு சந்தையாக ஐக்கிய அமெரிக்கா விளங்குவதும் கலக்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

அத்துடன், பல்வேறு விடயங்களில் உடனடிக் கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது.

**உதாரணமாக :**

ஏற்றுமதி செய்யப்படக்கூடிய ஆடைகளுக்குப் பொருத்தமான புடவைவகைகளைத் தயாரிப்பதற்கான நவீன ஆலைகள் ஸ்தாபிப்பதன் மூலம் தயாரித்த ஆடை ஏற்றுமதிக் கைத்தொழிலுக்கும் புடவைக் கைத்தொழிலுக்குமிடையில் ஏற்படுத்தப்பட வேண்டிய தொடர்பு.

குறைந்த செலவினைக் கொண்ட நிதியளிப்பு, ஏற்றுமதி வழிமுறைகளை எளிமைப்படுத்தல் போன்ற வழிகளால் தயாரித்த ஆடை ஏற்றுமதித்துறையின்' போட்டியிடும் தகைமையையும் நெகிழ்ச்சித் தன்மையையும் பெருக்குதல்.

சந்தைத் தொழிற்பாடுகளை உயர்த்தும் வகையில் தயாரித்த ஆடைகளின் தரத்தை உயர்த்துதல்.

திறன்மிக்க உள்ளமைப்புச் சேவைகள், உயரளவு தொழில் முனைவோரைக் கவர்வதற்கான ஊக்குவிப்புக்கள் வழங்கி உதவுதல்.

இலங்கை ஆடை உற்பத்தியாளர் சங்கமும் பல்நார் உடன்பாடு 1991ல் புதுப்பிக்கப்படாதிருப்பதற்கு வாய்ப்பிருப்பது பற்றி தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

*''1991ம் ஆண்டுக்கும் அதன் பின்னரும் ஏற்படக்கூடிய சவால்களைச் சமாளிப்பதற்கு*

அட்டவணை 1

**கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதி பெறுமதி 1978, 1988**

| வகை | 1978 பெறுமதி ரூ. ப. இலட். | 1978 மொத்தத்தில் % | 1988 பெறுமதி ரூ. ப. இலட். | 1988 மொத்தத்தில் % |
|---|---|---|---|---|
| 1. உணவு, குடிவகை, புகையிலை | 2,609 | 29.5 | 12,962 | 27.1 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 1,008 | 11.4 | 15,428 | 33.6 |
| 3. மர, மர உற்பத்திகள் (தளபாடங்கள் அடங்கலாக) | 124 | 1.5 | 677 | 1.2 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் | 376 | 4.2 | 1,372 | 2.8 |
| 5. இரசாயனம், பெட்ரோலியம், இறப்பர், பிளாஸ்டிக் உற்பத்திகள் | 3,279 | 37.1 | 13,477 | 25.3 |
| 6. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் (பெட்ரோலியமும் நிலக்கரியும் நீங்கலாக) | 592 | 6.7 | 2,156 | 4.2 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 219 | 2.5 | 307 | 0.9 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறியும் போக்குவரத்துக் கருவிகளும் | 590 | 6.7 | 2,006 | 4.6 |
| 9. தயாரிக்கப்பட்ட ஏனைய பொருட். | 55 | 0.3 | 155 | 0.3 |
| மொத்தம் | 8,852 | 100.0 | 54,063 | 100.0 |

* தற்காலிகமானவை

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2

**இலங்கை ஆடை ஏற்றுமதி பெறுமதியின் ஒப்பீட்டு நிலைமை (பெறுமதி ரூ. பத்து இலட்சம்)**

| வருடம் | மொத்த ஏற்றுமதிகளின் பெறுமதி | கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி | ஆடை ஏற்றுமதிகளின் பெறுமதி | வளர்ச்சி வீதம் ஆடை ஏற்றுமதிகள் | மொ. தே. உ. % ஆக ஆடை ஏற்றுமதிப் பெறுமதி | மொத்த ஏற்றுமதிகளின் % ஆக புடவை ஏற்றுமதிகள் | கைத்தொழில் ஏற்றுமதிகளின் % ஆக ஆடை ஏற்றுமதிகள் | தேயிலை ஏற்றுமதி பெறுமதி | பெட்ரோலிய ஏற்றுமதி பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1975 | 3,933.4 | 519.4 | 24.3 | -- | 0.1 | 0.6 | 4.7 | 1,931.6 | 391.0 |
| 1978 | 13,206.3 | 1,944.1 | 435.3 | 240.2 | 1.2 | 3.6 | 24.4 | 6,400.9 | 926.0 |
| 1981 | 21,043.1 | 7,455.7 | 2,956.8 | 63.4 | 3.8 | 14.0 | 39.6 | 6,444.0 | 3,122.0 |
| 1984 | 37,346.6 | 12,815.5 | 6,812.4 | 52.5 | 5.0 | 18.2 | 53.2 | 15,764.3 | 3,288.0 |
| 1987 | 41,132.7 | 20,004.2 | 12,488.0 | 45.2 | 7.2 | 30.3 | 62.4 | 10,653.5 | 2,592.0 |
| 1988 | 46,927.8 | 22,674.1 | 13,611.0 | 8.9 | 6.7 | 29.0 | 60.0 | 12,298.7 | 2,265.0 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி; இலங்கை சுற்றுலாச்சபை; புடவைக் கைத்தொழில் அமைச்சு: மா.கொ.பெ. ஆ.

எமக்கு இன்னும் மூன்று ஆண்டுகளே உள்ளன....... போட்டியை சமாளிக்குமுகமாகவும், எதிர்காலத்தில் வளர்ச்சியைத் தொடருமுகமாகவும் **ஏற்றுமதியாளருக்கு** அறிவூட்ட வேண்டும்'' இவ்வாறு இச்சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நடைமுறையிலுள்ள அனுமதிப் பங்கீட்டு முறை கண்டனத்துக்குள்ளாகியுள்ளது. 1977 முதற்கொண்டே பெரிய இறக்குமதி நாடுகள் தயாரித்த ஆடைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலவற்றைத் தமது நாடுகளுக்கு இறக்குமதி செய்வதற்கு பங்கீட்டு உடன்பாடுகளின் மூலம் வரையறைகளை விதித்து வந்துள்ளன. ஆடை ஏற்றுமதியாளரிடையே நியாயமானதும் முறைமை தழுவியதுமான பங்கீட்டை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் திட்டங்களை அறிமுகம் செய்துள்ள போதிலும் ஒழுங்கற்றமுறையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள சிக்கல் நிறைந்த விதிகளும், விதிமுறைகளும் மிகவும் பொறுமையுடனும் கஷ்டங்கள் மத்தியிலும் ஒழுங்கு செய்யப்பட்ட பங்கீடுகளைத் தொடர்ச்சியாக குறைந்த அளவில் மட்டுமே பயன்படுத்துவதற்கு வழிவகுத்துள்ளன என பங்கீட்டு அனுமதி முறைபற்றி ஏற்றுமதியாளர் சங்க உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பொருளியல் நோக்கின் இந்த இதழ் மேற்கூறியவற்றை உள்ளடக்கிய ஆய்வொன்றினையும் இத்துறை எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலையும் தருகிறது. ஆடை ஏற்றுமதிக் கைத்தொழிலின் ஆரம்பத்தைப் பற்றிய சுருக்கமான மேலோட்டத்துடன் இது தொடங்குகிறது.

**அதனையடுத்து, சர்வதேச தைத்த ஆடை வியாபாரத்தில் இலங்கையின் பங்கு மற்றும் இக்கைத்தொழில் துறையின் எதிர்காலம் போன்ற அம்சங்கள் ஆய்வுக்கண்ணோட்டத்துடன் அணுகப்படுகின்றன.**

## இலங்கையின் ஆடைக் கைத்தொழில்

**இலங்கையில் தைத்த ஆடைகளின் தொழிற்சாலையளவிலான உற்பத்தியின் ஆரம்பம் 1950ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் காணப்பட்டது. இச்சமயத்தில் நிச்சயமற்றதொரு துறையினை ஆரம்பித்த ஒரு சில முன்னோடி தொழிலதிபர்கள் தமது உற்பத்திகளை மிகப் பிரபலமான சில ஆடை வகைகளுக்கு மட்டுப்படுத்தியதுடன் உள்ளூர் தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்தும் வந்தனர். 1950ன் தசாப்த காலப்பகுதியில் துணிவகைகள், ஆடைவகைகளின் தடையற்ற இறக்குமதி அனுமதிக்கப்பட்டிருந்ததுடன், முன்னோடி உற்பத்தியாளர்கள், பாரம்பரிய சந்தைக்குள் நுழைய முயல்வதை பாரம்பரிய வர்த்தக சமூகத்தினர் எதிர்த்தும் வந்தனர். இவ்விதம் தலையெடுத்த கைத்தொழில் துறையின் ஊழியரைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் இந்த நாட்களில் எடுத்த முயற்சிகளில் ஒன்று இறக்குமதியாளர், குறிப்பிட்டளவு இறக்குமதிகளுக்கு குறிப்பிட்டளவு உள்ளூர் உற்பத்திகளையும் கொள்வனவு செய்ய வேண்டுமென்ற கட்டுப்பாட்டினை விதிக்கும் கைத்தொழில் உற்பத்திகள் சட்டமாகும்.**

கைத்தொழிலின் ஆரம்ப நாட்களில் கவனத்தைக் கவரும் பல அம்சங்கள் காணப்பட்டன. உதாரணமாக, 1950 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இத்தொழிற்துறையுடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்ட ஒருவர் கூறுவது போன்று '' இந்நாட்டில் ஆக்கப்பட்ட முதலாவது சேர்ட் இங்கு ஒன்று சேர்க்கப்பட்டது.'' ஹொங்கொங்கிலிருந்து இறக்குமதியாக்கப்பட்ட மொன்டிகார்லோ சேர்ட்டுகள் சீர்குலைக்கப்பட்ட நிலையில் இங்கு தருவிக்கப்பட்டு கெய்சர் வீதியில் ஒன்று சேர்க்கப்பட்டன. இதன் பின்னர் கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் சேர்ட் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு, இவை உள்ளூர் சந்தைகளில் முக்கிய ஈடுபாட்டினைக் கொண்டிருந்தன. 1960 இல் சோவியத் யூனியன் இலங்கை சேர்ட்டுகளைக் கொள்வனவு செய்வதில் அக்கறை காட்டும் வரையில் எந்தவொரு உற்பத்தியாளரும் ஏற்றுமதியில் ஈடுபாடு கொண்டிருக்கவில்லை.

1950 ன் தொடராண்டுகளின் இறுதியில் வெளிநாட்டு செலாவணி நிலைமை மிக மோசமடைந்ததுடன் கொள்கைகளில் மாற்றமேற்பட்டு, இறக்குமதிகள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதுடன் இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில் கொள்கையும் பின்பற்றப்பட்டது. மிகப்பெரிய அடிப்படைக் கைத்தொழில்கள் அரசுக்கென ஒதுக்கப்பட அதே சமயம், பல ரகமான நுகர்வோர் பொருள் கைத்தொழில்கள் தனியார்துறையினரிடம் விடப்பட்டு, பல்வேறு முதலீட்டு ஊக்குவிப்புகளும் பாதுகாப்பான சந்தையும் வழங்கப்பட்டது. 1960 ஆம் தசாப்த காலத்தில் ஏறக்குறைய 300 வகையான கைத்தொழில் உற்பத்திகள் உள்ளூரில் உற்பத்தியாக்கப்பட்டன. இந்த உற்பத்திகளில் முக்கியமானதொன்றாக புடவை வகைகளும், மற்றொன்றாக தைத்த ஆடை வகைகளும் காணப்பட்டன. எனினும், ஆரம்பத்திலிருந்து ஆடைக் கைத்தொழிலுக்கான மூலப்பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு வந்தன.

1960 ன் தொடராண்டுகளில் இக்கைத்தொழில் தாபிக்கப்பட்டு தசாப்த முடிவில் கைத்தொழில் உற்பத்தியின் மொத்தப் பெறுமதியின் 8 சதவீதத்தை கைத்தறி நெசவுப் புடவை வகைகள் பெற்றன. மொத்த கைத்தொழில் உற்பத்தியின் 4 சதவீதத்தைத் தைத்த ஆடைகளும் ஏனைய ஆடை வகைகளும் பெற்றன. 1960 களில் இத்துறையின் முன்னோடி உற்பத்தியாளர்களாக இந்நிறுவனங்கள் பென்ட்வி இன்டஸ்ரீஸ், போர்னுட் பொதெஜு

இன்டஸ்ரீஸ் லிமிட்; சிலோன் டயர் சேட்ஸ் கம்பனி, கண்டி கார்மன்ட்ஸ், சிலோன் ரிட்வெயர் இன்டஸ்ரி, ஹென்ட்லி கார்மட்ன்ஸ் லிமிடெட், ஹைதரா மணி லிமிடெட், லங்கா வீவிங் மில்ஸ், வெலோனா இன்டஸ்ரீஸ், நூர்டெக்ஸ் கார்மன்ட்ஸ் இன்டஸ்ரீஸ், மக்சிம்ஸ் லிமிடெட், என்பனவாகும்.

1960 களின் காலப்பகுதியில் தான் இலங்கையின் தைத்த ஆடைகள் ஏற்றுமதிச் சந்தையில் இடம்பிடித்தன. இலங்கைச் சேர்ட்டுகள், ஐக்கிய இராச்சியத்தினதும், சோவியத் யூனியனினதும் சந்தைகளில் நுழைந்தன. முன்னணி சேர்ட் உற்பத்தியாளரொருவர் இலங்கைக்கும் ரஷ்யாவுக்குமிடைப்பட்ட இருபக்க வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் ஏறக்குறைய 20 இலட்சம் ரூபா பெறுமதியான தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்யலானார். 1966ஆம் ஆண்டளவில் சில பெரிய உற்பத்தியாளர்ள் ரூபா 327, 375 பெறுமதியான உற்பத்திகளை ரஷ்யா, பிரான்ஸ், பாகிஸ்தான், மாலேதீவு, தாய்லாந்து சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்தனர். 1965 – 1969 கால இடைவெளியில் கைத்தொழில் உற்பத்தியின் பெறுமதி 1965இல் இருந்த 2 கோடியே 90 இலட்சம் ரூபாவைவிட நான்கு மடங்காக அதிகரித்திருந்தன. 1970ஆம் ஆண்டளவில் 300க்கு மேற்பட்ட உற்பத்தியாளர்கள் (அதிகமானோர் சிறு அளவு உற்பத்தியிலீடுபட்டவர்களாக) பல்வேறு ஆடை வகைகளின் உற்பத்திகளை (பெருமளவில் உள்ளூர் சந்தைக்காக) தயாரிக்க ஆரம்பித்தனர்.

எவ்வாறெனினும், இத்தொழில் தொடர்ந்தும் வெளிநாட்டிலிருந்து வருவிக்கப்பட்ட மூலப் பொருட்களிலும், துணைப் பொருட்களிலும் தங்கியிருந்தது. உள்ளூர் தயாரிப்பாளர்கள் தையற் தொழிலை மட்டுமே மேற்கொள்பவர்களாக இருந்தனர். 1970இல் நாட்டின் வெளிநாட்டு செலாவணி மட்டுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மூலப் பொருட்களின் இறக்குமதியிலும் கட்டுப்பாடுகள் அதிகமாயின, இக் காலப்பகுதியில் இத்தொழிற்துறையில் மந்த நிலையும் தீவிர கொள்திறன் பயன்பாட்டுக் குறைவும் ஏற்பட்ட அதே வேளையில் உற்பத்திச் செலவு அதிகரித்து வந்தது. இறுக்கமான பொருளாதார ஒழுங்குகளுடனும் பல்வேறு மட்டங்களில் செயற்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளுடனும் உள்ளூர் சந்தையில்கூட தைத்த ஆடைகளின் விலைகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் பல சந்தர்ப்பங்களேற்பட்டன.

1972ஆம் ஆண்டளவில் சில துறைகளை ஏற்றுமதி சார்பான அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்க அனுமதிப்பதற்காக நடைமுறைக் கொள்கைகள் மாற்றப்பட்டதைத் தொடர்ந்து இத்தொழிற்துறை தொடர்பான மனப்பாங்கும் மாற்றத்திற்குட்பட்டது. மூலப்பொருள் தள்ளுபடிகள், பெருமளவுமூலப் பொருள் ஒதுக்கீடுகள் போன்ற ஏற்றுமதிக்கான ஊக்குவிப்புகள், மாற்றக்கூடிய ரூபாக் கணக்கு நலன்கள், விசேட வெளிநாட்டு செலாவணி ஒதுக்கீடுகள் என்பவற்றுடன் வேறும் நிதி, வரி ஊக்குவிப்புகள் என்பனவும் தெரிந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதி சார் கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்டன. இந்த ஊக்குவிப்புகளுக்கென 17 உற்பத்திப் பிரிவுகள் குறித்துரைக்கப்பட்டதுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கென தெரிந்தெடுக்கப்பட்ட முன்னுரிமை உற்பத்திகளில் தைத்த ஆடைகள்முக்கியத்துவம் பெற்றன. இந்த ஊக்குவிப்புகள் சில முன்னணி ஆடை உற்பத்தியாளர்கள், உள்ளூர்த் தேவைகளைப் பொருட்படுத்தாது வெளியூர் சந்தைகளுக்கு தங்கள் கவனத்தைத் திருப்புவதற்கான ஆதரவை வழங்கின. இந்த உற்பத்தியாளர்கள் 1970களின் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட சலுகைகளால் பெற்ற நன்மைகளின் சான்றினை, அடுத்து வந்த ஐந்து ஆண்டுகளில் ஏற்றுமதிகளில்பதிவு செய்யப்பட்ட பெருக்கத்திலிருந்து காண முடிகின்றது.

1970ஆம் தசாப்தத்தின் ஆண்டு காலப்பகுதியின் முதல் ஆறு ஆண்டுகளிலும் ஏறக்குறைய 2,500க்கு மேற்பட்ட கைத்தொழிற் பிரிவுகள் உள்ளூர் கைத்தொழில் அங்கீகாரக்குழுவிடமிருந்து அங்கீகாரம் பெற்றன. அவற்றில் ஏறக்குறைய 2,000 அலகுகள் புடவை, புடவை சார்ந்த கைத்தொழில்களில் ஈடுபட்டிருந்தன. இத்துறைக்கென வழங்கப்பட்ட பல்வேறு ஊக்குவிப்புகளை விட, வேறும் பல காரணிகள் இதன் நிலையான வளர்ச்சிக்கு காரணமாயமைந்தன. இத்துறையிலான அதிகரித்த முதலீட்டிற்கான முக்கிய காரணம் இச்சந்தைகளின் பெருக்கத்துக்கு காணப்பட்ட வாய்ப்பு மற்றும் தைத்த ஆடைகளின் உற்பத்தியாளர் பெற்ற உயர் இலாபங்கள் என்பனவாகும். 1970களின் நடுப்பகுதியில் ஏற்பட்ட சம்பள/விலை அதிகரிப்பும் ஹொங்கொங், தைவான், தென்

**அட்டவணை 3**

**இலங்கையின் தயார் செய்யப்பட்ட ஆடை ஏற்றுமதி**

**அளவும் பெறுமதியும் 1972 – 76**

| வருடம் | அளவு (பத்து இலட்சம்) பக்கெட்டுகள் | சதவீத வளர்ச்சி | கப்பற்தளம் வரையிலான பெறுமதி (ரூ. பத்து இலட்.) | சதவீத வளர்ச்சி |
|---|---|---|---|---|
| 1972 | 0.72 | – | 6.1 | – |
| 1973 | 1.20 | 67 | 14.1 | 131 |
| 1974 | 2.16 | 80 | 29.3 | 108 |
| 1975 | 2.28 | 6 | 30.7 | 5 |
| 1976 | 3.60 | 58 | 70.8 | 13 |

கொரியா, சிங்கப்பூர் போன்ற பாரம்பரிய ஆசிய வழங்குநர்களின் ஏற்றுமதிகளில் வர்த்தக அனுமதிப் பங்குகள் விதிக்கப்பட்டமையும் இலங்கைக்கு அனுகூலமாயிருந்தன. இலங்கையின் ஏற்றுமதி வளர்ச்சிக்கு சர்வதேச வர்த்தக சூழ்நிலையும், குறிப்பாக தொழில் வளர்ச்சி கண்ட நாடுகளில் ஏற்பட்ட தொழில் செலவு அதிகரிப்பும், பாரம்பரிய தூர கிழக்காசிய ஆடை உற்பத்தியாளர் மீது விதிக்கப்பட்ட ஏற்றுமதி அனுமதிப் பங்குகளும் பெருமளவு உதவின. இந் நிலைமைகளும், ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் இலங்கையில் கிடைக்கக் கூடியதாகவிருந்த தொழிலாளர் அணியும், திருப்திகரமான உள்ளக அமைப்பு வசதிகளும் 1970–ன் தசாப்த இறுதியில் இக் கைத்தொழில் தீவிர முன்னேற்றமடைய வழி வகுத்தன.

அட்டவணை 4

தயார் செய்யப்பட்ட ஆடை ஏற்றுமதிகள் 1977 - 1988

| வருடம் | அளவு (பத்து இலட்சம்) பக்கெட்டுகள் | சதவீத வளர்ச்சி | கப்பத்தளம் வரையிலான பெறுமதி (ரூ. பத்து இலட்.) | சதவீத வளர்ச்சி |
|---|---|---|---|---|
| 1977 | 7.17 | 74 | 139.8 | 103 |
| 1978 | 12.64 | 76 | 457.5 | 227 |
| 1979 | 33.96 | 169 | 1,103.5 | 141 |
| 1980 | 51.51 | 52 | 1,808.4 | 64 |
| 1981 | 58.64 | 14 | 2,956.8 | 64 |
| 1982 | 65.98 | 13 | 3,444.9 | 17 |
| 1983 | 84.09 | 27 | 4,635.6 | 35 |
| 1984 | 150.66 | 79 | 6,812.4 | 53 |
| 1985 | 166.16 | 4 | 7,687.8 | 5 |
| 1986 | 171.31 | 10 | 9,254.1 | 20 |
| 1987 | 187.89 | 10 | 12,383.4 | 35 |
| 1988 | 188.55 | 1 | 13,651.7 | 9 |

1977 வரை காணப்பட்ட பல்வேறு தீவிர கட்டுப்பாடுகள், தடைகளின் நீக்கமும் கவர்ச்சியான ஊக்குவிப்புகள், சலுகைகளின் அறிமுகமும் அடுத்து வந்த இரு ஆண்டுகளில் முன் ஒருபோதுமில்லாத துரித வளர்ச்சியை இத் தொழிற்துறையிலேற்படுத்தின. கட்டுநாயக்கா தடையற்ற வர்த்தக வலயத்தை நிறுவியமை மேலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. இங்கு நிறுவப்பட்ட பல தையல் நிறுவனங்கள் நடுத்தர அளவினவாக 150 முதல் 250 தையல் இயந்திரங்களையும் 300 முதல் 500 வரையான ஊழியரையும் கொண்டதாக விளங்கின.

இந்த நிறுவனங்களில் மூன்று வகையான அங்கீகாரங்கள் அதாவது உள்ளூர் முதலீட்டு ஆலோசனைக் குழுவினால், வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழுவினால், பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழுவினால் வழங்கப்பட்ட அங்கீகாரங்களைக் கொண்டிருந்தன.

உள்ளூர் முதலீட்டு ஆலோசனைக் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட பெருமளவு நிறுவனங்கள் ஏற்றுமதியாளராக இருக்கவில்லை. 1987 வரையான பத்து ஆண்டுகளில் வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழு, ஆடை உற்பத்திகளின் ஏற்றுமதியாளரென்ற வகையில் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட 130 விண்ணப்பங்களை அங்கீகரித்தது. பெருமளவு நிறுவனங்கள் அங்கீகாரத்தைப் பெற்றுள்ள போதிலும் உண்மையில் ஏற்றுமதியாளராக செயல்படுபவை மிகக் குறைந்த எண்ணிக்கையேயாகும். சில (வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழு) உற்பத்தியாளர்கள் சர்வதேச துணை ஒப்பந்தக்காரராகவுள்ளனர். பல எண்ணிக்கை நிறுவனங்கள் வெளிநாட்டு ஒத்துழைப்பின்றி ஏற்றுமதித் துறையில் இயங்கி வருவது தெரிகின்றது. கைத்தொழில் வட்டாரங்களின் தகவலின் பிரகாரம் நாட்டிற்குள் வந்துள்ள கணிசமானளவு கொள்வனவாளர்கள் சந்தைகளை ஏற்படுத்துவதில் வெளிநாட்டு ஒத்துழைப்பாளருக்கு பதிலாக செயற்பட்டுள்ளனர். நாட்டில் அல்லது அயல் நாட்டில் நிரந்தர அலுவலகங்களைக் கொண்ட கொள்வனவு நிறுவனங்களின் சார்பில் இவர்கள் செயற்பட்டு, குறித்துரைக்கப்பட்ட விடயங்களைத் தேடி தொழிற்சாலைகளுக்கு விஜயம் மேற்கொண்டு தங்கள் தேவைகளுக்கான கட்டளைகளை மேற்கொள்கின்றனர். சொந்த உற்பத்திகளைத் தயாரிக்கும் பல தொழிற்சாலைகள், தங்கள் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு இத்தகைய கொள்வனவு நிலையங்களில் தங்கியிருக்கும் நிலையிலுள்ளன. 1988இல் முடிவடையும் பத்து ஆண்டுகளில் 83 ஆடை, புடவை தொழிற்சாலைகள் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவினால் தமது உற்பத்திக்காக அங்கீகரிக்கப்பட்ட போதிலும், 1986இல் கிட்டத்தட்ட 35 ஆடை தொழிற்சாலைகளே செயற்பட்டன. முதலீட்டைப் பொறுத்தவரையில் 130 வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக்குழு தொழிற்சாலைகள் 218 கோடி ரூபாவை முதலீட்டைக் கொண்டுள்ளன. பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு தொழிற்சாலைகள் இதைவிட உயர்வான தொகையை கொண்டிருந்தன. இந்த எண்ணிக்கைகள் பா. கொ. ஆ. தொழிற்சாலை ஒன்று சராசரியாக ரூபா 3 கோடியே 28 இலட்சம் ரூபாவையும் ஒப்பீட்டளவில் வெ. மு. ஆ. கு. தொழிற்சாலை ஒன்று 1 கோடி 67 இலட்சம்

ரூபா முதலீடாகக் கொண்டிருந்தமையை வெளிப்படுத்துகின்றன. இந்த அடிப்படையிலிருந்து ஏனையவற்றைவிட பா. கொ. பொ. ஆ. தொழிற்சாலைகள் பொதுவாக பெரியளவினவாகவும் சிறந்த உபகரணங்களையுடையனவாகவும் இருந்தமையைக் காணமுடிகிறது.

பா. கொ. பொ. ஆ. பிரதேசத்துள் தொழிற்சாலையொன்றிற்கான மூலதனம் 4.5 கோடிரூபாயாக இருக்கையில் வெ. மு. ஆ. குழு தொழிற்சாலைகளுக்கான மூலதனம் ரூபா 1.8 கோடிரூபாவாக இருந்தமை தெரிகின்றது. எனினும், மொத்தத்தில் ஆடைத் தொழிற்சாலைகளுக்கான மூலதனத் தேவைகள், ஏனைய பிற கைத்தொழில்களின் தேவைகளை பொதுவில் குறைந்தனவாகவே இருந்தன.

### வெளிநாட்டு முதலீடு

1988 வரை பா.கொ.பொ.ஆ. ஆடைக் கைத்தொழிலில் வெளிநாட்டு முதலீட்டு மட்டம் சராசரி 68.5 சதவீதமாக இருந்தன. இதேவேளையில் ஏனைய சகல கைத்தொழில்களிலும் வெளிநாட்டு மூலதனமட்டம் சராசரி 71.8 சதவீதமாக இருந்தது. எனினும் வெ.மு.ஆ. குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலைகள் விடயத்தில் ஆடைக்கைத்தொழிலுக்கான வெளிநாட்டு முதலீட்டு மட்டம் சராசரி 34.6 சதவீதமாகவும் காணப்பட்டது. உ.மு.ஆ. கைத்தொழில்கள் யாவற்றிலும் வெளிநாட்டு முதலீடு சராசரி 50.7 சதமாகக் காணப்பட்டது.

### ஊழியர் ஒருவருக்கான முதலீடு

பா.கொ.பொ.ஆ. குழுவிற்குள்ளும், வெளியேயுமான வெளிநாட்டு முதலீட்டு மட்டம், மொத்தத்தில் ஏனைய கைத்தொழில்களிலும் பார்க்க ஆடையுற்பத்தி கைத்தொழிலில் குறைவாக இருந்தமையை அவதானிக்க முடிகின்றது. ஊழியர் ஒருவருக்கான முதலீட்டு மதிப்பீடு, பா.கொ.பொ.ஆ. நிறுவனங்களில் ஒரு வேலைவாய்ப்பினை வழங்குவதற்கு ஏறக்குறைய 60,000 ரூபா செலவு செய்யப்படும் வேளையில், வெ.மு.ஆ. குழுவில் இது 116,000 ரூபாவாகவும். உ.மு.ஆ. குழுவில் மிகக் குறைந்தது 41,000 ரூபாவாகவும் இருப்பதனைக் காட்டுகிறது. சகல கைத்தொழில் வகைகளுக்கும் இந்த சராசரியே காணப்பட்டது. ஆயினும் ஆடைக் கைத்தொழில் எனும் குறித்துரைக்கப்பட்ட விடயத்தில் பா.கொ. பொ. ஆ. குழுவில் வேலையொன்றிற்கான செலவு ரூபா 30,000 ஆகவும் வெ.மு.ஆ. குழுவின் செலவு ரூபா90,000 ஆகவும் உ.மு.ஆ. குழுவின் செலவு ரூபா 27,000 ஆகவும் காணப்பட்டது. இவ்விலக்கங்கள் 1980 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதிக்கு ஏற்புடைத்தனவாகும். எவ்வாறெனினும் பா. கொ. பொ. ஆ. குழுவில் சகல கைத்தொழில்களிலும் ஊழியரொருவருக்கான முதலீட்டுத்தேவை ரூபா 150,000 ஆகவும் வெ.மு.ஆ. குழுவில் ரூபா 111,000 ஆகவும் உ.மு.ஆ. குழுவில் ரூபா 110,000 ஆகவும் காணப்பட்டதுடன் ஆடைக் கைத்தொழில் முதலீட்டுத் தேவைக்கான ஒப்பீட்டு அளவு பா. கொ. பொ. ஆ. குழுவில் ரூபா 65,000 ஆகவும் வெ.மு.ஆ. குழுவில் ரூபா 50,000 ஆகவும் உ.மு.ஆ. குழுவில் ரூபா 14,000 ஆகவும் காணப்பட்டன.

1988 இறுதியில் பா.கொ.பொ. ஆ. குழுவில் மொத்த நேரடி வேலைவாய்ப்பு 50.744 ஆகவும் அதில் பெரும்பாலானவை அதாவது 35,000 வரையானவை, ஆடைத்தொழிற் துறையிலுமாக இருந்தன. 1987இல் பா.கொ. பொ.ஆ. குழுவுடன் உடன் படிக்கை கைச்சாத்திட்ட நிறுவனங்கள் 12 ஆகவும் அதில் மொத்த வேலை வாய்ப்பு 3,581 ஆகவும் அதில் 2,286 (64 சதவீதம்) புடவைத்தொழில் நெசவு ஆடை, தோற்பொருட் துறைகளில் ஈடுபட்ட 4 நிறுவனங்களில் காணப்பட்டது. 1988 இல் உடன் படிக்கை 26 நிறுவனங்கள் உடன் படிக்கை கைச்சாத்திட்டதுடன் இதில் மொத்த வேலை வாய்ப்பு சாத்தியம் 11,060 ஆக இருந்தது. அவற்றில் 7 நிறுவனங்கள் 4,958 (45 சதவீதம்) தொழில் வாய்ப்புக்கள் இந்த உற்பத்தி பகுதியில் அடங்கின.

1987, 1988 இல் வெ.மு.ஆ.கு. முதலீட்டு அங்கீகாரங்களில் இருந்த மொத்த 96 நிறுவனங்களில் 16 நிறுவனங்கள் புடவை ஆடை, தோற்பொருள் உற்பத்தி துறையில் இருந்தன. இந்த 96 நிறுவனங்களுக்கான மொத்த வேலைவாய்ப்பு சாத்தியம் 8,579 ஆகும். அதில் 4,405 (51சதவீதம்) இந்த உற்பத்திப் பிரிவில் காணப்பட்டன.

### 1980 களின் தொடக்கத்தில் தைத்த ஆடைகளின் ஏற்றுமதி

1977 முடிவிலிருந்து, தாராளமயமாக்கப்பட்ட வர்த்தகத்துடன் இலங்கையின் ஆடையுற்பத்தியின் ஏற்றுமதிகள் அதிகரித்தன. 1970 ஆம் தசாப்தத்தின் இறுதி ஐந்து ஆண்டுகளிலும் 1975 இல் 17 இலட்சம் ரூபா பெறுமதியான ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் இது 1980 இல் 5 கோடியே 16 இலட்சம் ரூபாவாக உயர்ந்தமையிலிருந்து இது தெளிவாகின்றது. இலங்கையின் மொத்த ஆடை ஏற்றுமதிகளில் பா.கொ.பொ. ஆ. உற்பத்திகளின் பிரவேசம் இந்த ஏற்றுமதிகளை விஸ்தரித்தது. கண்டிப்பான கோட்டா விதிமுறைகள் அமுலில் இருந்த போதிலும் ஐ. அமெரிக்கா, ஐ. பொதுச்சந்தை நாடுகள் என்பவற்றுக்கான ஏற்றுமதிகள் குறிப்பாக அதிகரித்தன. பா.கொ. பொ. ஆ. தொழிற்சாலைகளின் உற்பத்தி ஆரம்பமாகியதன் பின்னர் அனுமதிப் பங்குகளில் கணிசமானளவு அவற்றிற்கென ஒதுக்கப்பட்டது. 1980 முன்னர் கட்டுநாயக்கா ஏற்றுமதி தயாரிப்பு வலயத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகள் மொத்த ஏற்றுமதிகளில் அதிக முக்கியத்

துவம் பெற்றிருக்கவில்லை. ஆயினும் 1980 இன் பின்னர் மொத்த ஏற்றுமதியில் இவ்வலயத்திலிருந்து மேற் கொள்ளப்பட்ட ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்கன. 1982 அளவில் மொத்த ஆடையுற்பத்தி ஏற்றுமதியின் 37 சதவீதம் வரையில் வலயஏற்றுமதிகள் இடம்பெற்று 1986 இல் மொத்தத்தில் 45 சதவீதமாக உயர்வடைந்தது. 1985 பா.கொ.பொ.ஆ.கு. ஏற்றுமதிகள் 10 கோடி ஆடைகளாக அமைந்து இருக்கையில் ஏனைய தொழிற்சாலைகளின் ஏற்றுமதி 5கோடியே 62 இலட்சம் ஆடைகளாக (பா.கொ.பொ.ஆ.குழுவின் ஏற்றுமதிகளில் அரைவாசிக்கு சற்றுக் கூடுதலாக மட்டும்) அமைந்தது. பா.கொ.பொ.ஆ. தொழிற்சாலைகள் வசதிகளைப் பொறுத்த வரையில் குறிப்பாக நிதி, மூலப் பொருட்களைப் பெறுதல் என்பவற்றில் அனுகூலமான நிலையிலிருந்ததுடன், இத் தொழிற்சாலைகள் துரிதமான உயர் தரமான உற்பத்திகளைப் பெறும் விதத்தில் பெரிய சிறந்த உபகரணங்களையும் பெற்றிருந்தன. 1987 ஆம் ஆண்டளவில் இத்தொழிற்சாலைகளின் உற்பத்தி 12.1 கோடி ஆடைகளாக இருக்க ஏனைய தொழிற்சாலையுற்பத்தி 6.9 கோடி ஆடைகளாக அமைந்திருந்தது.

பெறுமதி நியதிகளைப் பொறுத்த வரையில் 1987 இல் ஆடையுற்பத்திகளின் மொத்த ஏற்றுமதிப் பெறுமதி 1238.3 கோடி ரூபாவாக இருந்தது. 1980 இன் தொகையான 180.8 கோடி ரூபாவுடன் ஒப்பிடுகையில் இதில் ஏழுமடங்கு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 1980ன் தொடராண்டுகளில் இத்துறையில் துரிதமானதும் உறுதியானதுமான வளர்ச்சி காணப்பட்டதுடன் இந்த வளர்ச்சியின் வருடாந்த சராசரி 37.1 வீதமாயிருந்தது. ஏற்றுமதி வளர்ச்சி அளவை நோக்குகையில் அது முன்னைய வருடத்தின் 35.8 சதவீதத்திலிருந்து 8.9 சதவீதமாக குறைந்திருந்தது. எனினும் 1988 இல் ஏற்றுமதிகளின் பெறுமதி 1365.1 கோடி ரூபாவாக அதிகரித்திருந்தது. செலாவணி வீத மாற்றல்கள் சமீபத்திய ஆண்டுகளில் ஏற்றுமதிகளின் அதிகரித்த ரூபா பெறுமதியில் முக்கிய பாதிப்பினையேற்படுத்தியிருக்கிறது. ஐ.அமெரிக்க டொலரிலும், எஸ்.டி.ஆர். நியதிகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பும் இந்த ஏழாண்டு காலப்பகுதியில் தெளிவாகக் காணப்பட்டது. 1980-1987 ற்கு இடைப்பட்ட காலத்தில் ஏற்றுமதிகள் ஐ.அமெ. டொலர்களில் 441 சதவீத அதிகரிப்பைக் காட்டி 1980 இன் 8.4 கோடியிலிருந்து 1987 இன் 43.8 கோடி டொலர் வரையில் அதிகரித்தது. எஸ்.டி.ஆர். நியதிகளில் 289 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டது. எவ்வாறெனினும், 1988 இல் ஏறக்குறைய 10 இலட்சம் அமெரிக்க டொலர் அதிகரிப்பு காணப்பட்ட அதேவேளையில் எஸ்.டி.ஆர். நியதிவிலையில் 80 இலட்சம் எஸ்.டி.ஆர். வீழ்ச்சி காணப்பட்டது.

1980 இல் ஆடைகள் ஏற்றுமதி நாட்டின் மொத்த ஏற்றுமதிப் பெறுமதியில் (ரூபா அளவுகளில்) 10 சதவீதத்தையும் அனைத்து கைத்தொழில் ஏற்றுமதிகளிலும் 30 சதவீதத்தையும் கொண்டிருந்தது. படிப்படியாக இப்பிரிவு முக்கியத்துவம் பெற்றுவந்ததுடன் 1987 இல் மொத்த ஏற்றுமதிகளில் ஆடை ஏற்றுமதிகள் 30 சதவீதமாகவும் கைத்தொழில் ஏற்றுமதிகளில் 62 சதவீதமாகவும் அதிகரித்திருந்தன. ஆயினும் 1988 இல் இவ்வதிகரிப்பு முறையே 29 சதவீதமாகவும் 59 சதவீதமாகவும் காணப்பட்டது.

மொத்த ஏற்றுமதி அமைப்பில் ஆடை ஏற்றுமதிகளின் மாறிவரும் நிலையும் முக்கியமானது. 1980 இல் ஆடைகளின் ஏற்றுமதிப் பெறுமதி தேயிலை, இரப்பர், பெற்றோலியம், சுற்றுலாப் பயணிகளின் வருமதி என்பவற்றை விட மிகக் குறைந்து காணப்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் மொ. தே. உற்பத்தியில் 2.9 சதவீதத்தையே இது பெற்றிருந்தது. 1985 இல் ஆடை ஏற்றுமதிகளின் பெறுமதி தேயிலைக்கு அடுத்ததாக காணப்பட்ட போதிலும் 1986 இல் அது தேயிலை வருமானத்தையும் முந்தி நின்றது. 1987, 1988ஆம் ஆண்டுகளிலும் இந் நிலையைப் பேணிவந்தது.

1970ன் தொடர் ஆண்டுகளில் முக்கியமான நான்கு ஏற்றுமதிப் பொருட்களே காணப்பட்டன. எனினும் அடுத்து வந்த 10 ஆண்டுகளில் இது 50 ஆக அதிகரித்திருந்தது. 1973 இல் மொத்த தைத்த ஆடை ஏற்றுமதிகளில் டீசேட்டுக்களும் சேட்டுக்களும் 66 சதவீதமாக இருந்தன. மிகுதி 34 சதவீதம் மகளிர் ஆடைகளாக இருந்தன. 1974 முதல் பல ஆடை வகைகள் புகுத்தப்பட்டு முதற் காணப்பட்ட நான்கு முக்கிய வகைகளும் மாற்றமடைந்து சிறுவர் ஆண்கள் காற்சட்டைகளும் ஜீன்சும், பாவாடைகளும் முக்கிய உற்பத்திகளாக இடம் பெற்றன. ஏற்றுமதியிலேற்பட்ட இந்த திடீர் பாய்ச்சலையடுத்து அபிவிருத்தியடைந்த இறக்குமதி நாடுகள் கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கின. ஐரோப்பிய பொ.ச. நாடுகள், ஐ. அமெரிக்கா, கனடா, நோர்வே, சுவீடன், பின்லாந்து போன்ற நாடுகள் இலங்கை ஆடை ஏற்றுமதிகள் மீது கோட்டா கட்டுப்பாடுகளை விதித்தது. இவ்விதம் கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களில் ஐ. அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாக்கப்பட்ட சேட்டுக்கள், காற்சட்டைகள், சட்டைகள், மேல் அங்கிகள், கம்பளிச் சட்டைகள், கையுறைகள் என்பனவும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாக்கப்பட்ட கட்டைக் காற்சட்டைகள், சேட்டுக்கள் போன்ற பொருட்களும் அடங்கும்.

1980 இல் இலங்கையில் இருந்து சென்ற பட்டாடை ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதியில்

69.5 சதவீதத்தை சேட்டுக்கள், டீசேர்ட்டுக்கள், சட்டைகள், ஜீன்ஸ் காற்சட்டைகள் கம்பளிச் சட்டைகள் என்பன பெற்றன. 1985 இல் இவை மொத்தப் பெறுமதியின் 58.7 சதவீதத்தையும் 1987 இல் 55.8 சதவீதத்தையும் கொண்டிருந்தன. இச் சமயத்தில் நாளுவித தயாரிப்பு ஏற்றுமதிகள் 1985 இல் 6.3 சதவீதத்திலிருந்து 1987இல் 8.4 சதவீதத்திற்கு அதிகரித்தன. எனினும், இத்தகைய நாளுவித பொருட்களின் ஏற்றுமதியானது இலங்கையில் இருந்து ஏற்றுமதி வெய்யப்படும் முக்கிய தயாரிப்புக்களை பாதிக்குமளவிற்கு அதிகரித்திருக்கவில்லை.

சமீப ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்படும் பின்னல் ஆடைகளில் வெளி ஆடைகளான காலுறைகள், நீண்ட காலுறைகள் போன்றவை அனுமதிப் பங்கு மட்டுப்படுத்தல்களுக்கு (விசேடமாக ஐக்கிய அமெரிக்காவினால் உட்படுத்தப்பட்டவை) அதிகளவில் உட்படுத்தப்பட்டன. மொத்த பின்னலாடை ஏற்றுமதிகளில் வெளிப்படையாடைகள் 1955 இல் 50.9 சதவீதமாக அமைந்து படிப்படியாக அதிகரித்து 1988 இல் 61 சதவீதமாக அமைந்து இந்த ஏற்றுமதியில் நான்கில் ஐந்து பங்கு, அனுமதிப் பங்கு ஏற்புடைத்தான ஐ. அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கையுறைகளின் ஏற்றுமதியும் முக்கியத்துவமடைந்துள்ள போதிலும் ஐ. அமெரிக்காவுக்கான இதன் ஏற்றுமதி குறைவாகவுள்ளது. பின்னலாடைகளில் உள்ளாடைகளும் முக்கியம் பெற்று 1986 இல் இதன் பங்கு குறிப்பிட்டளவிற்கு அதிகரித்தது.

நெசவாடைகளின் ஏற்றுமதியில் ஆண்களின், சிறுவர்களின் வெளியாடைகளும் பெண்கள் சிறுமிகள், சிறார்களின் வெளியாடைகளும் பெருமளவில் அடங்கின. இதில் நெசவாடைகளின் பிரிவில் 50 சதவீதத்தை பெண்கள், சிறுமிகள், சிறார்களின் வெளியாடை பெற்றது. இவையும் ஏனைய ஆண்களின் வெளி ஆடைகளும் வேறு உள்ளாடைகள், கையுறைகள், காலுறைகள் போன்றவையும் இணைந்து சமீபத்திய ஆண்டுகளின் நெசவு ஆடை ஏற்றுமதியின் 80 சதவீதத்தைக் கொண்டிருந்தன. 1987 இல் இது 86.6 சதவீதமாகவும் 1988 இல் 85.7 சதவீதமா

1970 களின் நடுப்பகுதி முதல் இலங்கையின் ஆடையுற்பத்திகள் 25 நாடுகளில் சந்தைகளை பெற்றுள்ளன. இவற்றுள் முக்கியமானவை ஐ. அமெரிக்காவும் மேற்கு ஜேர்மனியுமாகும். ஐ. பொ. ச. நாடுகளில் ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், டென்மார்க், இத்தாலி, அயர்லாந்து என்பனவும் சந்தைகளாக உள்ளன. இலங்கையின் ஆடையுற்பத்திகளின் சந்தைகளை அவதானிக்கின் ஐக்கிய அமெரிக்கா முக்கிய இடம் பெறுகின்றது. 1986 இல் ஆடையுற்பத்தி ஏற்றுமதியின் மொத்தப் பெறுமதி ஏறக்குறைய 900 கோடி ரூபாவாக இருந்தபோது இதில் 70 சதவீதம் அமெரிக்காவுக்கான ஏற்றுமதியாக இருந்தது. இதையடுத்து 21 சதவீதம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றது. இவ்விதம் ஒரே சந்தையில் கூடியளவுக்கு தங்கியிருக்கும் நிலை 1970 களிலிருந்து உருவாகி வந்த ஒரு நிகழ்வாகும். 1987, 1988 இல் ஐக்கிய அமெரிக்காவிற்கான ஏற்றுமதிகளில் சிறிய வீழ்ச்சியும் ஐ. பொ. ச. நாடுகளுக்கான ஏற்றுமதியில் அதிகரிப்புமேற்பட்டது. இவ்விரு ஆண்டுகளிலும் அமெரிக்கா பெறுமதியளவில் 58 சதவீதத்தையும், அளவு நியதியில் 62 சதவீதத்தையும் பெற்ற வேளையில் ஐ. பொ. ச. நாடுகள் பெறுமதியில் 32 சதவீதத்தையும் அளவு நியதியில் 27 சதவீதத்தையும் பெற்றன.

**ஒரே சந்தையில் தொடர்ந்தும் தங்கியிருப்பது நீண்ட கால ரீதியில் மோசமான விளைவுகளை எடுத்துவரக்கூடியதாகும். எனவே இலங்கையின் தைத்த ஆடைகளுக்கான ஏற்றுமதிச் சந்தைகளை பரவலாக்கிக் கொள்ள அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படல் வேண்டும்.**

## 1988 இல் இலங்கை ஆடையுற்பத்திகளின் ஏற்றுமதி

1988 ஆம் ஆண்டில் இலங்கை ஆடையுற்பத்தி ஏற்றுமதி, அவ்வாண்டின் இறுதிப் பகுதியிலேற்பட்ட குழப்ப நிலைமைகள் காரணமாக பின்னடைவுற்றது. புடவை வகை, ஆடையுற்பத்தி ஏற்றுமதிகள் 1987இன் மொத்த ஏற்றுமதிகளில் 31 சதவீதமாகவும் இருந்து 1988 இல் 30 சதவீதமாக வீழ்ச்சியடைந்தன. இத்தகைய வீழ்ச்சிப் போக்கு காணப்பட்ட போதிலும் இலங்கையின் பெரும் தனி ஏற்றுமதிப் பொருளாக தொடர்ந்தும் புடவைகளும், ஆடைகளும் காணப்பட்டன. பெருந்தோட்டப் பயிர்களாக தேயிலை, இறப்பர், தெங்கு மூன்றும் இணைந்து 1988 இன் மொத்த ஏற்றுமதிகளில் 37 சதவீதத்தையே பெற்றன.

1988 இல் ஆடையுற்பத்திகளின் ஏற்றுமதி அதியுயர் எண்ணிக்கையான 18.8 கோடி துண்டுகளைக் கொண்டிருந்தமையை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. ரூபா அளவுகளில் ஏற்றுமதி வரவால் அதி உயர் தொகையான 1361 கோடி ரூபா கிட்டியது. 1988 இல் அளவிலும், ஏற்றுமதியிலும் முன்னை ஆண்டிலும் பார்க்க வீழ்ச்சியேற்பட்டிருந்தது. 1986, 1987 ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி (அளவில்) வருடாந்தம் 10 சதமாகக் காணப்பட்டது. 1985ஆம் ஆண்டு அசாதாரணமாகக் குறைவான ஆண்டாகக் காணப்பட்ட போதிலும் 1983 இல் 27 சதவீத வளர்ச்சியும், 1984 இல் 79 சதவீத வளர்ச்சியும் பதிவாகி 1981, 1982 இல் வருடாந்தம் சராசரி 13 சதவீத வளர்ச்சி பதிவாகியது. எவ்வாறெனினும், மிக உயர் வளர்ச்சி 1979 இல் முன்னைய ஆண்டின் 75 சதவீதத்திலிருந்து 169 சதவீதமாக அதிகரித்துப் பதிவாகியது. இத்தகைய வளர்ச்சி வீதங்களுடன்


33796

ஒப்பிடுகையில் 1988 இன் வளர்ச்சி 1 சதவீதத்திற்கு குறைவாகவிருந்தது.

பெறுமதி நியதிகளிலும் 1978, 1979 இல் வளர்ச்சி உச்ச நிலையை அடைந்து முறையே (827 சதவீதம், 141 சதவீதம்) அடுத்து வந்த ஐந்து ஆண்டுகளில் வருடாந்த வளர்ச்சி சராசரி 45 சதவீதமாக இருந்தது. 1985 இல் மந்தநிலையேற்பட்டு 5 சத வளர்ச்சி மட்டுமே ஏற்பட்டது. 1986 இல் மீண்டும் 20 சதவீத வளர்ச்சியுடன் வருவாய் அதிகரித்து 1987 இல் 34 சதவீத வளர்ச்சியேற்பட்டது. ஆயினும், 1988 இல் வளர்ச்சி 10 சதவீதமாக மட்டுமே காணப்பட்டது. (வீழ்ச்சியடையும் ரூபா பெறுமதியைக் கருதுவதாயின் வளர்ச்சிமிகக் குறைவாக இருந்திருக்கும்). உள்நாட்டுக் குழப்ப நிலைகளால் ஏற்பட்ட நிச்சயமற்ற சூழ்நிலையில் 1988 இல் பொதுவாக கைத்தொழில் வளர்ச்சி மந்த நிலையிலிருந்தது. கடந்த ஆண்டில் ஏற்பட்ட கைத்தொழில் உற்பத்தியின் குறைந்த வளர்ச்சி வீதத்திற்கு மின் வழங்கலில் ஏற்பட்ட தடை, வேலைத் தலங்களில் வருகை குறைவு, குறிப்பிட்ட பிரதேசங்களில் விநியோக வேலைகளில் ஏற்பட்ட தடைகள் என்பனவே' முக்கிய காரணிகளாகும். இதன் ஒரு விளைவாக கைத்தொழில் உற்பத்தியின் பெறுமதி 1987 இன் 8 சதவீதத்துடனும் 1986 இன் 12 சதவீதத்துடனும், 1988 இல் 6 சதவீதமாக ஒப்பிடுகையில் காணப்பட்டது.

ஆண்டின் இறுதி மாதங்களில் ஏற்பட்ட போக்குவரத்து வங்கித் தொழிற்பாடு தடங்கல்கள், தொழிற்சாலை வேலைத் தடைகள், வழங்கல்களை மேற்கொள்ள முடியாமை என்பன காரணமாக அனைத்து வர்த்தக நடவடிக்கைகளிலும் பாதிப்பேற்பட்டது. துறைமுகச் சரக்குகளை நேரகாலத்தோடு இறக்க . முடியாதுபோனமை காரணமாக சில ஆடை உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திகளை வானூர்தி மூலம் அனுப்ப நேரிட்டு மேலதிக செலவுகளை செய்ய வேண்டியிருந்தது.

ஏற்றுமதியாளருககு தங்கள் வழங்கல்களை நிறைவேற்ற முடியுமா என்ற நிச்சயமற்ற நிலையேற்பட்டதுடன் அநேக சந்தர்ப்பங்களில் தங்கள் சந்தைகளை நிலையாக வைத்திருக்க வேண்டியதன் காரணமாக அதிக செலவுகளையும் ஏற்கவேண்டியிருந்தது. பா. கொ. பொ. ஆ. குழுவிலும் அதற்கு வெளியிலுமான மொத்த தொழிற்சாலை ஆடை ஏற்றுமதிகள் ஏறக்குறைய 20 கோடி துண்டுகளாக காணப்பட்டன. உயர் அளவு ஏற்றுமதிகள் காணப்பட்டன. உயர் அளவு ஏற்றுமதிகள் காணப்பட்ட போதிலும், அமைதியற்ற சூழ்நிலை காரணமாக வழங்கப்பட்ட கட்டளைகளை நேரகாலத்தோடு நிறைவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் சந்தை வாய்ப்புகளை இழக்கும் சாத்தியங்களுமேற்பட்டன. உற்பத்திச் செலவுகள் வழமைக்கு மாறாக அதிகரித்தன. முக்கியமாக மேலதிக வானூர்தி செலவுகள், இழந்த வேலை நேரங்களை ஈடு செய்வதற்கான மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு போன்றவை இதற்கு காரணமாயமைந்தன. இச் சந்தர்ப்பங்களில் அதிகாரிகள் ஏற்றுமதியாளருக்கு அனுமதிப் பங்கு சிராக்கங்கள், வங்கிக் கடன்கள் மீது வட்டி இடை நிறுத்தம், மீள் கொடுப்பனவு இடை நிறுத்தம் போன்ற உதவிகளை நல்கினர்.

1988 இல் உற்பத்தியில் அதிகரிப்பை ஏற்படுத்திய சில கைத்தொழில் துணைத் துறைகளில் அடிப்படை உலோக உற்பத்திகள் (21 வீதம்) புடவை வகைகள், ஆடை வகைகள், தோலுற்பத்திகள் (12 சதவீதம்) என்பன அடங்கும். மத்திய வங்கி அறிக்கையின்படி தடையற்ற வர்த்தக வலயத்தினுள்ளும் வெளியேயும் மேற்கொள்ளப்பட்ட தைத்த ஆடைகளின் தொடர்ச்சியான விரிவு காரணமாகவே புடவை வகை ஆடையுற்பத்தி வகை, தோலுற்பத்தி துறைகளின் பெருமளவு முன்னேற்றத்துக்குட் பொறுப்பாகவிருந்தன.

புடவை வகையிலும் ஆடை வகையிலும் உயர் வெளியீட்டு மட்டம் காணப்பட்ட போதிலும் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத் துறையின் முன்னேற்றம் 1988 இல் அனுகூலமற்றதாகவே அமைந்தது. ஏற்றுமதியின் பெறுமதி அதிகரிப்பு எஸ். டி. ஆர். நியதிகளில் 1987 இன் 4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2 சதவீத அதிகரிப்பையே காட்டியது. ஏற்றுமதி வருமானமிலான இத்தகைய குறைவான அதிகரிப்பிற்கு முக்கிய காரணம் புடவை வகைகள் பெற்றோலிய உற்பத்திகள், தெங்கு உற்பத்திகள் என்பவற்றின் வருவாயிலேற்பட்ட வீழ்ச்சியாகும்.

தற்போதுள்ள நிலையில் சில முன்னணிப் பிரச்சினைகளை பார்க்க வேண்டியுள்ளது. முதலாவதாக, ஒவ்வொரு பல்நார் ஒப்பந்தத்தை (ப. நா. ஒ.) தொடர்ந்து மேற்கொள்ளப்படும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் அதிகரித்த பாதிப்புடன் இலங்கையின் உற்பத்தியானது பாரம்பரிய ஆடைகளான சேர்ட்டுகள், காற்சட்டைகள், மேற் சட்டைகள், ஜீன்ஸ் போன்றவையில் ஈடுபாடு காட்டிய வேளையில் கொள்வனவாளர்கள் அமெரிக்கா, கனடா, ஐ. பொ. ச. நாடுகள், ஸ்கான்டினேவியன் நாடுகள் போன்ற பாரம்பரிய சந்தைகளில் பெருமளவு அக்கறை காட்டினர்.

சந்தைகளில் போட்டிகள் அதிகரித்து கட்டுப்பாட்டு தடைகள் அதிகரித்து வந்தபோதிலும், உள்ளூர் முதலீட்டு ஆலோசனைக் குழுவினாலும் வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழுவினாலும் புதிய உற்பத்திப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட அதிகரித்த எண்ணிக்கையான அங்கீகாரங்கள் கவனத்துக்குரிய மற்றுமொரு விடய

மாகும். 1987 இல் ஆடையுற்பத்திக்காக ஏற்றுமதி பதிவு செய்து கொண்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை க. ஏ. ஊ. வலயத்திற்குள் 39 தொழிற்சாலைகளாலும், 297 தொழிற்சாலைகள் வெளியிலுமாக இருந்தன. 1988 இல் மேலும் 60 தொழிற்சாலைகள் அங்கீகரிக்கப்பட்டு மொத்தத் தொகை 400 ஆக மாறியது. ஏற்றுமதிக்காக ஆடைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையின் மொத்தத்தில் க. ஏ. ஊ. வலயத்தின் 10 சதவீதமாக மட்டுமே இருந்த போதிலும் அவர்களின் ஏற்றுமதி பங்கு 1987 இல் ஏற்றுமதி மொத்த அளவில் 45 சதவீதமாக இருந்தது. மொத்த ஏற்றுமதியிலிருந்து நாடுபெறும் மிகைகளின் அளவு மற்றுமொரு பிரச்சினை விடயமாகும். ஏற்றுமதிகளின் உயர் பெறுமதி மட்டும் நாட்டிற்கான அனுகூலங்களை சுட்டிக்காட்டுவதாகாது. இந்த கைத்தொழிலை வளர்ப்பதன் பொருட்டு உயர் செலவிலான உள்ளமைப்பு வசதிகள், குறிப்பாக க. ஏ. ஊ. வலயத்தில் அமைக்கப்பட்டமையால் சந்தர்ப்ப செலவுகளும், இத்தகைய கனமான முதலீட்டின் பெறுபேறுகளும் கணிசமான அளவு பரிமாணத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும், இத்துறையின் ஊக்குவிப்பிற்கென வேறனதொரு அமைச்சு இருந்து வருவதுடன், புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவகம், ஏற்றுமதி அபிவிருத்திசபையின் விசேட பிரிவுகள், வங்கிகள் போன்ற பல்வேறு நிறுவனங்களும் இத்துறையின் முன்னேற்றத்திற்கு உதவி வருகின்றன, இவற்றுடன் சந்தர்ப்ப செலவுகளும், மாற்றுச் செலவுகளும் கொண்ட கட்டடம், எந்திரங்கள், வேறு உள்ளமைப்பு வசதி போன்றவை ஈடுபடுத்தப்பட்டதும், காலப்போக்கில் இத்தொழிற்துறையின் மிகையினால் மேவப்பட வேண்டியதுமான முதலீடும் அதிகளவில் இருந்தது. இதுவரையில் பொருளாதாரத்திற்கான உதவுதொகை பேரியளவு மேவப்பட்டதாகத் தெரியவில்லை. ''நார்களின்'' பெருமளவு உள்ளிடுகையின் உயர் விகிதாசாரம் இன்னமும் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றது. 1987 இல் க. ஏ. ஊ. வலயத்திற்கு வெளியேயுள்ள இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதிக்கான ஆடை உற்பத்திக்கு மட்டும் 213.4 மில்லியன் சதுர மீற்றர் நெசவு துணிவகைகளையும் 36.9 மில்லியன் சதுரமீற்றர் பின்னல் துணிவகைகளையும் 575 கோடி செலவில் இறக்குமதி செய்தனர். இலங்கையில் பெருமளவு புடவை வகைகளை உற்பத்தி செய்யும் ஒன்றிணைந்த புடவை நெசவாலைகள் பல இருந்து வருகின்றன. சமீப காலத்தில் இத்தொழிற்சாலைகள் உயர்செலவில் ஓரளவு நவீனமயப்படுத்தப்பட்டன. ஆயினும் ஏற்றுமதி சார்ந்த ஆடைத் தொழிலுக்கான அவற்றின் பங்களிப்பு அதிகளவில் இல்லை.

மேலும், ஆடைக் கைத்தொழில், அதன் ஏற்றுமதி ஆடைகளுக்கென பெருமளவு துணைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றது. இதுதொடர்பிலான உள்ளூர் பயன்கள் மிகக் குறைந்தவையே என்பதை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. ஏற்றுமதிக்கென ஆடைகளையுற்பத்தி செய்யும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் பெறுமதி சேர்க்கப்பட்டவிலை மிகக் குறைவானவற்றுள் ஒன்றாகவுள்ளது. 1987 இற்கான உலகவங்கியின் உலக அபிவிருத்தி அறிக்கையில் இலங்கையில் புடவைவகை, ஆடைத்துறையில் 1980 இன் விலைகளில் சேர்க்கப்பட்ட பெறுமதி 1980இல் 8 சதவீதமாகவும், 1984 இல் 15 சதவீதமாகவும் இருந்ததெனக் கூறப்படுகின்றது. 1984 இன் இலக்கங்களைப் பார்க்கையில் இலங்கை அபிவிருத்தி நாடுகள் பலவற்றிலும் குறைவாக இருந்தமை தெளிவாகின்றது. ஒப்பீட்டு இலக்கங்களில் உதாரணங்களாவன - எதியோப்பியா 28 சதவீதம், பங்களாதேஷ் 39 சதவீதம், மடகஸ்கார் 42 சதவீதம், இந்தியா 26 சதவீதம், தன்சானியா 26 சதவீதம், எகிப்து 29 சதவீதம், சிம்பாப்வே 19 சதவீதம், கொரிய குடியரசு 17 சதவீதமாகும். உற்பத்தியின் தரத்தினையும், அளவினையும் உயர்த்துவது, தொழிற்துறையின் கட்டமைப்பில் மாற்றங்கள் கொண்டு வருவது பற்றி பல்வேறுதுறைகள் பிரேரணைகளைக் கொண்டு வந்தன. இத்துறையில் சாத்தியங்கள் இருப்பினும், வர்த்தக போட்டிகள் வலுவானவையாகவும், தொழிலின் எதிர்காலம் நிச்சயமற்றதாகவும் இருந்தது.

இலங்கையின் ஏற்றுமதிகள் பெரும் ஏற்றுமதி நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிக அற்பமானவையாகவே இருக்கின்றன. உலகளாவிய வர்த்தகத்தில் இலங்கை ஒரு பாதிப்பினை ஏற்படுத்த முடியாதிருந்தது. உலக ஏற்றுமதிகளில் இந்நாட்டின் பங்கு, அது எத்தனை சிறியதாக இருப்பினும், அதிகரிக்கும் போக்கினையே தொடர்ந்தும் காட்டி வந்தது. உதாரணமாக, 1980 இல் இலங்கை ஆடை ஏற்றுமதிகள் உலக ஏற்றுமதிகளில் 0.3 பங்கினையே பெற்றிருந்தன. இது 1983 இல் 0.5 சதவீதமாக அதிகரித்தது. 1984 - 1985 இல் 0.6 சதவீதத்திற்கு சற்று கூடுதலாக அதிகரித்தது. 1986 இல் இப்பங்கு உலக ஏற்றுமதியில் 0.7 ஆக மேலும் அதிகரித்தது.

இனிவரும் வருடங்களிலும் இந்த அதிகரிப்பு போக்கு தொடர்ந்தும் நிலவுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. தொடர்ந்து விரிவடைந்து வரும் உலகச் சந்தை அமைப்பில் இலங்கை இதுவரை முயன்று பெற்றிருக்கும் ஸ்தானத்தைப் பேணிக் கொள்ளும் அதே வேளையில், இச்சந்தைகளில் மேலும் ஊடுருவி அதிக பங்கினைப் பெற்றுக்கொள்வதற்கு நன்கு திட்டமிட்ட முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் அவசியம்.

# ஏற்றுமதியாளர்களின் கருத்துக்கள்

இலங்கை ஆடை ஏற்றுமதியாளர் சங்க சம்மேளனத்தின் தலைவரும், இலங்கை ஏற்றுமதியாளர் சங்க சம்மேளனத்தின் உப தலைவருமான திரு. லின் பெர்னாண்டோ இலங்கையின் தைத்த ஆடைகளின் உள்ளூர் உற்பத்தி நிலை மற்றும் ஏற்றுமதி பற்றி பொருளியல் நோக்குடன்? கலந்துரையாடினார். அதிலிருந்து சில தெரிவு செய்யப்பட்ட பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

*1991ஆம் ஆண்டளவில் பல்நார் (MFA) ஒப்பந்தம் முடிவடையவுள்ளது. இந்நிலையில் ஐ. அமெரிக்கா, தனது இறக்குமதியாளர்கள் தம் வழங்குநரைத் தீர்மானிக்கும் வகையில் உலகளாவிய அனுமதிப் பங்குகளை வழங்க விரும்புவதுடன், முக்கிய ஆசிய ஏற்றுமதியாளர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உலக ஆடை ஏற்றுமதித்துறையில் தங்கள் முக்கியத்துவத்தையும் அதிகரிக்க விரும்புவர். இத்தகையதொரு சூழ்நிலையில் போட்டியிடுவதற்கு இலங்கை எந்த அளவு தயார் நிலையில் உள்ளது.*

1991இலும் அதன் பின்னரும் எழும் சவால்களை எதிர்கொள்வதற்காக கடந்த சில ஆண்டுகளாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் எங்கள் சங்கங்களும் இலங்கை ஆடை ஏற்றுமதிகளை முடுக்கி விடுவதற்காக பல நடவடிக்கைகளை மேற்கொள்ள முயன்று வருகின்றன. இந்த சவால்களை எதிர்நோக்குவதன் பொருட்டு இக் கைத்தொழிலை மீள ஒழுங்கமைக்கும் தேவையினையே நாங்கள் கோரி வருகின்றோம். தற்போதைய பல்நார் உடன்படிக்கையிலிருந்து விலகிக் கொள்ளுமாறு கூடிய நெருக்குதல் ஐ. அமெரிக்காவில் ஏற்பட்டிருப்பதனை நீங்கள் அறிந்திருக்கலாம். ப. நா. உடன்படிக்கை மீள் இணக்கம் காணப்படின் அல்லது 1991இல் புதிய உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படின் அது தற்போதுள்ளதிலும் பார்க்க உருவத்திலும் கட்டமைப்பிலும் முற்றிலும் வேறுபட்டதாகவே இருக்கும். உதாரணமாக, இறக்குமதியாளர்கள் தாம் எந்த நாட்டிலிருந்து கொள்வனவு செய்ய விரும்புகின்றனர் என்ற விடயம் தொடர்பாக அவர்களுக்கு கூடிய அதிகாரம் கிடைக்கலாம். மேலும் ஐ. அமெரிக்காவில், அந்நாட்டிற்குள்ளேயே அனுமதிப் பங்குகளை ஏலம் விடுமாறான கோரிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலாபகரமான ஊழியம் என்ற அனுகூலத்தையும் நாம் ஏற்கனவே இழந்துவிட்டோம். எங்கள் சொந்த போட்டி ஆற்றலைக் கட்டியெழுப்ப நாம் முயலுவதே செய்யக்கூடிய ஒரே காரியமாகும். இன்னமும் எங்களிடம் முதலீட்டு தொழில் முயற்சிகளை மேற்கொள்பவர்கள் இருக்கின்றனர். எங்கள் கைத்தொழிலை சீராக்குவதற்கான வழிவகைகள் இருக்கின்றன. எங்கள் போட்டியாளருடன் ஒப்பிடுகையில் இப்போது எங்களின் முக்கிய குறைபாடு எங்கள் உழைப்பு ஒருபுறம் மலிவாக இருப்பினும் உற்பத்தித் திறன் குறைந்ததாக இருப்பதாகும். இதற்கான ஒரு காரணம் நவீன தொழில்நுட்பங்களை நாம் அதிகளவில் பயன்படுத்தாமையேயாகும். துணிகளை வெட்டும் அறைகளில் பெருமளவு விரயங்கள் ஏற்படுகின்றன. ஏனையநாடுகள் அநேகவற்றில் கம்பியூட்டர் துணையுடனான வடிவ அமைப்பு முறைகள் நிறுவப்பட்டுள்ளன. இத்தகைய ஒரு தொழிற்சாலை மட்டுமே இங்குள்ளது. நாங்கள் ஒரு கம்பனியென்ற முறையில் இக்கம்பியூட்டர் ஒன்றினைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றோம். ஆனால் இது மிகச் செலவான விடயமாகவுள்ளது. நாட்டு நிலைமைகள் சீரற்று, எந்நேரமும் தொழிற்சாலைகள் மூடநேரிடலாமென்ற நிச்சயமற்ற நிலையில் எந்திரங்களிலும், உபகரணங்களிலும் பணத்தை முதலீடு செய்ய தைரியம் வருவதில்லை. ஆயினும், 1991இன் பின்னரும் இத்துறையில் நிலைத்திருப்பதற்கு நாங்கள் புதிய எந்திரங்களை நிறுவவேண்டுமென்பதுடன் இப்போது இத்துறை இயங்கி வரும் விதிகளும், ஒழுங்கு விதிகளும் சந்தைத் தேவைகளுக்கு இணக்கமான வகைகளில் மாற்றப்படல் வேண்டும்.

தற்போது எங்கள்மூலப் பொருட்களில் அநேகமானவை இறக்குமதி செய்யப்படுவதுடன் இறக்குமதி செய்வதில் பெருங் காலதாமதமுமேற்படுகின்றது. உத்தரவுப் பத்திரங்கள் பெறுதல், நாணயக் கடிதங்கள் பெறுதல், தூரகிழக்கிலிருந்து கப்பல்கள் வருதலென்பன ஏறக்குறைய ஆறு மாதங்களுக்கு இழுபடுகின்றன. இதற்கிடையில் வளர்ந்த நாடுகளில் மாதிரிகள், நாகரீகங்கள், நிறங்கள் போன்றவை அடிக்கடி புதிய புதிய மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றன.

*அத்தகையதொரு நிலையில் போட்டியிடுதல் இலங்கைக்கு கடினமாக அமையுமா?*

இதற்காக இப்பொழுதே தயார் செய்யாவிடில் கடினமாக அமையும். எங்களுக்கு இன்னமும் மூன்றுண்டுகளுள்ளன. இப்போதுள்ள முறைமையை மாற்றி, சவால்களை எதிர்கொள்ளும் விதத்தில் எங்களது தொழிலின் கட்டமைப்பினையும் மாற்றியமைக்கின் இது சாத்தியமாகுமென நம்புகின்றேன்.

*இது வரையில் இந்த சவால்களை எதிர்கொள்வதற்கு உங்கள் சங்கத்திலிருந்து அல்லது அதிகாரிகள் மட்டத்தில் எத்தகைய திடமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?*

சங்கத்தைப் பொறுத்தவரையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளான சுங்க இலாகா, புடவைக் கைத்தொழில் அமைச்சு போன்றவற்றுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய மாற்றங்களுடனும், புதிய அதிகாரிகள் பதவி வகிப்புடனும் மாற்றங்களை ஏற்படுத்துவதில் குறிப்பாக இத்தகைய மாற்றங்கள் எதற்காகப் பிரேரிக்கப்படு

கின்றன என்ற நிச்சயமற்றதன்மையிலும் நிலைமை சற்று சிக்கலடைகிறது. இதேசமயம் புடவைக் கைத்தொழில், கிராமிய கைத்தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரிடமிருந்து நல்ல ஒத்துழைப்பு கிடைத்துள்ளது. நடைமுறைகளை இலகுபடுத்துதல் இத்தொழிற்துறையை பெருமளவு ஊக்குவிக்குமென்பது இவரது கருத்தாகும்.

ஆடை ஏற்றுமதிக் கைத்தொழிலுக்கு உங்கள் சங்கம் எந்த வகையில் உதவி செய்கின்றது?

எங்கள் சங்கம் ஏற்றுமதியாளருக்கு குறிப்பிட்ட விடயங்களில் உதவுவதுடன் இத்தொழிற்துறையின் ஒட்டு மொத்த நலனுக்கும் அதன் நீண்டகால வளர்ச்சிக்கும் உதவுகின்றது. புடவைக் கைத்தொழில் அமைச்சுடனும் வர்த்தக கப்பல் போக்குவரத்து அமைச்சுடனும் ஏனைய அதிகாரி நிறுவனங்களுடனும் எங்கள் சங்கம் தொடர்பு கொண்டுள்ளது. சுங்கத் தீர்ப்பு பண்டசாலைத் திட்டத்தின் நடைமுறைகளைத் தயாரிப்பதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் சுங்க இலாகாவுடன் சங்கம் மிக நெருக்கமாக கடமையாற்றியுள்ளது. இத்திட்டத்தின் சுமுக செயற்பாட்டினை உறுதிப்படுத்துவதன் பொருட்டு சுங்க இலாகாவுடன் ஒழுங்கான பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஆலோசனைக் குழுவில் எங்கள் அங்கத்தவர்கள் பங்குபற்றி எங்கள் தொழிற்துறையின் எதிர்காலத்திற்கான நடுத்தர, நீண்டகால திட்டங்களைத் தயாரிப்பதில் தீவிர ஈடுபாடுகாட்டியுள்ளனர். எங்கள் அங்கத்தவரும், ஏற்றுமதி அபிவிருத்தி சபை அங்கத்தவரும் இணைந்து மேற்கொண்ட சந்தை ஆய்வுகள் காரணமாக வாங்குவோர் / விற்போர் கூட்டங்கள், வியாபாரக் கூட்டங்கள் கூட்டப்பட்டன.

உடுப்புக் கைத்தொழில் பயிற்சி நிறுவன சபையிலும் எங்கள் அங்கத்துவமுள்ளதால் இத்தொழிலின் பயிற்சி, தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு உதவ முடிகின்றது. மேலும் எங்கள் அங்கத்தவருக்கென விரிவானதொரு நன்னடத்தை சட்டக் கோவையும் இருப்பதால் அவர்களிடையே சமூகப் பொறுப்பும், நன்னடத்தையும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

சந்தைப்படுத்தலின் குறிப்பிட்ட அம்சங்களில் உங்கள் அங்கத்தவர்கள் ஏதேனும் முனைப்புகளை மேற்கொண்டதுண்டா?

சந்தைப்படுத்தற்துறையில் அனுமதிப்பங்குகளை சிறந்த முறையில் பயன்படுத்துதல், சந்தைக்கேற்ற ஆடைகளை சிறந்த தரங்களில் அமைத்தல், அதன் மூலமாக கிடைக்கக் கூடியதாகவுள்ள அனுமதிப்பங்குகளில் உயர் வருமானத்தைப் பெறுதலென்பனவற்றிலேயே முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. எங்கள் நிறுவனங்களில் பல பிரசித்தமான பெயர்களின் கீழ் உற்பத்திகளை மேற்கொண்டு அவற்றை அதிவிலையுயர்ந்த, உயர் சந்தைக்கு விற்பனை செய்வதிலிருந்து இதன் வெற்றியைக் காணக்கூடியதாகவுள்ளது. அனுமதிப்பங்கற்ற சந்தைகளையுடைய ஜப்பானிய, அவுஸ்திரேலியா நாடுகளுக்கு மேற்கொள்ளப்படும் ஒழுங்கான விஜயங்கள் (அவுஸ்திரேலியா இறக்குமதி அனுமதிப்பங்குடையது) வெற்றிகரமாக அமைந்திருப்பதுடன், இந்நாடுகளுக்கு தற்போது பல நிறுவனங்கள் ஏற்றுமதியும் செய்கின்றன. ஆகவே, சந்தைப்படுத்தல் அம்சத்தில், உற்பத்தித் திறனையும், அனுமதிப்பங்குகளையும் மட்டும் விற்று வந்த நிலைமாறி, ஆடைகளை விற்கும் நிலையேற்பட்டு வருகின்றதென நான் நம்புகின்றேன். உற்பத்திப் பிரிவுகளில் சிறப்புத் தேர்ச்சிக்கு ஆதரவளித்து, நிறுவனங்கள் நிபுணத்துவம் பெறுவதற்கு வசதியாக அனுமதிப்பங்குகளை இலகுவாக மாற்றுவதற்காக புடவைக் கைத்தொழில் அமைச்சுடன் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளோம். எங்கள் முக்கிய குறைபாடு உள்ளூரில் துணிகளும், துணைப்பொருட்களும் கிடைக்கப் பெறுமையும், அதன் விளைவாக சந்தைத் தேவைகளுக்கு துரிதமாக இயங்க முடியாமையுமாகும். புடவைக் கைத்தொழில் அமைச்சர், தொடர்புத் தேவைகளின் பின்னடைவுபற்றிய ஆய்வினை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளார். அத்துடன் எங்கள் சங்கமும் ஆப் பிரேரணைகளில் சில இவ்விதம் நடைமுறைப்படுத்தப்படலாமென்பதை எடுத்துக் கூறுவதற்கான சிபார்சுகளையும் மேற்கொண்டுள்ளது.

நவநாகரீக ஆடைச் சந்தையை அல்லது தரமான ஆடைச் சந்தையை வெற்றிகரமாக நாம் அடைவதற்கும் விலைகள் ரீதியில் போட்டியிடுவதற்கும் ஏதேனும் தடைகள் உள்ளனவா?

ஆம்; நிச்சயமாக எங்களால் நவநாகரீக ஆடைகளை உற்பத்தி செய்ய முடியுமென்பதுடன் எனது சொந்தக் கம்பனியில் இத்தகைய ஆடைகள் பலவற்றை உற்பத்தி செய்கின்றோம். ஜப்பானுக்கு வெற்றிகரமான ஏற்றுமதியை மேற்கொள்ளும் கம்பனியொன்று நிச்சயமாக நவநாகரீக ஆடைகளை உற்பத்தியாக்கி, வெற்றிகரமாக அவற்றை ஐரோப்பாவில் அல்லது ஐ. அமெரிக்காவில் விற்பனை செய்யலாம்.

நவநாகரீக ஆடைகளைப் பொறுத்தவரையில் அவகாச காலம் குறைவாக இருப்பது பெரும் தடையாகவுள்ளது. இந்த ஆடைகளை அல்லது வடிவங்களை ஆறு மாத காலத்திற்கு முன்னராகவே தயார் செய்ய முடியாது. வாங்குபவர்கள் இத்தகைய ஆடைகளுக்கான கட்டளைகளை மேற்கொண்டு இரண்டு மூன்று வாரங்களுக்குள் அவற்றை வழங்குமாறு வேண்டுகின்றனர். துரதிஷ்டவசமாக இவ்விதம் இங்கு செய்ய முடியாத நிலையுள்ளது.

பெரும் ஆசிய ஏற்றுமதி நாடுகளான ஹொங்கொங், தாய்வான், தென்கொரிய நாடுகள் இதற்கு பெருமளவு தயார் நிலையிலுள்ளன என எண்ணுகின்றேன்.

ஏனெனில் துணிகள் அவர்களிடம் இருப்பது ஓர் அனுகூலம். இலங்கையிலும் சுதந்திர வர்த்

தக வலயத்திற்குள் இருப்பவர்கள், வெளியிலிருப்பவர்களை விட அனுபவமுடையவர்களாகவுள்ளனர். ஏனெனில் அவர்கள் துணிகளை இறக்குமதி செய்து சேமிப்பில் வைத்திருந்து அதன் பின்னர் வாங்குநரின் குறிப்புகளுக்கேற்ப ஆடைகளை உற்பத்தி செய்ய முடிகின்றது. நாங்களும் குறைந்தளவில் இதையே செய்கின்றோம். அதாவது காரிக்கன் துணியை இறக்குமதி செய்து, சேமிப்பில் வைத்திருந்த வழக்கிலுள்ள பல்வேறு நிறங்களுக்குச் சாயமிடுகின்றோம். ஆயினும், ஒழுங்கு விதிகளுக்கேற்ப இவ்விதம் செய்தல் அனுமதிக்கப்படுவதில்லை. இது போன்ற சிறு விடயங்களை ஒழுங்கு செய்யின் அது நாகரீக ஆடைகளின் உற்பத்தியாளருக்கும், ஏற்றுமதியாளருக்கும் நிச்சயமாக நன்மை ஏற்படும்.

இத்தகைய பிரச்சினைகள் பலவற்றை தீர்த்து வைப்பதில் சுங்கத் தீர்ப்பு பண்டசாலைத் திட்டம் உதவுவதில்லையா?

நிச்சயமாக உதவுகின்றது. ஆயினும், அதே சமயத்தில் சுங்கத் தீர்ப்பு பண்டசாலைத் திட்டங்களைப் பயன்படுத்தி உள்ளூர் சந்தைக்குள் துணிகளை அனுப்புவதில் பலர் ஈடுபட்டுள்ளனரென்பதுடன், அரசாங்கத்திற்கு இது ஒரு பெரும் பிரச்சினையாகவுள்ளது.

கொள்வனவு மன்றங்கள் காரணியானது பெருமளவு எண்ணிக்கையான தொழிற்சாலைகளுக்கு ஏற்புடைத்தாகவுள்ளதா?

கொள்வனவு மன்றங்களின் கட்டுப்பாட்டிற்குள் முற்றிலுமாகவுள்ள பெரும்பாலான சிறிய நிறுவனங்களுக்கு இது ஏற்புடையதாகவுள்ளது.

ஆயினும், கொள்வனவு மன்றங்கள் சில வசதிகளை இவற்றிற்கு வழங்குகின்றனவா?

நிச்சயமாக சேவையளிக்கின்றன. ஆனால் அதே சமயம் நாங்கள் ஆடைகளை விற்காது அனுமதிப்பங்குகளையும், உற்பத்தித் திறனையும் விற்பனை செய்யும் தொழிற்துறையாக இருந்து வருகின்றோம். இத் தொழிற்சாலைகளில் பலவற்றிற்கு அவற்றின் கொள்வனவுகாரர் யாரெனத் தெரியாது. அவர்களை ஒரு போதும் சந்தித்ததுமில்லை. அவற்றின் தொடர்பு கொள்வனவு மன்றத்துடன் மட்டுமேயுள்ளது. இந்நிலை தவறானது.

அனுமதிப் பங்கினைப் பொறுத்தவரையில் அவை பற்றி பல்வேறு ஆலோசனைகள் இருந்து வருகின்றன. அனுமதிப்பங்குகளை ஏலம் விட வேண்டுமெனும் ஆலோசனைகூட சமீபத்தில் மேற்கொள்ளப்பட்டதாக அறிகின்றோம்.

அதிர்ஷ்டவசமாக ஜனாதிபதியவர்களே தலையிட்டு இதற்கொரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். உலக வங்கி அங்கத்தவர்கள் சிறிது காலத்திற்கு முன்னர் தான் இங்கு வந்து எங்கள் தொழிற்சாலைகள் முழுவதையும் ஆராய்ந்து ஆய்வொன்றினை மேற்கொண்டனர். அனுமதிப் பங்குகளை ஏலமிடுதல் இத்தொழிற்றுறையின் இறுதி முடிவாக அமையலாம்; ஏனெனில் எங்கள் நாட்டின் நிலை ஏனைய நாடுகளைப் போன்றதல்ல. அவ்விதத்தில் எந்தவொரு நாடுமே அனுமதிப் பங்குகளை ஏலம் விடுவதில்லையென்பதையும் ஏற்றுக் கொண்டனர். எங்களைப் பொறுத்தவரையில் இங்கு ஒழுங்கமைவாக்கப்பட்ட தொழிற்துறையொன்றுள்ளது. பிரசவ லீவு, ஊழியர் சகாயநிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவையுள்ளன. நாங்கள் பெறும் அனுமதிப்பங்குகளைப் பொறுத்து இவற்றைத் தள்ளி வைக்க முடியாது. நிறுவனமொன்றின் செயலாற்றலின் விளைவாகவே அனுமதிப்பங்கு முறையே தோன்றியது. இன்றும் அனுமதிப்பங்கற்ற விடயங்கள் உள்ள துறைகள் பல உள்ளன என்பதை மக்கள் அறிந்துள்ளதாகத் தெரியவில்லை. துரதிர்ஷ்டவசமாக அத்தகைய துறைகளை ஒருவரும் கவனிப்பதில்லை. ஏனைய கம்பனிகளும், நாங்களும் கூட முதலில் அனுமதிப்பங்கற்ற துறைகளைத் தேடி கொள்வனவுகாரருடன் தொடர்பு கொண்டு. அப்பொருட்களை விற்பனை செய்து ஆற்றலை விருத்தி செய்து அனுமதிப் பங்குகள் வந்தபோது அதற்கான செயற்றிறனைக் காட்டியிருந்தோம். இம் முறையில் தான் அனுமதிப் பங்குகள் பெறப்பட்டன எனினும் சிலர் இந்தப் பின்னணி எதுவுமின்றி கோட்டாக்களை பறித்துக் கொள்ள முயல்கின்றனர்.

மற்றுமொரு அடிப்படையான விடயம் உற்பத்தியை நாங்கள் திட்டமிட வேண்டுமென்பதாகும். எங்கள் சந்தைகள் பற்றிய நிச்சயமான நிலை எங்களுக்கில்லாவிடில் எங்கள் அட்டவணைகளை அது தலைகிழாக்கி விடும். அல்லாவிடினும், இப்போதுள்ள கொள்வனவுகாரருடனும் நாங்கள் செயலாற்றி வரும் அனுமதிப் பங்குகளை பெற்றுக் கொள்ளாவிடில் நடப்பது யாது? 1991ஆம் ஆண்டினையும் அதற்கு அப்பாலும் நாம் பார்ப்பதாயின் சிறப்புத் தேர்ச்சியின் அவசியம் புலனாகின்றது. நாம் ஆரம்பத்தில் கோட்டா அளவுகளைக் கட்டியெழுப்ப முயலும் போது எங்களால் இயன்றதெல்லாவற்றையும் செய்தோம். ஆனால் இப்போது ஐ. அமெரிக்க சந்தையைப் பொறுத்தவரையில் அனுமதியற்ற பங்குத் துறைகள் ஒன்றுமே இல்லை. ஆகவே அனுமதிப் பங்குகளைப் பரிமாறி குறிப்பிட்ட துறைகளில் நிறுவனங்களை நிபுணத்துவம் பெறச் செய்வதற்கு இது சிறந்த சமயமாகும்.

சுதந்திர வர்த்தக வலய ஏற்றுமதியாளருக்கும், வலயத்திற்கு வெளியிலுள்ளவர்களுக்குமிடையே அனுமதிப் பங்குகளை ஒதுக்கீடு செய்வதில் குறித்துரைக்கப்பட்ட அடிப்படை எதுவுமுண்டா?

இலங்கை தைத்த ஆடை ஏற்றுமதிகளுக்கு சுதந்திர வர்த்தக வலயம் நிச்சயமாக முக்கியதுறையொன்றாகும். இந்த வலயம் ஆரம்பிக்கப்பட்ட போது ஐக்கிய அமெரிக்க அனுமதிப் பங்குகள் எதுவுமிருக்கவில்லை. இலங்கைக்கென ஒதுக்கப்படும் அனுமதிப்பங்குகளில் 40 சதவீதம் இதற்கு வழங்கப்படுமென்ற தெளிவான தீர்மானம் இருந்தது. ஆயினும், வலயதிற்குள் உள்ள

30 உற்பத்தியாளர்கள், வலயத்திற்கு வெளியிலுள்ள உற்பத்தியாளர் பெறத்தவறும் வளர்ச்சிக் காரணியைப் பெற்றுள்ளனர். இதற்கான காரணம் வலயத்திற்கு வெளியேயும் இத்தொழிற்றுறையில் புதுமைகள் தேவைப்படுகின்றன என்பதாகும். தற்போதைய 6 சதவீத வளர்ச்சிக் காரணியை புதியவர்களுக்காக அல்லது ஏனைய மாகாணங்களில் இத்தொழில்களை மீள இடமமைத்தல் போன்ற கொள்கைப் பாவனைகளைதற்கேனும் அமைச்சு வழங்குவதற்கு நாங்கள் அனுமதித்துள்ளோம். சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து சு.வ. வலய வளர்ச்சிக் காரணியும் இந்நோக்கத்திற்காகக் கருத்திற்கெடுக்கப்படுமென எண்ணுகின்றேன்.

நீங்கள் முறையீடுகளை மேற்கொண்ட, தீர்க்கப்படவேண்டிய மற்றுமொரு பிரச்சினையுமுள்ளது. இது நிதி அமைச்சரினால் அவரது சமீபத்திய வரவு செலவுத் திட்ட உரையில் வெளியிடப்பட்டவாறு ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகள்மீது 3.06 சதவீத உத்தேச வரி விதித்தல் பற்றியதாகும், இந்தப் பிரேரணை இன்னமுள்ளதா?

இது மிகத் துரதிர்ஷ்டவசமான ஒரு நிலைமையென்பதுடன், அதன் பின்னர் இப் பிரேரணையில் பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. தற்போதுள்ள 3.06 சதவீத சரிசம வரியை, அங்கு விதிக்காது, இலங்கையில் விதிப்பதற்கான ஆலோசனையை ஐக்கிய அமெரிக்க அதிகாரிகளிடம் இலங்கை விடுத்தது. அதிர்ஷ்ட வசமாக இத் தொழிலுடன் தொடர்புகொண்ட சகலரையும் வர்த்தக கப்பற்துறை அமைச்சு கூட்டமொன்றிற்கு அழைத்தது. இந்த வரியை தடையற்ற வர்த்தக வலயத்தில் உள்ளவர்களுக்கு விஸ்தரிப்பதில் இலங்கை அரசாங்கத்திற்குள்ள கஷ்டங்களைப் பற்றியதான எனது கருத்துக்களை எடுத்துரைப்பதற்கானதொரு சந்தர்ப்பத்தை நான் இக் கூட்டத்தில் பெற்றேன். ஐக்கிய அமெரிக்காவில் விதிக்கப்படும் 3.06 சதவீத சரிசம வரியை எடுத்துக்கொள்ளின் அதில் 2.0 சதவீதம் சு. வ. வலயத்தில் உள்ளவர்களுக்கு வழங்கும் உதவியின் விளைவாகவுள்ளது. இந்த வரியை சிபார்சு செய்த விசாரணைக் குழுவின் கருத்துப்படி மிகுதி வரியானது வலயத்திற்கு வெளியிலுள்ளவர்களுக்கான உதவிமீதானதாகும். ஆகவே வல்ய ஏற்றுமதியாளருக்கே பெரும் மான்யம் வழங்கப்பட்டது. சு. வ. வலயத்திலுள்ள சகல தொழிற்சாலைகளும், இலங்கை அரசாங்கத்தினால் ஏதேனும் வரிகள் விதிக்கப்படுவதை, அபிவிருத்தி வரிகள் விதிக்கப்படுவதை தடுக்கும் விதத்தில் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவுடன் உடன்படிக்கையினை மேற்கொண்டுள்ளன. இலங்கை அரசாங்கம் அவர்கள்மீது வரி சுமத்துவதற்கான ஒரே வழி கடந்த காலப் பயனளிக்கும் சட்டவாக்கத்தைக் கொண்டு வருதலாகும். இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு மூலதனத்தைக் கவர விரும்பும் இன்றைய சூழ்நிலையில் இவ்விதம் செய்தல் முற்றிலும் சாத்தியமற்றதாகும். ஆகவே அரசாங்கம் எங்கள் கருத்தையேற்றுக்கொண்டதுடன், நாங்களும் மீளாய்விற்காக விடுத்த வேண்டுகோளை வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளோம். இத்தகைய சரிசம வரிவிதிப்பனவின் முக்கிய அம்சமாவது, இலங்கையில் அது விதிக்கப்பட்ட சமயத்தில் வேறும் பல நாடுகள் மீது 22 சதவீதம் வரையிலான அதுபோன்ற வரிகளும் விதிக்கப்பட்டமையாகும். பொலிவியா, இந்தோனேசியா, வெனிசுலா, தைவான் போன்ற நாடுகள் உயர் வரிவிதிப்பைப் பெற்றிருந்தன.

அவ்வாறாயின் இந்த வரிவிதிப்பனவு நீக்கப்படும் சாத்தியமுண்டு.

ஆம். ஏனெனில் இது நடைமுறைச் சாத்தியமற்றதாகவுள்ளது. தற்போதுள்ளது போன்று வலயத்திற்கு வெளியேயுள்ளவர்கள் மட்டும் அனுமதிப் பங்கு கட்டணமாக துண்டு ஒன்றிற்கு ஒரு ரூபா செலுத்த வேண்டுமென்ற விடயம் போன்று ஒரு துறைக்கு மட்டும் வரியை விதிக்க முடியாது.

புதிய சந்தைகள் பற்றிய நிலையாது? ஜப்பானிய, அவுஸ்திரேலிய சந்தைகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இருப்பதாகத் தெரிகின்றது. இந்த முனைப்புகளில் எந்தளவுக்கு வெற்றி கிட்டியிருக்கிறது.

அவுஸ்திரேலியாவிற்கும், ஜப்பானிற்குமான விஜயங்களில் நானும் பங்கு கொண்டேன். அவுஸ்திரேலியாவைப் பொறுத்தவரையில் சனத்தொகை குறைவாகவும் அனுமதிப் பங்குகள் அவுஸ்திரேலிய இறக்குமதியாளரிடம் இருப்பதாலும் அந்த சந்தையைப் பெறுவது ஓரளவு கடினமாக இருக்கலாம். இது ஒரு உலகளாவிய அனுமதிப்பங்கு. அத்துடன் இத்தகைய அனுமதிப்பங்கு முறை காரணமாக அனுமதிப் பங்கினையுடையவர் அதிகளவு பணம் சம்பாதிப்பதை அவுஸ்ரேலிய அரசாங்கம் அறிந்துள்ளது. ஆயினும், தீவிரசந்தைப்படுத்தல் காரணமாக இலங்கை ஏற்றுமதியாளர் இந்தச் சந்தைகளை ஊடுருவ முடிந்துள்ளது.

ஜப்பானிய சந்தைகளின் வேறுபாடாவது, ஐக்கிய அமெரிக்கா, அல்லது ஐரோப்பிய பொருளாதார சமூகம் போன்றன்றி நாம் விரும்பும் எந்த நாட்டிலிருந்தும் கொள்வனவை மேற்கொள்ளலாம் என்பதாகும். இதன் விளைவாக விலைகள் மிகப் போட்டிகரமானவையாகவும், தரம் அதி உயர்ந்ததாகவும்: உரிய நேர வழங்கலை மேற்கொள்ளப்படுவதாகவும் இருத்தல் வேண்டும். எனது சொந்தக் கம்பனி, ஜப்பானுக்கு மாதிரிகளை எடுத்துச் செல்வதில் முதலிரு தடவைகளும் அதிக பணம் செலவழித்ததுடன் மூன்றாவது விஜயத்தின் போதுதான் வெற்றியேற்பட்டது. சந்தைக்கும் கவனமான அக்கறை தேவைப்படுவதுடன் உடனடியாக ஈடுகொடுக்கும் முறை போன்றும் அவசியமாகின்றது.

# ஆடை தயாரிப்பு வர்க்கத்தின் உலகளாவிய போக்கு

தயாரித்த ஆடைகளின் ஏற்றுமதியாளர் என்ற முறையில் வளர்முக நாடுகளின் நிலை கடந்த தசாப்தத்தில் மிக வலுவுள்ளதாக வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை 1980 களின் போக்குகள் எடுத்துக் காட்டுவனவாக உள்ளன. 1970 இல் 560 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்த உலகளாவிய ஆடை ஏற்றுமதிகளின் பெறுமதி 1986 இல் 6180 கோடி அமெரிக்க டொலர்களாக வளர்ச்சி கண்டது. 1980 இல் 4040 கோடி அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்ட ஏற்றுமதிகள் 1986 க்கிடையில் 50 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளன. ஹொங்கொங், தென்கொரியா, சீனா, தாய்வான் ஆகிய நான்கு வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளும் 1980 - 86 காலப்பகுதியில் 59 சத வீத வளர்ச்சியைக் கண்ட வேளையில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் ஏற்றுமதி 43 சத வீத வளர்ச்சியை மட்டுமே அடைந்தது.

வளர்முக நாடுகளின் சகல வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளுடன் ஒப்பிடும்போது தயாரித்த ஆடைகளின் ஏற்றுமதிகளின் அதிகரித்த முக்கியத்துவம் தெளிவாகும். 1970, 1980, 1986 ஆகிய ஆண்டுகளில் உலகளாவிய ஆடை ஏற்றுமதிகள் சகல வணிக ஏற்றுமதிகளின் 1.7%, 2.0%, 2.9% ஆக அமைந்திருந்தன. உற்பத்திகளின் சகல ஏற்றுமதிகளிலும் இம் மூன்று ஆண்டுகளின் தயாரித்த ஆடை ஏற்றுமதி 2.9%, 3.7%, 4.3% ஆக அமைந்திருந்தன.

ஆடை. ஏற்றுமதிகளின் சார்பு நிலை தொடர்ச்சியாக மாற்றம் பெற்று வந்துள்ளமையைக் காணமுடிகின்றது. வளர்முக நாடுகளின் தயாரித்த ஆடை ஏற்றுமதிகள் 1970 இல் உலகளாவிய ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 25 சதவீதமாக இருந்தன. 1980 இல் இது 42 சதவீதத்தையும், 1985 இல் மேலும் அதிகரித்து 48 சதவீதத்தையும் அடைந்தது. எனினும், 1986 இல் இது 43.5 சதவீதமாக வீழ்ச்சியுற்றது.

1970 இல் உண்மை நியதிகளில் அபிவிருத்தி அடைந்த நாடுகளின ஏற்றுமதிகள் 390 கோடி அமெரிக்க டொலர்களாக மட்டுமே அமைந்திருந்தன. 1985இல் வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகள் 2260 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்தன. ஆனால், வளர்ச்சி பெற்ற நாடுகளின் ஏற்றுமதிகள் 1960 கோடி அமெரிக்க டொலர்களாக மட்டுமே அமைநதிருநதன.

## முன்னணி ஏற்றுமதியாளர்கள்

1980 களில் மேற்கு ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளும் நான்கு பெரிய கிழக்காசிய ஏற்றுமதியாளர்களும் மட்டுமே உலகச் சந்தைக்குத் தேவையான தயாரித்த ஆடைகளை வழங்குவனவாகக் காணப்பட்டன. ஆனால், 1980 களில் சந்தையின் பெரும் பகுதியை ஆசிய வழங்குநர்கள் பெற்றிருந்தனர். 1980 - 86 க்கு இடைப்பட்ட காலத்தில் மேற்கைரோப்பிய நாடுகள் தமது ஏற்றுமதிகளை 1820 கோடி அமெரிக்க டொலரிலிருந்து 2620 கோடி அமெரிக்க டொலராக அதிகரித்தன. அதேவேளையில் பிரதான ஆசிய வழங்குநர்களின் ஏற்றுமதிகள் 1980 இல் 1170 கோடி அமெரிக்க டொலரிலிருந்து 1986 இல் 1940 கோடி அமெரிக்க டொலராக, அதாவது 66 சதவீத வளர்ச்சியைக் கண்டன.

இந்த ஆறாண்டு காலப்பகுதியில் இந்த இரு தொகுதி ஏற்றுமதியாளர்களின் வர்த்தக மாதிரிகளில் முக்கிய வேறுபாடுகளைக் காணக்கூடியதாக இருந்தது. மேற்கைரோப்பாவைப் பொறுத்தவரை 80 சதவீதம் வரையிலான அவற்றின் உற்பத்தி அத்தொகுதி நாடுகளுக்கிடையிலேயே இடம்பெற்றது. ஆனால், ஆசிய நாடுகளைப் பொறுத்த வரை இது 3 சதவீதமாக மட்டுமே அமைந்திருந்தது. தென் அமெரிக்கச் சந்தையின் 10 சதவீதத்துக்குக் குறைவான அளவை மட்டுமே மேற்கைரோப்பிய நாடுகள் வழங்கி வந்த வேளையில் நான்கு பெரும் ஆசிய நாடுகள் இச் சந்தையின் ஏறத்தாழ 55 சத வீதத்தை வழங்கி வந்தன. மேற்கைரோப்பிய நாடுகளின் 25 சதவீதமான தேவைகளையும் பாரிய ஆசிய வழங்குநர்களே பூர்த்தி செய்து வந்தனர்.

ஐரோப்பிய ஏற்றுமதி நாடுகளில் மேற்கு ஜேர்மனியும், இத்தாலியுமே பிரதான வழங்குநர்களாக இருந்து வந்தன. 1983 முதல் மொத்த ஐரோப்பிய சந்தையில் 45 சதவீதத்துக்கும் சமமான ஏற்றுமதிகளை இந்திய நாடுகள் வழங்கின. தயாரித்த ஆடைகளின் ஏனைய முக்கிய ஏற்றுமதியாளர்களாக பெல்ஜியம், லக்சம்பேர்க், பிரான்ஸ், கிறீஸ், ஒல்லாந்து போத்துக்கல், ஐக்கிய இராச்சியம் என்பன திகழ்ந்தன. இவற்றில் துருக்கியைத் தவிர்ந்த ஏனைய நாடுகளின் ஏற்றுமதிகள் 1983 இன் பின்னர் தொடர்ச்சியாக வளர்ச்சி பெறலாயின.

ஆசிய நாடுகளில் ஒன்றான ஹொங்கொங் தயாரித்த ஆடைகளின் ஏற்றுமதிகளில் தனித்து முன்னணியில் நின்றது. 1980இல் 495 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்த இதன் தயாரித்த ஆடை ஏற்றுமதி 1986இல் 840 கோடி அமெரிக்க டொலராக வளர்ச்சி கண்டது. அதாவது ஆறாண்டு காலப்பகுதியில் இதன் ஏற்றுமதி இரட்டிப்பாகியது. இதன் ஏற்றுமதிகளில் 50 சதவீதம் அமெரிக்க சந்தைகளுக்கே சென்றன. அடுத்த பிரதான ஏற்றுமதி நாடான தென்

(23-ம் பக்கம் பார்க்க)

கொழும்பு தமிழ்ச் சங்கம்

## ப. கொ. பொ. ஆணைக்குழுவின் கருத்து

**இலங்கைச் சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர் சங்கத் தலைவர் அஜித் டயஸ் வலயத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலைகளின் நிலை மற்றும் அவற்றின் தொழில் செயற்பாடுகள் பற்றி 'பொருளியல் நோக்குடன்' உரையாடினார்.**

கட்டுநாயக்கா ஏற்றுமதி தயாரிப்பு வலயம் 10 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்றது. பெருமளவில் கைத்தொழில்களைக் கவருவதற்காக இதற்கு பல சலுகைகளும், வசதிகளும் வழங்கப்பட்டன. எனினும் அங்குள்ள கைத்தொழில்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றுக்கு மேற்பட்டனவும் ஏற்றுமதியில் 80 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவும் ஆடைகள் துறையில் அமைந்துள்ளன. இந்த வகை தொழிற்துறையில் ஈடுபாடு அதிகமாயிருப்பதன் காரணம் யாது?

ஆசிய பிராந்தியத்திலுள்ள சகல ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களும் பெரும்பாலும் ஆடையுற்பத்திகளுடனேயே ஆரம்பமாகின. இலங்கையின் விடயமும் அதே போன்றிருந்தது. ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களில் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு தொழில் செறிவுமிக்க கைத்தொழில்களை, நாடுகள் நாடியமையே இதற்கான அடிப்படை காரணமாகும். எவ்வாறெனினும், இன்று இலங்கையில் கட்டுநாயக்காவிலுள்ள 77 தொழில் முயற்சிகளில் 27 — 28 ஆடைத் தொழிற்சாலைகளாகவுள்ளன. சமீப காலங்களில் பா. கொ. பொ. ஆணைக்குழு ஆடைத் தொழிலுக்கு அதிகளவு ஆதரவினை வழங்காது பதிலாக உயர் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படும் முதலீட்டுத்துறைகளை ஊக்கவிக்க முயலுகின்றது. கடைசியாக ஆரம்பிக்கப்பட்ட சில திட்டங்கள் இலக்ட்ரோனிக்ஸ், மட்பாண்டம், இரப்பர் முகமூடிகள், கையுறைகள் போன்றவையாகும்.

1980இல் நிதி அமைச்சர் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் அறிவித்தவாறு, ஹொங்கொங், தென் கொரியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களின் முதலீட்டாளர் இலங்கையில் கொண்டுள்ள கவர்ச்சி இலங்கைக்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள அனுமதிப் பங்குகளைப் பெற்றுக் கொள்ளுதலாகும். இன்றுள்ள நிலை யாது?

இது முற்றிலும் தவறானது, ஏனெனில் வலயம் ஆரம்பிக்கப்பட்ட சமயத்தில் சில விடயங்களில் மட்டுமே அனுமதிப் பங்குகள் விதிக்கப்பட்டிருந்தனவென்பதுடன், அவையும் ஐரோப்பிய பொருளாதார சமூகத்திற்கென ஒதுக்கப்பட்டவையாகும். ஐ. அமெரிக்காவிற்கான அனுமதிப் பங்குகள், வலயத்தில் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தான் விதிக்கப்பட்டன. அத்துடன் வலயத்திற்கு உள்ளும் வெளியிலும் உள்ள கம்பனிகள் அனைத்தும் அவற்றின் செயலாற்றலைப் பொறுத்தே அனுமதிப் பங்குகளைப் பெற்றன.

இலங்கையின் பொருளாதாரத்திற்குப் பெரிதளவு உதவும் என்ற நம்பிக்கையுடன் இலங்கை அரசாங்கத்தினால் பரந்தளவு உள்ளக அமைப்பு வசதிகள் வழங்கப்பட்டன. இந்த நம்பிக்கை பயனளித்ததெனக் கூறமுடியுமா?

இதற்கான விடையைத் தருவதற்காக இந்த ஆண்டு பெப்ரவரியில் ''ஏசியன் வோல் ஸ்ட்ரீட் ஜர்னல்'' பத்திரிகையில் இது பற்றி கூறப்பட்டதை இங்கு வெளியிடுதல் பொருத்தமெனக் கருதுகிறேன். ''உலகின் எந்தவொரு நாட்டில் 50 கோடி ரூபா (15 இலட்சம் டொலர்) முதலீடு செய்து 10 வருட காலத்தில் 750 கோடி ரூபாபெறுபேற்றினை (அதாவது பதின்மூன்று மடங்கு அதிகரிப்பினைப்) பெற முடிகின்றது. இது எந்தவொரு முதலாளியினதும் கனவாக அமையலாம். எனினும், இது கற்பனைக் கதையல்ல. இலங்கை ஏற்றுமதி தயாரிப்பு வலய அதிகார சபையான பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழு இப் பெறுபேற்றினை அடைந்தது.''

உள்ளூர் தொழில் அதிபர்களுக்கு இந்த ஏற்றுமதித் தொழில் மீது பிரத்தியேக உரிமையை வழங்கின் அதிக நலனை நாடு பெற்றிருக்கும் என்பது அவர்களின் அபிப்பிராயம். இது பற்றிய உங்கள் கருத்தென்ன?

வலயத்திலுள்ள சகல தொழிற்சாலைகளும் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு சொந்தமானது என அடிப்படை தப்பபிப்பிராயம் நிலவி வருகிறது. இது முற்றிலும் தவறானது. வலயத்தில் சில தொழிற்சாலைகளை உள்ளூர் தொழிலதிபர்கள் வைத்திருக்கிறார்களென்பதுடன் வெளியிலுள்ள தொழிற்சாலைகளையும் உரிமை கொண்டுள்ளனர். இதே போன்று வலயத்திற்கு வெளியேயுள்ள சில ஆடைத் தொழிற்சாலைகளும் (வெ.மு.ஆ.கு. அனுமதி பெற்றவை) வெளிநாட்டு முதலீட்டாளரைக் கொண்டுள்ளன. மொத்தத்தில் இத்தொழிற்துறையை அவதானிக்கின் அடிப்படையில் பெரும் பங்கு உள்ளூர் தொழிலதிபர்களிடமிருப்பதைக் காணமுடிகின்றது.

ஆரம்ப கட்டத்திலும், தற்போதும் கூட, வெளிநாட்டு முதலீட்டாளரால் க.ஏ.ஊ. வலயத்திற்குள் கொண்டுவரப்படும் உபகரணங்களும் எந்திரங்களும் பழமையானவையெனக் கூறப்படுகின்றன. இத்தகைய வசதிகளுடன் வளர்ந்து வரும் உலக போட்டிகளை சமாளிப்பது சாத்தியமாகுமா? இந்த தொழிற்சாலைகளில் தீவிர நவீனப்படுத்துதல் தேவைப்படுவதில்லையா?

சில கைத்தொழில்கள் இரண்டாந்தர உபகரணங்கள் எந்திரங்

களுடன் ஆரம்பிக்கப்பட்டன என்பதுடன் இவை ஒருபோதும் எழுச்சியடையவில்லை. அத்துடன் இவற்றில் சில மூடப்பட்டும்விட்டன. பா. கொ. பொ. ஆணைக்குழுவின் தற்போதைய கொள்கை, இரண்டாந்தர உபகரணங்களை ஆதரிப்பதில்லை. அத்தகைய உபகரணங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள் நாளடைவில் புதிய உபகரணங்களைக் கொள்வனவு செய்து வெற்றிகரமாக இயங்கி வருகின்றன என்பதையும் காண்கிறோம்.

க. ஏ. ஊ. வலய ஆடைத் தொழில்கள் நாட்டிற்குள் பின்னோக்கிய தொடர்புகளை நிறுவாததன் காரணமாக, சேர்க்கப்பட்ட பெறுமதி ஒப்பீட்டளவில் குறைவாகவும், வெளிநாட்டு நாணய உழைப்புக்கள் யாவும் முதலீட்டாளரின் நாட்டிற்கு மீளச் செல்கின்றன என்றும் முறையீடுகளுள்ளன. எதற்காக இந்த முதலீட்டாளரில் எவரும் இலங்கையில் புடவைத் தொழிலில் மீள முதலீடு செய்ய முன்வருவதில்லை.

க. ஏ. ஊ. வலய ஆடைத் தொழில் முதலீட்டாளர்களுக்கு அவர்களின் வர்த்தகத்திற்கு தேவையான பொருட்களின் உற்பத்தியில் அனுபவமோ அல்லது வியாபார ஈடுபாடோ இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. எவ்வாறெனினும், பியகமவில் உள்ள ஒரு தொழிற்சாலை தனக்குத் தேவையான துணியை உற்பத்தி செய்து சாயமிட்டு தங்கள் உற்பத்திப் பொருட்களுக்கு வேண்டியவாறு அவற்றைத் தயார் செய்கின்றது. இலங்கையில் நவீன புடவை ஆலை இல்லாததன் காரணம் இதற்கு பெருமளவு முதலீடு தேவைப்படுவதினாலாகும். அத்துடன் இன்று இலங்கையில் காணப்படும் சூழ்நிலையில் எவரும் இத்தகையதொரு முதலீட்டினை மேற்கொள்ளமாட்டார்களென நினைக்கின்றேன்.

1992இல் பல்நார் ஒப்பந்தம் பூர்த்தியாகி அனுமதிப் பங்குகள் அகற்றப்பட்டதும், க.ஏ.ஊ. வலயத் தொழில்கள் உலக போட்டியினை எதிர்கொள்ளும் நிலையில் இருக்க முடியுமா?

1992இல் ப. நா. ஒ. பூர்த்தியாகுமிடத்து ஏற்படும் இடர்களை எதிர்கொள்ளும் ஆற்றலை க.ஏ.ஊ. வலய தொழிற்சாலைகள் கொண்டுள்ளன என நினைக்கின்றேன். இது இலங்கை அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், வலயத்திற்கு வெளியிலுள்ள தொழிற்சாலைகளையும் இந்நிலையை எதிர்கொள்வதற்கு தயார்ப்படுத்த ஆதரவும் வழங்கப்பட்டு வருகிறது.

க. ஏ. ஊ. வலய முதலீட்டாளருக்கு அரசாங்கத்தால் பல்வேறு ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஆடைத் தொழிலின் சுமுக செயற்பாட்டினைப் பாதிக்கும் தடைகளெதுவுமுண்டா? அத்துடன் வலயத்திற்குள் ஒவ்வொரு முதலீட்டாளருக்கும் வழங்கப்படும் ஊக்குவிப்பில் காலவரையறை விதிக்கப்பட்டுள்ளதா? அத்தகைய காலவரையறை கடந்த பின் அதற்கேற்ப எவ்விதம் சீர்செய்வார்கள்?

வலயத் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட முக்கிய ஊக்குவிப்பு வரி விடுதலைக் காலமாகும். பலவற்றின் விடயத்தில் இது காலாவதியாகியுள்ளதுடன் சில தொழிற்சாலைகள் தங்களது விற்பனவு வரியில் ஒரு சதவீதத்தை வரியாகச் செலுத்துவதாகவும், வேறு சிலர் இலங்கையிலுள்ள சகல கம்பனிகளுக்கும் ஏற்புடைத்தான வருமான வரி வீதத்தைச் செலுத்துவதற்கும் விருப்புத் தெரிவித்துள்ளனர். எங்களுக்குள்ள மிகப் பெரிய பிரச்சினை தொலைத் தொடர்புகளாகும். அதாவது தொலைபேசி, டெலெக்ஸ் போன்றவையாகும். வலயம் ஆரம்பிக்கப்பட்ட போது விமான நிலையத்திற்கும், வலயத்திற்குமென விசேட பரிவர்த்தனை நிலையமொன்று ஏற்படுத்தப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக வழிநெடுக உள்ள பலருக்கு பல தொடர்புகள் வழங்கப்பட்டமையால் பரிவர்த்தனை நிலையம் குழப்பமடைந்து முதலீட்டாளருக்கு பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

க.ஏ.ஊ. வலய ஊழியரின் சம்பளங்கள், வேறு நலன்கள் பற்றிய பல்வேறு முறையீடுகள் இருந்து வருகின்றன. ஆடைத் தொழிலில்டுபட்டுள்ள ஊழியரை இவை எந்த வகைகளில் பாதித்துள்ளன?

வலயத்திற்குள் இருக்கும் சகல தரங்களுக்குமான ஊதியங்கள், நாட்டின் ஏனைய இடங்களில் வழங்கப்படும் ஊதியங்களைவிட சிறந்தவையென்பது யாவரும் அறிந்ததே. எங்களது மிகப் பெரிய சொத்து எங்கள் ஊழியர் குழாமே என்பதை நாங்கள் நன்கு அறிவோம்; உணர்வோம். ஆயினும் எங்களது ஊழியருக்கு வழங்கப்பட்டுள்ள இருப்பிட வசதிகள் குறித்து அதிக விசனமடைகின்றோம். இது ஒரு மிகத் தீவிரமான பிரச்சினையென்பதுடன், அரசாங்கத்தின் கவனத்திற்கு இதைப் பல தடவைகள் கொண்டுவந்துள்ளோம். வலயத்தைச் சுற்றியுள்ளவர்கள் விடுதி வீடுகளை அளவுக்கதிகமாக நிறைத்தும், அதிகளவு வாடகைகளை எங்கள் ஊழியரிடமிருந்து வாங்கியும் நிலைமையை தமக்குச் சாதகமாக மாற்றியுள்ளார்கள். அரசாங்கம் தற்போது இப் பிரச்சினையில் கவனம் செலுத்தியுள்ளது. முதற்படியாக பா. கொ. பொ. ஆணைக்குழு அங்கீகரிக்கப்பட்ட விடுதி வீடுகளை அமைக்கும் ஒரு திட்டத்தை அமுலாக்க முயல்வதுடன், விடுதிகள் போன்றவற்றை அமைத்துத் தருவதற்கு சில அமைப்புகள் விருப்பம் தெரிவித்து அவ்விதம் செய்தும், செய்யவிருப்பியுமுள்ளன. இதற்கானதொரு முன்னோடித் திட்டத்தை ஆரம்பித்து அரசாங்கத்துக்கு உதவ சர்வதேச தொழில் ஸ்தாபனம் முயலுவதுடன் இந்தத் திட்டத்தின் வெற்றியைப் பொறுத்து எங்கள் ஊழி

(21-ம் பக்கம் பார்க்க)

# வரிமன்னிப்புகள், கறுப்புப் பணம், வரிவிதிப்பு

1989 மார்ச் 16 ஆந் திகதிய வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட வரி மன்னிப்பின் கீழ் 10 கோடி ரூபா வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த மன்னிப்பானது 1989 ஏப்பிரல் 1 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இச் சலுகையை பயன்படுத்த விரும்பும் சகல தனி நபர்களும், தொழில் நிறுவனங்களும் 1989 ஜூன் 30 ஆந் திகதியின் முன்னர் அவ்வாறு செய்தல் வேண்டும். இது 1964ன் பின்னர் நிதி அமைச்சரொருவரினால் உள்ளூரில் வழங்கப்படும் ஐந்தாவது அத்தகைய வரி மன்னிப்பாகும்.

அத்தகைய மன்னிப்புகளை, அரசாங்கம் சாதாரண நிலைமைகளின் கீழ் சேகரிக்க முடியாத வருவாய்களை சேகரிப்பதற்கான வாய்ப்பினை வழங்குகின்றன. அத்துடன் வரிவலைக்கப்பாற்பட்டிருப்பவர்களை வரிவலைக்குள் கொண்டு வருவதற்கான சந்தர்ப்பத்தையும் இவை வழங்குவதால் கொள்கை அமைப்பாளரும் இறைவரி உத்தியோகத்தர்களும் இதனை வரவேற்கின்றனர். அத்துடன் இதுவரை வெளிப்படுத்தப்படாத சொத்துக்களை முதலீடு செய்வதற்காக வெளிக்கொண்டுவந்து அத்தகைய நிதிகளை உற்பத்திக்கென்று திரட்டுதலுக்கும் இது வழிவகுக்கின்றதென்பது அவர்களது வாதமாகும். வரி மன்னிப்பு வழங்குவதற்கு எதிராகப் பலத்த கருத்துக்களும் இருந்து வருகின்றன. அத்துடன் பல நாடுகள் அத்தகைய வரி செலுத்துனர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை படிப்படியாகக் குறைத்துள்ளன. உதாரணமாக அவுஸ்திரேலியாவில் சமீபத்தில் வழங்கப்பட்ட மன்னிப்பு, அத்தகைய நபர்கள் சகல வரிகளையும் செலுத்த வேண்டுமென்பதோடு, தண்டப் பணங்களிலிருந்து மட்டுமே அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது.

இலங்கையில் தற்போது வழங்கப்பட்டுள்ளதற்கு முன்னர் நான்கு வரிமன்னிப்புகள் வழங்கப்பட்டிருந்தன. இவற்றுள் முதலாவது வரிமன்னிப்பு 1964ல் கலாநிதி என். எம். பெரேரா நிதி அமைச்சராக இருந்த கூட்டு அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. இந்த வரி மன்னிப்பிற்கென வழங்கப்பட்ட கால எல்லை வரையறுக்கப்பட்டிருந்தமையால் அது எதிர்பார்த்த பலனைப் பெற முடியவில்லை. இதனுல் முதலாவதின் தொடர்ச்சியாகக் காணப்பட்ட இரண்டாவது வரிமன்னிப்பு 1965 இல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க நிதி அமைச்சரான திரு. யு. பி. வன்னிநாயக்காவினுல் வழங்கப்பட்டது. முதலாவது மன்னிப்பு காலம், போதாமை, வெளிப்படுத்தாத வருமானத்தையுடையவர்கள் ஒத்துழையாமை போன்ற காரணிகளால் 2 கோடி ரூபா வெளிப்படுத்தப்படாத வருமானத்தை மட்டுமே பெற்றது. இரண்டாவது மன்னிப்பு விடயத்தில் 13.8 கோடி ரூபா வெளிப்படுத்தப்பட்டது. மூன்ருவதாக, ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் நிதி அமைச்சரான கலாநிதி என். எம். பெரேராவினுல் வழங்கப்பட்ட வரி மன்னிப்பு நாணய செலவாணி நீக்க மன்னிப்பாக இருந்து 6,181,006 ரூபாவினை வெளிப்படுத்தியது. இந்த மன்னிப்புடன் தொடர்புடையதாக 1971 ல் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணய செலாவணி மன்னிப்பும், 1973ல் வழங்கப்பட்ட இரத்தினக்கற்கள் மன்னிப்பும் இருந்தன.

நான்காவது வரி மன்னிப்பு 1979இல் வழங்கப்பட்டு அதன் கீழ் வந்த வரி செலுத்துனர்கள் முன்னர் வெளிப்படுத்தப்படாத அவர்களது வருமானங்களை பணவடிவில் தேசிய சேமிப்பு வங்கியின் விசேட கணக்கில் வைப்புச் செய்யுமாறு வேண்டப்பட்டனர். இந்த வரிசெலுத்து நபர்கள் 30 சதவீத வரி செலுத்த வேண்டியிருந்ததுடன், மிகுதி 70 சத வீதத்தை குறித்துரைக்கப்பட்ட துறைகளில் ஏதேனுமொன்றில் முதலீடு செய்யும் அனுமதியைப் பெற்றனர். தற்போது வழங்கப்பட்டுள்ள மன்னிப்பு முன்னையதைப் போலவே 20 சதவீதத்தை வரியாக செலுத்தும் தேவையையும், மிகுதி 80 சதவீதம் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பிலிட்டு குறித்துரைக்கப்பட்ட முதலீட்டு நோக்கங்களுக்காக எடுக்கப்படலாம் என்றும் பணிப்புரை வழங்கியுள்ளது.

**வரிமன்னிப்பு வெளிப்படுத்தல்கள்**

| மன்னிப்பு | ஆண்டு | வெளிப்படுத்தப்பட்ட மறைமுகவருமானம் (ரூ. பத்து இலட்) | செலுத்தப்பட்ட வரிகள் (ரூ. பத்து இலட்) |
|---|---|---|---|
| முதலாவது | 1964 | 20 | 6.8 |
| இரண்டாவது | 1965 | 138 | 46.0 |
| மூன்ருவது | 1970 | 61 | 2.6 |
| நான்காவது | 1979 | — | — |
| ஐந்தாவது | 1989 | — | 100.0 |

1968 இன் வரிவிதிப்பு ஆணைக்குழு எதிர் காலத்தில் இலங்கை அரசாங்கங்களினுல் எவ்வித வரி மன்னிப்புகளும் வழங்கப்படக் கூடாதென குறிப்பாக சிபாரிசு செய்துள்ளது. ஏதேனும் நாடொன்றினில்

இத்தகைய மன்னிப்புக்கள் தொடர்ந்தும் வழங்கப்படுமாயின் நாணயமற்ற வரி செலுத்துனர்கள் அத்தகைய மன்னிப்புகளுக்காகக் காத்திருப்பார்களென்பதுடன், தங்கள் உண்மையான சரியான வருமானங்களை வெளிப்படுத்தி உரியகாலங்களில் வரிகளையும் செலுத்தமாட்டார்கள் என்பது இந்த ஆணைக்குழுவின் வாதமாகும். இக் கருத்திற்கு எதிர்மாறாக வேறுசிலர் எந்த வரி நிர்வாகமும் அது எத்துணை செயற்றிறன் உள்ளதாக இருப்பினும் கூட வரிஏய்ப்பினை முற்றாக ஒத்துக்காட்ட முயலுதல் கடினம் என்னுமாகையால் கறுப்புப் பணத்தை வெளிக்கொண்டு வருவதற்காக இத்தகைய நடவடிக்கைகள் அவசியம் என்றும் வாதிக்கின்றனர். இந் நாட்டில் பெருமளவு கறுப்புப் பொருளாதாரம் உள்ளதென்பதும் அது வெளிப்படுத்தப்படாது மறைவில் இருக்கும்வரை அதன் சரியான மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியாதென்பதும் பலரும் அறிந்த விடயமாகும். எவ்வாறெனினும் கறுப்புப் பொருளாதாரம் இலங்கைக்கு புதியதொரு நிகழ்வல்ல. மேலும் பொருளியலறிஞர் கருத்துப்படி கடந்த பத்து ஆண்டுகளில் இத்தகைய பொருளாதாரக் கொடுக்கல் வாங்கலின், அளவும் பருமனும் குறிப்பிட்ட அளவு பெருக்கமடைந்துள்ளது. தாராளமயப் படுத்தப்பட்ட பொருளாதாரத்தின் கீழ் சட்ட விரோத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பாரிய அளவிலான வருமானங்களை உழைப்பதற்கு வாய்ப்பிருக்காது என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

இலஞ்சமும், கொடுப்பனவுகளும், கடத்தல்களும், இரத்தினக்கல் வியாபாரமும், அனுமதிபெறாத தரகுகளும், குதிரைப் பந்தயமும், சூதாட்டமும், போதை மருந்துகளும், பதிவு செய்யப்படாத உயர் தொழில்சார் சம்பாத்தியங்களும், உண்மை மரணச்சொத்துக்களின் பெறுமதியை குறைத்து வெளிப்படுத்தலும், இவற்றுடன் பல்வேறு வகையான தொழில் கொடுக்கல் வாங்கல்கள், ஊகக் கையாள்கைகளும் எனப் பலவும் சேர்ந்து கறுப்புப் பணத்தின் முக்கிய ஊற்றுக்கண்களாக இருக்கின்றன, அத்தகைய கறுப்புப் பணத்தின் சிறுஅளவு, வர்த்தக வங்கிகளினூடாக அநாமதேய வைப்புச் சான்றிதழ்கள் மூலம் திரட்டப்பட்டுள்ளன. இதன் தொகை 1982 முதலாக எட்டுமடங்காக அதிகரித்து 1988 அளவில் 300 கோடி ரூபா மட்டத்தை அடைந்தது.

1987 இல் முன்னணி பொருளியலறிஞர் ஒருவரின் மதிப்பீடுகளின்படி கறுப்புப் பணத்தின் வருடாந்தத் தொகை ஏறக்குறைய 1000 கோடி ரூபாவாக அல்லது மொத்த தேசிய உற்பத்தியில் 10 சதவீதமாக (அல்லது மொத்த அரசாங்க வருவாயின் 25 சதவீதமாக) உள்ளதெனக் கூறப்படுகின்றது. மேலும் அத்தகைய கறுப்புப்பணத்தின் 50 சதவீதம் இரத்தினக்கல் வியாபாரத்திலிருந்து மிகுதி 50 சதவீதம் போதைமருந்துகள், தரகுகள், இலஞ்சங்கள், அதிகாரப்படுத்தப்படாத கொடுப்பனவுகள், உள்ளூர் விவசாயம் என்பவற்றிலிருந்து பெறப்படுகின்றதென்றும் இம்மதிப்பீடு தெரிவிக்கிறது. அத்தகைய பணம் 20 சதவீத வரிவிதிப்பிற்குட்படுத்தப்படின் மேலும் 200 கோடி கிடைக்குமென்று இவர் கருதுகிறார். எவ்வாறாயினும், மன்னிப்பொன்று அறிவிக்கப்பட்டதும் இப்பணத்தின், பெரும்பகுதி வெளிப்படுத்தப்படும் என்ற ஆதாரத்திலேயே எந்த மதிப்பீடும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அதன் பரிமாணம் எத்தகையதாகவிருப்பினும், பெருமளவு வளங்கள் முக்கிய பொருளாதார நடவடிக்கைகளுக்குள் பிரவேசிக்காத நிலையில் இருப்பதனை சான்றுகள் காட்டுகின்றன. அத்தகைய கறுப்புப்பணம் இருந்துவருதல் பெரும் பொருளாதார திட்டங்களுக்கு முக்கிய பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. மேலும், இத்தகைய வருமானங்கள் நுகர்வு சார்ந்து இருப்பதன் காரணமாக பொருளாதாரத்தில் பணவீக்க நிலைமையையும் தோற்றுவிக்கின்றன.

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

யருக்கென பல பெரிய விடுதி வகையான இருப்பிட வசதிகளையும் மேற்கொள்ளவுள்ளது.

க.ஏ.ஊ. வலய ஊழியருக்கு வழங்கப்பட்டுள்ள நியதிகளும், நிபந்தனைகளும், தூர கிழக்கில் உள்ள புதிய கைத்தொழில் நாடுகளுடன் ஒப்பிடுகையில் எவ்விதமுள்ளன? அத்துடன் உற்பத்தித் திறனும் எத்தகையது?

எனது அனுபவப்படி எங்கள் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வேலை நிபந்தனைகள் புதிதாக தொழில்மயமான நாடுகளைவிட மிக மேலானதாகும். எவ்வாறெனினும் எங்கள் உற்பத்தித் திறன் மிகக் குறைவாகவேயுள்ளது.

அடுத்துவரும் மூன்று ஆண்டுகளில், குறிப்பாக போட்டித் துறையில் இலங்கை ஆடைத் தொழிலின் எதிர்காலம் பற்றி உங்கள் கருத்து யாது?

இலங்கை ஆடைத் தொழில் மிகுந்த நம்பிக்கையோடு எதிர்காலத்தை எதிர்கொள்ளலாமென்பதே எனது கருத்தாகும். ஆயினும், இதற்கு தற்போது நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு கூடிய விரைவில் தீர்வு காணப்படல் வேண்டும். சமீப காலங்களில் தொழிற்சாலைகளை அடிக்கடி மூடிவைக்கும் நிலைமை ஏற்பட்டமை காரணமாக அதிக தொழிற்சாலைகள் நட்டமுற்றன. அத்துடன் பெரும் கொள்வனவாளராகச் சிலர் உரிய நேரத்தில் பொருட்களைக் கப்பலேற்றுவதில் உள்ள நாட்டின் ஆற்றலில் நம்பிக்கையிழந்துள்ளனர்.

**தேயிலை — பன்முகப்படுத்தப்பட்ட சந்தைகளுக்காக அதிகரிக்கப்பட்ட உற்பத்தி.**

1988இல் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி 219.9 மில்லியன் கிலோ கிராம்வரை அதிகரித்து முன்னைய ஆண்டின் ஏற்றுமதியை ஏறக்குறைய 19 மில்லியன் கிலோ கிராமினால் விஞ்சியதுடன், 1975ஆம் ஆண்டின் 212.7மில்லியன் கிலோகிராம் அளவினையும் விஞ்சியது. சராசரி விலைகளும், முன்னைய ஆண்டின் கிலோகிராமிற்கு ரூபா 52.97 என்ற விலைக்கெதிராக, கிலோகிராமிற்கு ரூபா 55.95 ஆக உயர்மட்டத்தை எட்டியது. இறுதி விளைவாக தேயிலையின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டு செலாவணி 1988இல் 1230 கோடி ரூபாவாக (1987–ல் 1060 கோடி ரூபா) இருந்தது. தேயிலை ஏற்றுமதியிலிருந்து பெறப்பட்ட உண்மை வருவாயானது அது தோற்றமளிப்பது போன்று பெரியளவினதாக இல்லாவிடினும் கப்பற்றளம் வரையிலான விலை அலகு பெறுமதியிலேற்பட்ட மேல் நோக்கிய முன்னேற்றம் முக்கியமானதாக அமைகின்றது.


1988இன் இறுதிக்காலப் பகுதியில் பல தேயிலை தோட்டங்களில் தடங்கல்கள் ஏற்பட்ட போதிலும், முன்னைய ஆண்டின் உற்பத்தியிலும் பார்க்க 1.36 மில்லியன் கிலோகிராம் மிகையுற்பத்தி ஏற்பட்டமை அவதானிக்க வேண்டியதொரு அம்சமாகும். 1987இன் 213,003 மில்லியன் கி. கி. உற்பத்தியிலிருந்து 1988இல் 213,900 கி. கிராமிற்கு உற்பத்தி அதிகரித்ததுடன் மொத்தப் பயிர்ச் செய்கையின் 97 சதவீதம் வெற்றிகரமாக ஏற்றுமதி செய்யப்பட்டது. இது உலகில் இலங்கையை மிக முக்கிய தேயிலை ஏற்றுமதி நாடாகவும் 21 சதவீத மொத்த சந்தைப் பங்குடையதாகவும் விளங்கச் செய்தது. இலங்கையின் உற்பத்தியின் 95 சதவீதம் ஏற்றுமதி சந்தைக்கென இருந்தவேளையில் இந்தியாவில் 30 சதவீதமே ஏற்றுமதிக்கென ஒதுக்கப்பட்டது.


உலக தேயிலை ஏற்றுமதிகளில் முக்கிய உற்பத்தி நாடுகளின் பங்குகள்

| | 1975 | 1980 | 1983 | 1984 | 1985 |
|---|---|---|---|---|---|
| இலங்கை | 28.3 | 21.4 | 18.1 | 22.1 | 20.3 |
| இந்தியா | 29.2 | 26.0 | 23.9 | 23.4 | 22.9 |
| பங்களாதேஷ் | 3.2 | 3.6 | 3.4 | 2.5 | 3.1 |
| இந்தோனேசியா | 6.1 | 7.9 | 7.9 | 9.2 | 9.3 |
| சீனா | 8.2 | 12.5 | 14.3 | 13.8 | 14.4 |
| கென்யா | 7.0 | 8.7 | 11.5 | 9.8 | 13.0 |
| மாலாவி | 3.2 | 3.6 | 1.1 | 4.0 | 3.8 |
| ஏனையவை | 14.8 | 16.3 | 16.8 | 15.2 | 13.2 |
| | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| உற்பத்தி நாடுகளிலிருந்து மொத்த ஏற்றுமதி (மெட். தொன்) | 751,420 | 858,970 | 871,598 | 925,833 | 973,017 |

மூலம்: சர்வதேச தேயிலைக்குழு 1985இன் வருடாந்த புள்ளிவிபர அறிக்கை.

அதிகரித்த உற்பத்தியை 1988இல் ஏற்றுமதி செய்வதில் பெரும் கஷ்டங்களெதுவும் எதிர்கொள்ளப்படவில்லை, ஏனெனில் ஏனைய உற்பத்தி நாடுகளைப் போன்றல்லாது இலங்கை தன் ஏற்றுமதி சந்தைகளை விஸ்தாரமாகப் பரப்பியுள்ளதுடன், 50 பல்வேறு நாடுகளுக்கு மேலாக இந்த ஏற்றுமதிகளில் ஈடுபடவென ஒப்பீட்டளவில் அதிக எண்ணிக்கையான கப்பற் தொகுதியையும் கொண்டுள்ளது.




### எகிப்து

இலங்கையிலிருந்து பெருமளவு தேயிலையை கொள்வனவு செய்யும் நாடாக மீண்டும் எகிப்து விளங்கியதுடன் இம் முதன்மை நிலையை தொடர்ந்தும் நான்காவதாண்டாகப் பேணியது.

பத்து வருடங்களுக்கு முன்னர் எகிப்திய சந்தையில் இந்தியத் தேயிலேயே முதலிடத்தைப் பெற்றிருந்தது. ஆனால், 1980 முதற் பகுதியிலிருந்து இலங்கைத் தேயிலைக்கான எகிப்திய இறக்குமதி 1981இல் 17.3 மில்லியன் கி. கிராமிலிருந்து 1988ஆம் ஆண்டளவில் 35.4 மில்லியன் கிலோ கிராமிற்கு அதிகரித்து முதலிடத்தை வகித்தது. இது இலங்கை ஏற்றுமதி அளவின் 16 சத வீதத்திற்கு மேற்பட்டதாக எகிப்திய சந்தையின் 60 சத வீதத்தைக் கைப்பற்றியது. அத்துடன் சந்தைப் பகுப்பாய்வுகளுக்கிணங்க இலங்கைத் தேயிலைக்கு இன்னமும்பெரும் கிராக்கியிருந்து வருகின்றது. இலங்கைத் தேயிலையை பெரும் அளவுகளிலும், பெறுமதி சேர்க்கப்பட்ட வடிவத்திலும் கொள்வனவுசெய்யும் முதன்மை நாடாக எகிப்து இருந்து வருகின்றது.

### ஈராக்

கடந்த இரு தசாப்தங்களாக ஈராக், இலங்கைத் தேயிலையின் முக்கிய நுகர்வு நாடுகளில் ஒன்றாக விளங்கியது. 1988இல் அதன் இறக்குமதி 33.9 மில்லியன் கிலோ கிராம்களாக மொத்த ஏற்றுமதியின் 15.4சத வீதமாக அமைந்தது. பல தசாப்தங்களாக இலங்கைத் தேயிலையைகொள்வனவு செய்யும் முதல் மூன்று முக்கிய நாடுகளில் ஒன்றாக ஈராக் இருந்து வந்துள்ளது. 1984இல் இலங்கைத் தேயிலையைபெருமளவு கொள்வனவு செய்த நாடாகவும் 1988இல் மொத்த ஏற்றுமதியில் 15.4 சதவீதத்தைப பெற்ற நாடாகவும் ஈராக் இருந்தது. 1987இல் ஈராக் சந்தையின் 70.8 சதவீதத்தை இலங்கை அடைந்திருந்தது.

### பாகிஸ்தான்

இலங்கைத் தேயிலையின் 19.6 மில்லியன் கிலோகிராமினைக் கடந்த ஆண்டு கொள்வனவு செய்து பாகிஸ்தான் மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்தது. 1970ஆம்ஆண்டின்நடுப்பகுதியில் இந்தியாவின் கொள்வனவுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தவேளையில் இலங்கைத் தேயிலையைப் பெருமளவு கொள்வனவு செய்யும் நாடுகளில் பாகிஸ்தான் முதலிடத்தை வகித்தது. 1978 முதல் இந்நிலை கணிசமானளவு மாற்றமடைந்தது. இலங்கைத் தேயிலையை பெருந்தொகையாக கொள்வனவு செய்யும் இரண்டாவது நாடாக பாகிஸ்தான் விளங்கியபோதிலும், பாகிஸ்தானிலிருந்து இலங்கை எந்தளவு பொருட்களையும், சேவைகளையும் பெறுகின்றது என்பதிலேயே இது தங்கியிருந்தது.

### சௌதி அரேபியா

1988ஆம் ஆண்டிலும் இலங்கையின் தேயிலையை பெருமளவு கொள்வனவு செய்யும் நான்காவது நாடாக சௌதி அரேபியா விளங்கியது. சௌதி தேயிலை சந்தையின் 70 சதவீதம் அடைக்கப்பட்ட இலங்கைத் தேயிலையையும், தேயிலைப்பொட்டலங்களையும் பெருமளவு கொண்ட இலங்கைத் தேயிலையால் வழங்கப்பட்டது. 1970களின் ஆரம்பத்திலிருந்து இது இலங்கைக்கான இறக்குமதி சந்தையாக தொடர்ந்துமிருந்ததுடன், கடந்த இரு தசாப்தங்களில் மொத்த ஏற்றுமதிகளில் 6 சதவீதம் சௌதி அரேபியாவிற்கு அனுப்பப்பட்டது.

### ஐக்கிய இராச்சியம்

இலங்கைத் தேயிலையைக் கொள்வனவு செய்யும் நாடுகளில் ஐக்கிய இராச்சியம் ஐந்தாவது இடத்திற்கு இறங்கி, கடந்த இரு ஆண்டுகளாக அந்நிலையிலேயே இருந்து வருகின்றது. இத் தேயிலையின் முக்கிய பாகம் பெருந் தொகுதி வடிவில் ஏற்றுமதியாக்கப்படுகின்றது. இச் சந்தையின் 30 சத வீதத்திற்கு மேற்பட்ட பங்கை இலங்கை கொண்டிருந்த 1960ஆம் ஆண்டுகளின் பின்னர், தொடர்ச்சியான வீழ்ச்சியேற்படலாயிற்று. 1974ஆம் ஆண்டளவில் இச் சந்தைப் பங்கு 15.2 சதவீதமாகி, 1988இல்6.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. 1974இல் 33 சதவீதமாகஇருந்த இந்தியாவின் ஐக்கிய இராச்சிய சந்தைப் பங்கும் 1988இல் 16 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. 1974இல் 10.7 சதவீதமாகவிருந்த கென்யாவின் ஐக்கிய இராச்சிய சந்தைப் பங்கு 1988இல் 47.3 சதவீதமாக உயர்ந்தது. ஐக்கிய இராச்சியத்திற்காக பத்து வருடங்களுக்கு முன் மேற்கொண்ட ஏற்றுமதிகளை கென்யா இரட்டிப்பாக்கி 90.6 மில்லியன் கி. கிராமினை ஏற்றுமதி செய்தது.

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

கொரியா 1985 இல் பின்னடைவைக் கண்டது. தென்கொரியாவின் ஏற்றுமதிகளும் 1980 இல் 295 கோடி அமெரிக்க டொலர்களிலிருந்து 1986இல் 548 கோடி அமெரிக்க டொலர்களாக வளர்ச்சி பெற்று இரட்டிப்பாகியது. தாய்வான், சீனு ஆகிய ஒவ்வொரு நாடுகளதும் வளர்ச்சிப் போக்குகள் வலிமை கொண்டனவாக அமைந்தன. இவை 50 சதவீத வளர்ச்சி மட்டத்தை அடைந்தன. தாய்வானின் ஏற்றுமதி 243 கோடி அமெரிக்க டொலர்களிலிருந்து 425 கோடியாக அதிகரித்தது சீனுவின் ஏற்றுமதி 168 கோடி அமெரிக்க டொலர்களிலிருந்து 297 அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. ஆடை உற்பத்தி ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 20 ஆசிய நாடுகள் ஈடுபட்டிருந்தன. சிங்கப்பூர், பாகிஸ்தான், இந்தியா, இந்தோனேஷியா, மொரோக்கோ, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இலங்கை, மலேசியா, வங்காளதேசம் ஆகியவையும் இவற்றில் அடங்கியிருந்தன. புதிய ஏற்றுமதியாளர்களுட் பலர் அதிக வாய்ப்புக்களைக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். பாகிஸ்தான் போன்ற சில நாடுகள் பெரிய ஏற்றுமதியாளர்களாகத் தம்மை வளர்த்து ஆசிய ஏற்றுமதிச் சந்தையில் பெரும் பங்கினைக் கைப்பற்ற முனைந்தன.

# ஏற்றுமதித் துறைமீது தாராளக் கொள்கைகளின் தாக்கம்

## இலங்கையையும் தென் கொரியாவையும் ஒப்பு நோக்கிய ஓர் ஆய்வு


**ஸ்ரீயானி ஹுலுகல்ல**

(உதவிப் பணிப்பாளர், பொருளாதாரக் கொள்கை திட்டமிடல் பிரிவு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை)


**அறிமுகம்**

குடியேற்ற ஆட்சி காலமுதல் இலங்கையின் பொருளாதாரம் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் தங்கியிருந்தது. இதன் விளைவாக வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியத்தை பெற்றுக்கொள்வதற்கு பாரம்பரிய மரப்பயிர்த் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படலாயிற்று. சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து 1948 முதல் ஒவ்வொரு அரசாங்கமும் தீவிரமான கொள்கை மாற்றங்களை மேற்கொண்டு வந்துள்ள போதிலும் பொருளாதாரத்தின் 'முக்காலிகள்' என வர்ணிக்கப்படும் தேயிலை, இறப்பர், தெங்கு ஆகியவை செலுத்திவரும் செல்வாக்கினை அவற்றால் மாற்றியமைக்க முடியவில்லை.

புறக்காரணிகளான பாதகமான காலநிலை, (பிரதானமாக கைத்தொழில் நாடுகளின்) உலகளாவிய பொருளாதார நிலைமை, இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்கள் மீதான தீவிரமான போட்டி ஆகியவை தொடர்ந்தும் எமது பொருளாதாரத்தின் மீது தமது ஆதிக்கத்தை வகித்து வருவதிலிருந்து புற மூலங்களால் எவ்வளவு இலகுவாக அது சேதப்படுத்தக் கூடியதாக உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

தாராளக் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் எதிர்பார்க்கப்பட்டவாறு ஏற்றுமதித்துறை விரிவாக்கம் காணவுமில்லை; பன்முகப்படுத்தப்படவுமில்லை. இதற்கு 1980 களின் ஆரம்ப பகுதியில் நிலவிய உலகளாவிய பொருளாதாரத் தேக்க நிலை காரணமாக அமைந்திருக்கக் கூடும். அத்துடன் சந்தைகளில் பண்டங்களின் விலைகள் குறைவடைந்து சென்றமையும் இதன் பிறிதொரு காரணமாக இருந்திருக்கலாம். மேலும், என்றுமில்லாத அளவுக்கு பாதுகாப்புச் செலவினங்களை அதிகரித்தமை, சுற்றுலாத் துறையின் வீழ்ச்சி, பிறநாடுகளில் பணிபுரியும் தொழிலாளரின் பண அனுப்பீடுகள் குன்றியமை என்பவை இந்நிலையை மேலும் மோசமாக்கின.

தாராள பொருளாதார கொள்கைகளின் வாயிலாக பொருளாதாரச் சாதனைகளை அடைந்த நாடு எனத் தென் கொரியா தொடர்ச்சியாக மேற்கோள் காட்டப்பட்டு வந்துள்ளது. ஏற்றுமதி அபிவிருத்தி தொடர்பான இலங்கையின் கொள்கைகளை நெருக்கமாகப் பரிசீலித்தால் கொரியச் சாயலை அடைவதற்கான எத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டிருத்தலைக் கண்டறிய முடியும். தென் கொரியாவின் வியக்கத்தகு பொருளாதார வளர்ச்சிக்கு அதன் தாராளக் கொள்கைகளா அல்லது அந்நாட்டு அரசாங்கத்தின் வழிப்படுத்தல்களும் நெறிகாட்டல்களுமா காரணமாக அமைந்தன என்பதை பரிசீலிப்பது பயனுள்ளதாகும்.

கொரிய மாதிரியை பின்பற்றி 1977 முதற் கொண்டு மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள், அந்நாட்டின் ஏற்றுமதித் துறையில் ஏற்படுத்திய உக்கிரமான வளர்ச்சியை இலங்கையில் ஏற்படுத்தத் தவறியமைக்கான காரணங்களைக் கண்டறிவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

எனவே இக்கட்டுரையில் இரு நாடுகளிலும் தாராளக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்ட காலப்பகுதிகளில் நிலவிய ஒற்றுமை வேற்றுமைகளை கண்டறிய எத்தனிக்கப்படுகின்றது. இலங்கையின் 1977 – க்கு பிற்பட்ட நிலையை ஒப்பிடுவதற்காக 1963–73 வரையிலான கொரியாவின் ஆரம்ப தாராளக் கொள்கைக் காலப்பகுதி பற்றி இங்கு விளக்கப்படுகின்றது.

முதலில் இரு நாடுகட்கும் இடையிலான ஒப்புமைகளை நோக்குவோம். இவை இரண்டும் குறிப்பிடத்தக்க சிறிய ஆசிய நாடுகளாகும். இரண்டும் ஏதோ ஒரு காலப்பகுதியில் காலனித்துவ ஆதிக்கத்துக்குட்பட்டவையாக இருந்தன. இதன் காரணமாக அவை சுதந்திரம் பெற்ற வேளையில் இந்த இரண்டு நாடுகளதும் பொருளாதார அமைப்பின் பிரதான மூலகமாக அந்நிய வர்த்தகம் அதிலும் குறிப்பாக ஆரம்பப் பொருள் ஏற்றுமதி என்பது அமைந்திருந்தது. மேலும், இரு நாடுகளும் இயற்கை வளங்களைப் பொறுத்தவரை வறியவையாகக் காணப்பட்டமையால் அவற்றின் கைத்தொழில் இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்களில் பெருமளவுக்கு தங்கியிருக்க வேண்டியிருந்தது. அதேவேளையில் இரு நாடுகளிலும் போதிய வேலைவாய்ப்புகள் இல்லாதிருந்தமையால் தாராளமான ஊழிய நிரம்பல் காணப்பட்டது. இடம் பெயரக்கூடியதும் போராட்ட பண்பற்றதுமான ஊழியப்படை ஒன்றினை ஒப்பீட்டளவில் குறைந்தளவு கூலி விகிதத்தில் இவற்றால் வழங்க முடிந்தது.

## இலங்கை

சுதந்திரத்தை தொடர்ந்த காலப்பகுதியின் ஆரம்பத்தில் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கு அதற்குச் சாதகமானதாகவே அமைந்திருந்தது. 1950 களின் ஆரம்பத்தில் ஏற்பட்ட இறக்குமதிச் செழிப்பு இதனை மேலும் வலுவூட்டியது. இறக்குமதி பிரதியீட்டை வளர்ச்சி உத்தியாக 1950 களின் பிற்பகுதியில் இலங்கை கடைப்பிடிக்க தொடங்கியதும் மேற்கூறிய போக்கு முற்றிலும் மாறுபட்டது.

இரட்டை அந்நியச் செலாவணி மாற்றுக் கொள்கை, காணிச் சீர்திருத்தங்கள், தேசியமயவாக்கம், கைத்தொழில் மயமாக்கத்துக்கான எத்தனங்கள் என்பவை சகல பொருளாதார நடவடிக்கைகளிலும் அரசாங்கத்தின் பங்கினை வலுவூட்டுவனவாக அமைந்தன. மூலதனப் பொருட் கைத்தொழில் மேற்கொள்ளப்பட்ட உயர் அளவான முதலீடுகளின் காரணமாக இறக்குமதிகளில் தங்கியிருக்கும் நிலை உச்சக்கட்டத்தை அடைந்தது.

இலங்கை அபிவிருத்திப் பொருளாதாரத்தின் வரலாற்றில் 1977 ஆம் ஆண்டு ஒரு திருப்பு முனையாகக் கொள்ளப்படலாம். நேரடி கட்டுப்பாடுகளைக் கொண்ட இறுக்கமான முறையைக் களைந்ததின் மூலம் குறிப்பாக பிறநாட்டு வர்த்தகத்தில் பரந்துபட்ட கொள்கை அடிப்படையிலான சீர்திருத்தங்கள் அறிமுகஞ் செய்யப்பட்டன.

யதார்த்தமான நாணய மாற்றுக் கொள்கையை எய்தும் நோக்குடன் 1977 இல் 47 சதவீத மதிப்பிறக்கத்தைக் கொண்ட நாணய மாற்று விகிதம் ஒரே சீராக்கப்பட்டது. தொகையளவிலான இறக்குமதி கட்டுப்பாடுகட்குப் பதிலாக தீர்வை முறையொன்று அறிமுகஞ் செய்யப்பட்டது. உள்ளூர் உற்பத்திகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட அடிப்படையில் சில பொருட்கள் மீது உயர்ந்த தீர்வைகளை விதிப்பதாக இக் கொள்கைகள் அமைந்தன. சுதந்திர வர்த்தக வலயங்கள் அமைக்கப்பட்டமையைத் தொடர்ந்து மூலதன மாற்றலுக்கான நிறுவன அடிப்படையிலான தடைகள் அகற்றப்பட்டு அந்நிய முதலீடுகள் ஊக்குவிக்கப்பட்டன. சலுகை அடிப்படையிலான நிதி, சிறந்த சாதனைகட்குப் பணக் கொடைகள், வரிவிலக்குகள் வாயிலான இறை ஊக்குவிப்புகள் என்பவற்றை உள்ளடக்கிய குறிப்பான ஏற்றுமதி வளர்ச்சி கொள்கைத் தொகுதி ஒன்று கடைப்பிடிக்கப்பட்டது.

தீர்வைத் தள்ளுபடித் திட்டத்தின் வாயிலாக இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளை சர்வதேச விலைகளில் ஏற்றுமதியாளர் பெற்றுக்கொள்ள வசதி வழங்கப்பட்டது. பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் பங்கினைக் குறைப்பதும் தனியார் துறையின் பங்கினை அதிகரிப்பதும் அரசாங்கத்தின் பிரகடனப் படுத்தப்பட்ட கொள்கையாக இருந்தது. தற்போது ஊக்குவிப்புத் திட்டங்களை விரிவாக்கஞ் செய்தும் புதியவற்றை அறிமுகம் செய்தும் நிறுவன ரீதியான உள்ளமைப்புக்கு மேலும் வலுவூட்டப்பட்டது.

## தென்கொரியா

1910 - 45 வரையிலான அந்நிய ஆட்சிக் காலப்பகுதியில் தொழினுட்பம், முகாமைத்துவம் என்பவற்றுக்கு பெருமளவுக்கு ஜப்பானில் தங்கி இருக்க வேண்டிய நிலைக்கு கொரிய பொருளாதாரம் தள்ளப்பட்டிருந்தது. இதன் விளைவாக 1940 இல் சடுதியாக ஜப்பானிலிருந்து பிரிக்கப்பட்டமையால் கொரிய பொருளாதாரம் சிதைவுற்றது.

இதனை விட 1950 இல் கொரியா துண்டாடப்பட்டமை தென்கொரிய பொருளாதாரத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. வலுவாக்க பொறித்தொகுதிகளும் கனிம வளங்களும் வட கொரியாவில் காணப்பட்ட வேளையில் மொத்த சனத்தொகையின் 66 சதவீதம் தென்கொரியா மீது சுமத்தப்பட்டது. பாரிய கைத்தொழில்களிற் பெரும்பாலானவை வட கொரியாவிலேயே அமைந்திருந்தன.

1960 இல் இரு அரசியற் கொந்தளிப்புகள் ஏற்பட்டன 1963 வரை உறுதியற்ற அரசியல் நிலையே காணப்பட்டது. இதுவரை தென்கொரியா பிரதானமாக வர்த்தகம், அந்நியச் செலாவணி என்பவற்றில் கண்டிப்பான கொள்கைகளைக் கைக்கொண்டு வந்தது. 1963 இன் பின்னர் தாராளக் கொள்கைகள் அறிமுகஞ் செய்யப்பட்டன.

இவை அற்புதமான பொருளாதார சாதனைகளை தூண்டிவிட்டன என வர்ணிக்கப்படுகின்றது. நெகிழ்வான நாணய மாற்று விகிதம், இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகள், பொறித்தொகுதிகள் என்பவற்றை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு வட்டி வீதச் சீர்திருத்தங்கள், வரியமைப்பை வலுவூட்டுதல், அரசுச் செலவினங்களைக் குறைத்தல், ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டங்களை உக்கிரமாக்குதல் போன்ற பயனுறுதியுள்ள திட்டப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கியனவாக கொள்கைச் சீர்திருத்தங்கள் அமைந்திருந்தன.

நெகிழ்வுள்ள நாணய மாற்றுக் கொள்கை மிகப் பயனுள்ள கொள்கைக் கருவியாக அமைந்தது. ஏற்றுமதியாளரைத் தூண்டுவதற்கும் இறக்குமதிகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கும் தென்கொரிய அரசாங்கம் இதனைப் பயன்படுத்தியது.

1963 முதல் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களையும்

அட்டவணை 1

### இலங்கை ஏற்றுமதிகளின் பெறுமதி - 1978 – 86

(நடப்ப எஸ். டி. ஆர் பத்து இலட்சங்களில்)

| | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. தேயிலை | 326.8 | 284.4 | 286.8 | 284.3 | 276.0 | 329.8 | 605.0 | 434.0 | [illegible] |
| 2. இறப்பர் | 103.2 | 123.8 | 120.4 | 127.5 | 101.1 | 113.4 | 127.0 | 93.0 | 80.0 |
| 3. தென்னை | 64.9 | 84.4 | 57.3 | 63.4 | 65.1 | 76.4 | 81.0 | 112.0 | 73.0 |
| மொத்த பாரம்பரிய பயிர்கள் | 494.9 | 492.6 | 464.5 | 475.2 | 442.2 | 518.7 | 813.0 | [illegible] | 434.0 |
| 4. சிறு விவசாயம் | 36.9 | 44.1 | 40.8 | 61.7 | 65.1 | 59.1 | 53.0 | [illegible] | 46.0 |
| 5. கைத்தொழில் | 96.6 | 183.9 | 270.2 | 321.9 | 360.0 | 350.7 | 495.0 | [illegible] | 483.0 |
| 5.1 புடவை | [illegible] | 55.5 | 84.9 | 133.3 | 152.4 | 188.3 | 290.0 | 288.0 | 293.0 |
| 5.2 பெட்ரோலியம் | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | 142.8 | 106.6 | [illegible] | 140.0 | 72.0 |
| மொத்தம் | 673.6 | 759.5 | 817.7 | 928.3 | 933.7 | 997.7 | 1432.0 | 1311.0 | 1036 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த மீளாய்வு *(1978 - 86)*

மூலதனப்பொருட்களையும் பெற்றுக்கொள்வதை உறுதி செய்வதற்காக மேலும் தாராளமாக்கப்பட்ட இறக்குமதிக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை ஏற்றுமதிகளுடன் அரசாங்கம் வெற்றிகரமாக இணைத்தமையால் இறக்குமதிகளின் அளவினை இன்னும் அதிகமாக கட்டுப்படுத்தக்கூடியதாக இருந்தது. தென்கொரியாவின் பொருளாதார அபிவிருத்தியின் 'வெற்றிக்கால முக்கிய காரணியாக இவ்வழி முறை அமைந்தது.

ஏற்றுமதியாளர்கட்குச் சலுகை அடிப்படையிலான வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டன. அதேவேளையில் சேமிப்புகளை ஊக்குவிப்பதற்காக உயர்ந்த வட்டி வீதம் பேணப்பட்டு வந்தது. உள்ளூர் சேமிப்புக்களைத் திரட்டும் இவ்வழி முறையானது குறைவடைந்து சென்ற வெளிநாட்டு உதவியின் பாதக விளைவுகளை பயனுள்ள வகையில் தணிப்பதாக அமைந்தது.

மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதிகட்கு வரி விலக்குகளும் தனியுரிமை உரித்துகளும் வழங்கப்பட்டன. வட்டிக்கட்டண பின்னிணைவுகளை ஏற்படுத்துவதற்காக மறைமுக ஏற்றுமதியாளர்கட்கும் ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டன. பொருளாதார அபிவிருத்தி, ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில் மயவாக்கம் என்பவை தொடர்பாக அரசாங்கம் கொண்டிருந்த திடசங்கற்பம் தென்கொரியாவின் வெற்றியில் தவிர்க்க முடியாத பங்களிப்பைப் பெற்றது.

#### ஏற்றுமதித்துறையின் விரிவாக்கமும் அது பன்முகப்படுத்தப்படலும்

இக்கட்டுரையில் தென்கொரியாவின் ஏற்றுமதி விரிவாக்கம், அத்துடன் **அவை தொடர்பான** குறிப்பான அம்சங்கள் பற்றி விசேட அவதானம் செலுத்தப்படுகின்றது. *1963 - 73* காலப் பகுதி கொரியாவின் தாராளக் கொள்கைகளின் ஆரம்பகாலப் பகுதியாகும். இக்காலப்பகுதியில் காணப்பட்ட போக்கு இலங்கையில் தாராளக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்ட *1978 - 85* காலகட்ட பகுதியுடன் ஒப்பிடப் படத்தக்கதாகும். தென்கொரிய ஏற்றுமதி பெறுமானம் அமெரிக்க டொலர்களிலும் இலங்கையின் ஏற்றுமதிப் பெறுமானம் நிகழ்கால சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் (சிஎஉ) அடிப்படையிலும் விளக்கப்பட்டுள்ளன.

#### ஏற்றுமதி விரிவாக்கம்

உண்மை நியதிகளின் அளவு கடந்த விகிதாசாரத்தால் தென்கொரிய ஏற்றுமதிகளின் பெறுமதி வளர்ச்சி பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. தளம்பல்கட்டுப்பட்ட போதிலும் ஆண்டுக்குரிய வளர்ச்சி விகிதமும் தொடர்ச்சியாக சாதகமான வளர்ச்சிப் போக்குகளைக் கொண்டதாகவே இருந்தது. வளர்ச்சியின் சாதகமான போக்கு உண்மையில் *1959* லேயே ஆரம்பித்திருந்த போதிலும் *1963* முதல் வளர்ச்சி வீதம் அதிகம் உறுதி கொண்டதாக அமைந்திருந்தது. ஆனால் *1973* மட்டும் இப்போக்குக்கு விலக்கான ஆண்டாகக் காணப்பட்டது. *1963* இல் *87* மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த ஏற்றுமதி வருமானம் *1973* இல் *3271* மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்தது. ஆண்டுக்குரிய சராசரி அதிகரிப்பு 50 சதவீதமாகக் காணப்பட்டது. இது வியப்புக்குரிய **அதிகரிப்பாக** வர்ணிக்கப்படக்கூடியதே. எனினும் இலங்கையில் தாராளக் கொள்கைகள் அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் *1978 - 85* காலப்பகுதியில் வளர்ச்சி விகிதம் *11* சதவீதமாக மட்டுமே அமைந்திருந்தது. உண்மை நியதிகளில் இந்த அதிகரிப்பு இரண்டு மடங்குகளுக்குக் குறைவானதாகக் காணப்பட்டது. *1978* இல் *675* மில்லியன் சிஎஉ யாக இருந்த ஏற்றுமதி வருமானம் *1985* இல் *1312.7* மில்லியன் சிஎஉ மட்டத்தை மட்டுமே எய்தியது. பொதுவாகக் கூறப்படுவதைப்போல *1967 - 73* காலப்பகுதியில் வியட்னாமுக்கான அமெரிக்க அளிப்புகள் தென்கொரியாவின் மொத்த ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் குறிப்பிடத்தக்க தாக்கம் எதையும் ஏற்படுத்தவில்லை.

உண்மை நியதிகளின்படி தென்கொரிய ஆரம்ப பொருட்கள்துறை ஏற்றுமதிகள் 1963இல் 40.8 மில் அமெரிக்க டொலர்களிலிருந்து 1973இல் 381.0 மில்லியனுக வளர்ச்சி பெற்றன. ஆனுல் மொத்த ஏற்றுமதி சம்பாத்தியங்களின் வளர்ச்சி வீதமானது பொருளுற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புடன் தொடர்பு கொண்டதாக இருந்தது. 1963இல் 43.6 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த இத்துறை ஏற்றுமதிகள் 1973ல் 2872.8 மில் அமெரிக்க டொலர்களாக அதிகரித்தன.

ஆரம்ப விவசாய உற்பத்திகளின் விரிவாக்கத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புகளே உள்ளன என அரசாங்கம் அறிந்திருந்தமையால் கைத்தொழில் ஏற்றுமதிகட்கு அது வழங்கிய அழுத்தம் காரணமாகவே ஏற்றுமதி வர்த்தகத்தில் மேற்கூறிய வளர்ச்சி ஏற்படுவது சாத்தியமாயிற்று.

ஒட்டுப்பலகை, பாதணிகள், மின்சார உபகரணங்கள் போன்ற ஊழியச்செறிவு கொண்ட இலகு கைத்தொழில் வகைகளைத் தேர்ந்தெடுத்து மலிவாகவும், தாராளமாகக் கிடைத்தனவுமான தேர்ச்சியற்ற ஓரளவு தேர்ச்சிபெற்றவர்களின் ஊழியத்தைப் பயன்படுத்தி ஒப்பீட்டளவான அனுகூலத்தை பெற்றுக்கொண்டமை தென்கொரிய கைத்தொழில் வளர்ச்சியின் குணுதிசயமாகும். பொருள் உற்பத்தித்துறையின் வளர்ச்சி வீதம் தாழ்பான தளத்தை தனது ஆரம்பகட்டமாகக் கொண்டதாக இருந்தது. பாரியகைத்தொழில்பொருட்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக 1962இல் 10 மில்லியன் அமெரிக்க டொலருக்குக் குறைவாக மட்டுமே பங்களிப்புச் செய்திருந்தன. போலிச்சிகை, மனிதச்சிகை என்பன அக்காலப்பகுதியில் ஏற்றுமதி செய்யப்படவில்லை. ஆனுல் குறுகிய காலப்பகுதியில் இக் கைத்தொழில்கள் பாரிய விகிதாசாரத்தால் அதிகரித்து 1970 களில் ஆண்டு தோறும் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை உழைப்பனவாக வளர்ச்சி கண்டன.

தென்கொரிய ஏற்றுமதித் துறையின் இந்த வியத்தகு சாதனைக்கு அரசாங்கத்தின் திடசங்கற்பம் ஒரு காரணமாக அமைந்தது. மேலும், இரு நாடுகளின் நாணய மாற்று வீதக்கொள்கைகளைப் பகுத்தாயும் போது இக் காலப்பகுதியில் நாணயமாற்றுச் சீர்திருத்தங்கள் இருநாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தென் கொரியாவில் நாணயமாற்று வீதம் தெளிவாக வகுக்கப்பட்டிருந்தமையே பிரித்தறியக் கூடியதாக உள்ளது. வரிவிலக்குகள், முன்னுரிமைக் கடன்கள் போன்ற முதலீட்டுக்கு வாய்ப்பான சூழலை அரசாங்கம் உருவாக்கித்தந்தது. அத்துடன் தென் கொரியர்கள் முனைவு ஆற்றல் மிக்கவர்கள். அந்நாட்டின் துரித அபிவிருத்திக்கு இவை காரணங்களாயமைந்தன. இறக்குமதி செய்யப்பட்ட கைத்தொழில் உள்ளீடுகள், பொறித்தொகுதிகள் என்பவற்றை இலகுவாக கிடைக்கச்செய்து ஏற்றுமதியாளருக்கு இறக்குமதி தகைமைகள் திட்டத்தை வகுத்து தந்து இவற்ருல், ஏற்றுமதிக்கும், இறக்குமதிக்கும் இடையே ஒரு இணைப்பினை ஏற்படுத்தி இதன் வாயிலாக கைத்தொழிற் தளம் பன்முகப்படுத்தப்பட்டது. 1963 - 73 காலப்பகுதி முழுவதும் நிலவிய இறக்குமதி கட்டுப்பாட்டு முறையைக் கருத்தில் கொள்ளும் போது முதலீட்டாளர்கள் இறக்குமதிகளைச் செய்வதற்கு வழங்கப்பட்ட உரிமைகளால் பெருமளவுக்கு கவலைப்பட்டிருக்கக் கூடும் என்பது தெளிவாகின்றது.

ஆய்வுக்குட்பட்ட காலப்பகுதி முழுவதிலும் உண்மையானதாக்கமுள்ள செலாவணி விகிதம் பெயரளவு விகிதத்தைவிட எப்போதும் உயர்வாகக் காணப்பட்டது. இவ்வகையில் நாணய மாற்றுக்கொள்கை ஏற்றுமதி மேம்பாட்டுக்கு மிக அதிகளவு சாதகமாக இருக்கத்தக்க வகையில் வகுக்கப்பட்டிருந்தது. மாறுக

அட்டவணை 2

தென் கொரிய ஏற்றுமதிகளின் அமைப்பும் வளர்ச்சியும் 1961 - 73

| வருடம் | மொத்த ஏற்றுமதிகள் பத்து இலட்சம் டொலர் | வருடாந்த வளர்ச்சி % | முதல்நிலை உற்பத்தி ஏற்றுமதிகள் தொகை ரூ. பத்து இலட்சம் | மொத்தத்தில் % | வருடாந்த வளர்ச்சி % | தயார் செய்யப்பட்ட ஏற்றுமதிகள் தொகை ரூ. பத்து இலட்சம் | மொத்தத்தில் % | வருடாந்த வளர்ச்சி % |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1961 | 42.9 | 32.5 | 33.5 | 78.0 | – | 9.4 | 22.0 | 60.8 |
| 1962 | 56.7 | 32.2 | 41.4 | 73.0 | 23.6 | 15.3 | 27.0 | 62.2 |
| 1963 | 84.4 | 48.8 | 40.8 | 48.3 | -1.4 | 43.6 | 51.7 | 184.8 |
| 1964 | 120.9 | 43.2 | 58.6 | 48.4 | 43.6 | 62.3 | 51.6 | 42.9 |
| 1965 | 180.5 | 49.3 | 68.1 | 37.7 | 16.2 | 112.4 | 62.3 | 80.3 |
| 1966 | 225.8 | 41.7 | 96.1 | 37.6 | 26.4 | 159.7 | 62.4 | 42.1 |
| 1967 | 358.6 | 40.2 | 107.4 | 29.9 | 11.8 | 251.2 | 70.1 | 55.4 |
| 1968 | 500.4 | 39.5 | 113.5 | 22.7 | 5.7 | 386.9 | 77.3 | 54.1 |
| 1969 | 702.8 | 40.4 | 147.7 | 21.0 | 30.1 | 555.1 | 79.0 | 43.4 |
| 1970 | 1003.8 | 42.8 | 164.4 | 16.4 | 11.3 | 839.4 | 83.6 | 51.2 |
| 1971 | 1352.0 | 34.7 | 189.1 | 14.0 | 15.0 | 1162.9 | 86.0 | 38.5 |
| 1972 | 1807.0 | 33.7 | 222.7 | 12.3 | 14.1 | 1584.3 | 87.7 | 36.2 |
| 1973 | 3254.2 | 80.2 | 381.0 | 11.8 | 71.1 | 2872.8 | 88.2 | 81.3 |

இலங்கையில் உண்மையான தாக்கமுள்ள செலாவணி விகிதம் ஏறத்தாழ சகல வர்த்தகப் பங்காளருக்கும் போட்டியாளர்களுக்கும் எதிராக பெருமதியில் குறைவுற்றது. 1978 முதற்கொண்டு ஏற்றுமதிகளுடன் ஒப்பிடும் போது உண்மையான தாக்கமுள்ள செலாவணி விகிதச் சுட்டெண் குறைவடைந்து சென்றுள்ளது. இது இலங்கை ஏற்றுமதிகளின் போட்டித்தன்மையை வெகுவாகக் குறைத்ததுடன் உற்பத்தியாளர்களினதும், ஏற்றுமதியாளர்களினதும் இலாப வாய்ப்பினையும் குறைவடையச் செய்தது. தென்கொரியாவில் இதுவரை அநேகபாகங் கொண்ட (பல்புடை) நாணயமாற்று விகிதம் தொழிற்படுத்தப்பட்டது. 1963 டின் பின்னர் செறிவு மிக்க ஏற்றுமதி ஊக்குவிப்புகளைப் பயன்படுத்தி ஏற்றுமதிகள் மேம்படுத்தப்பட்டன.

இது இலங்கையுடன் ஒப்பிடக்கூடியதாக இருக்கின்றது. இலங்கையின் இறக்குமதிகளுடன் தொடர்பான உண்மையான தாக்கமுள்ள செலாவணி விகிதம் 1978 முதல் குறைவடைந்து சென்றுள்ளது. 1978 அடியாண்டாகக் கொள்ளப்பட்டமையால் அவ்வாண்டுக்குரிய சுட்டெண் 100 ஆகும். இது 1984ல் 161ஆகக் பெறுமதியில் குறைவடைந்துள்ளது. நுகர் பொருட்களின் இறக்குமதிகளைப் பொறுத்தவரை அது பெறுமதியில் அதிகரித்தும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளைப்பொறுத்தவரை துரிதகதியில் பெறுமதியில் குறைவடைந்துஞ் சென்று 1984 இல் 171 என்ற மட்டத்தை அடைந்தது. இதனல் உற்பத்தித்துறையின் ஊக்கம் குன்றியது. அதே வேளையில் நுகர் பொருட்களுக்கான இறக்குமதி கேள்வியை உற்சாகப்படுத்துவதாகவும் அமைந்தது. பெறுமதியில் கூடியதாக உயர்மட்டத்தில் போலியாக பேணப்பட்ட நாணயமாற்று விகித ஏற்றுமதித்துறையின் அபிவிருத்தி வீழ்ச்சியை மேலும் மோசமானதாக்கியது. பெறுமதியில் கூடிய நாணய மாற்று விகிதம் இறக்குமதி கட்டுச் சார்பாக அமைந்ததுடன் உற்பத்திச் செலவு உயர்வடைந்து செல்வதற்கும் காரணியாக விளங்கியது சர்வதேச சந்தைகளிற் காணப்பட்ட நிலையற்ற தளம்பல்களின் தாங்கங்களினுல் உற்பத்தியாளர்களின் இலாப ஈவு உற்சாகம் இழக்கத்தக்களவுக்கு குறைவுற்றது. இதனல் மிகக் குறைந்தளவு முதலீடுகள் மட்டுமே மேற்கொள்ளப்படலாயின. அறிவிக்கப்பட்ட குறிக்கோள்கட்கு முரணுன வகையிலேயே இலங்கையில் தாராளமாகக் கொள்கைகள் செயற்படுத்தப்பட்டன. (லக்ஷ்மன் 1986)

இறக்குமதிகளை விரிவாக்கல் செய்வதன் மூலம் நுகர்வோரின் கேள்வியைப் பூர்த்தி செய்து அதன் வாயிலாக பணவீக்கத்தைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்காக அரசாங்கத்தால் முனைவுடன் கைக்கொள்ளப்பட்ட கொள்கையால் அதிகளவுக்கு இந்நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்கக் கூடும். தென்கொரியாவில் அரசாங்கச் செலவினங்களைக் குறைத்தல் போன்ற கேள்வி முகாமைத்துவம் ஊடாகப் பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கைத்தொழில் நாடுகளின் பணவீக்க விகிதம் குறைவாக இருந்தமையால் 1960 களில் இறக்குமதி விலைகளும் ஒப்பீட்டளவில் குறைந்தனவாகவே காணப்பட்டன. இதிலிருந்து புறச் சூழலும் தென்கொரிய அபிவிருத்திக்குச் சாதகமாக இருந்ததென்பது தெளிவாகின்றது. மதிப்பிறக்கத்தை பொறுத்தவரை கூட தென்கொரிய அரசாங்கம் நிலையான கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்தது. விசேட இறுப்புகளை விதித்ததன் மூலம் மிகை இலாபங்களை ஈர்த்து விரிவாக்கத் தாக்கங்களிலிருந்து பொருளாதாரத்தைக் காத்தது. நாணய மாற்று விகிதமும் இறுப்புச் சீர்திருத்தங்களும் தென்கொரியாவின் ஏற்றுமதி அபிவிருத்திப் பாதையை நெறிப்படுத்துவதற்காக அடிக்கடி பயன்படுத்தப்பட்டன.

ஒப்பிடக்கூடிய 1978 - 85 காலப்பகுதியில் இலங்கையில் இக்கொள்கையின் அமுலாக்கம் முரண்பாடுகளை உள்ளடக்கியதாக அமைந்தது. பாரம்பரிய விவசாயத் துறையின் சராசரி வளர்ச்சி விகிதம் 6 சதவீதமாக இருந்த போதிலும் 1983, 1984 ஆகிய இரு ஆண்டுகளைத் தவிர ஆண்டுக்குரிய வளர்ச்சி விகிதம் எதிரிடையானதாகவே இருந்தது. சாதகமான சர்வதேச விலகலின் காரணமாக ஏற்றுமதிச் சம்பாத்திய மட்டத்தை நிலையாகக் காக்கக் கூடியதாக இருந்தது. கைத்தொழில் மற்றும் விவசாயத்துறைகளில் மிக உயர்ந்த அளவில் அரசாங்கம் பங்கு கொண்டதன் காரணமாக இலங்கையில் இத்துறையில் காணப்படவேண்டிய திறமைத் தகைமை இல்லாதொழிக்கப்பட்டது. ஏனெனில் இலாப வாய்ப்பு பொதுத்துறை நிறுவனங்களின் பிரதான குறிக்கோளாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதனலாகும்.

ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தேசிய அபிவிருத்தி வங்கி ஆகிய நிறுவனங்கள் ஊடாக முன்னுரிமை கொண்ட கடன் வசதிகள் வழங்கப்பட்ட போதிலும் ஏற்றுமதிக்கு என பேரண்ட மட்டத்திலான இலக்கு மட்டுமே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனல் தென் கொரியாவிலோ எனில் இலக்குகள் திடமாக எய்தப்பட்டன. அத்துடன் தனியார் துறையும் சமஞன பங்கினை வகித்தது. தென் கொரியாவில் உற்பத்திப் பொருட்கள் மட்டத்திலும் உற்பத்தி நிறுவனங்கள் மட்டத்திலும் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன. இலக்குகளை எய்துவதில் ஏற்றுமதியாளரால் எதிர்கொள்ளப்பட்ட இன்னல்களைக் களைவதில் அரசாங்கம் கண்ணுக இருந்தது. சென்மதி

நிலுவை மோசமடைந்து சென்றமைக்கு அமைவாக 1970 களின் ஈற்றுப்பகுதியில் அந்நிய நிதிக் கிடைப்பனவும் குறைவடைந்து சென்றது. ஆனால் இதனால் பொருளாதாரம் எதிர்கொண்ட ஆபத்தான நிலை 1980 களின் ஆரம்பம் வரையும் புலப்படவில்லை.

தென்கொரியாவில் இறக்குமதிகளைத் தாராளமாக்கல் கோலாகலமாகத் தொடக்கி வைக்கப்பட்டது எனினும் ஏற்றுமதி - இறக்குமதி இணைப்பு முறையினூடாக ஏற்றுமதிகளின் விலை திறன் மட்டங்களைத் திருத்துவதற்காக இறக்குமதிகள் திசைப்படுத்தப்பட்டன. இலங்கையில் இறக்குமதிகள் ஏற்றுமதியாளருக்கான ஒருவகை ஊக்குவிப்பாக அமைந்தன. சென்மதி நிலுவைப் பிரச்சினைகள் ஏற்பட்ட வேளைகளில் இறக்குமதிகள் தொடர்பாக மேலும் கட்டுப்பாடான கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. இத்தகைய ஒரு நிலை 1968/69இல் தோன்றியது.

இக்காலப் பகுதியில் இலங்கையின் ஆக்கத்துறை சராசரியாக 30 சதவீத வளர்ச்சியைப் பெற்றது. எனினும் புடவை, பெற்ரோலியம் ஆகிய இரு துறைகளைச்சார்ந்த குவிவான வளர்ச்சியாக மட்டுமே இது அமைந்தது. உள்ளூர் கைத்தொழில் மயவாக்கத்துக்குப் பக்கசார்புடையதாக இக்கொள்கை அமுலாக்கப்பட்டமையை இப்பண்பு சந்தேகத்திற்கு இடமின்றி பிரதிபலிப்பதாக உள்ளது. உள்ளூர் சந்தையை நோக்கிய பக்கச் சார்பு கொண்டதாகவும், உயர்ந்த காப்பீடுகளைப் பெற்றதாகவும் தனியுரிமை கொண்ட பொதுத்துறை நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகவும் கைத்தொழில் துறை நெறிப்படுத்தப்பட்டது. மேலும் மறைமுக ஏற்றுமதியாளர்களாகிய உள்ளூர் கைத்தொழில்கட்கு இறக்குமதி செய்யப்பட்ட பொறித்தொகுதிகள், கருவிகள் என்பவை கிடைக்காதபடியால் கைத்தொழில்துறை ஊக்கம் குன்றியதாகவே இருந்தது.

1977 இல் இறக்குமதிகள் தாராளமாக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆக்கத்துறையில் காணப்பட்ட உள்ளூர் உற்பத்தியாளர் பலமான போட்டியை எதிர்கொள்ள வேண்டிய நிலை தோன்றியது. குடியேற்ற யுகத்திலிருந்து உயர்ந்த தரங்கொண்டவையாக இருந்த போதிலும் உள்ளூர் வாசிகள் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களையே விரும்பித் தேர்ந்தெடுக்கின்றனர் இதனால் உள்ளூர்ச்சந்தை உள்ளூர் கைத்தொழில் மயமாக்கலுக்கு ஊக்கமளிப்பதாக அமையவில்லை.

ஏற்றுமதித் துறை விவசாயத் துறையின்பால் பக்கஞ் சார்ந்ததாகவே இருந்தது. சர்வதேச விலைகளின் அசைவுக்கேற்ப விவசாய விளை பொருட்களின் நிரம்பலை தாமதமின்றி மாற்றியமைக்க முடியாது. அத்துடன் ஏற்றுமதித்துறை அதிகளவு இடரூற்றையுந் தன்னகத்தே கொண்டதாகும். இதனால் விரைவாக இலாபமீட்டிக் கொள்ளக்கூடிய இறக்குமதி வர்த்தகம் விருப்புத் தேர்வைப் பெறலாயிற்று. அபிவிருத்திப் படிமுறைக்கு இரு நாடுகளின் அரசாங்கங்களும் ஆளுமை கொண்ட பங்கினை ஆற்றியுள்ளன. குறிப்பாக ஏற்றுமதியைப் பொறுத்தவரை இப்பங்களிப்பு அதீதமானதாக இருந்தது. உண்மையில் தென்கொரியாவில் ஏற்றுமதி துறையின் வளர்ச்சியை அரசாங்கம் பணவியல், இறையியல் கொள்கைகளூடாக நெறிப்படுத்தியது எனக் கிரகிக்க முடிகின்றது. ஆனால் இலங்கை அரசாங்கம் மிகச் சாந்தமான பங்கினையே ஆற்றியுள்ளது. தென்கொரியாவில் ஏற்றுமதி வர்த்தகம் தொடர்பாக நிலையான கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க சாதனைக்கு வழிவகுத்தது. ஆனால் இலங்கையில் வெளிப்படுத்தப்பட்ட தாராள கொள்கைகட்கும் சமூக நல குறிக்கோள்கட்குமிடையே சில கொள்கைகள் முரண்படுவனவாக இருந்தன.

### ஏற்றுமதித் தளத்தைப் பன்முகப்படுத்தல்

ஆரம்ப பொருள் உற்பத்தியினதும் ஆக்கப் பொருள் உற்பத்தியினதும் பங்கினை கருத்திற் கொள்ளும்போது 1963 முதல் தென்கொரியாவில் புலப்படத்தக்க வகையில் பன்முகப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. 1962 இல் மொத்த ஏற்றுமதியில் 73 சதவீதம் ஆரம்பப் பொருட்களாக இருந்தன. இது 1963 முதல் படிப்படியாக குறைந்து சென்று 1973 இல் 11.8 சதவீதமாக அமைந்தது. ஆக்கத்துறை ஏற்றுமதிகள் 1962 இல் 27 சதவீதமாக இருந்து 1973 இல் 88.2 சதவீதமாக உயர்வடைந்தன. உண்மை நியதிகளிலும் இவ்வளர்ச்சி வியக்கத்தக்கதாகவே இருந்தது. 1962 இல் 15.3 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த ஏற்றுமதிப் பெறுமானம் 1973 இல் 2872.8 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. (அட்டவணை 2 ஐப் பார்க்கவும்)

பன்முகப்படுத்தலின் போக்கை மேலும் நுணுக்கமாகப் பார்க்கும்போது 1973 இல் தயாரித்த ஆடைகள் மொத்த ஏற்றுமதியில் 23 சதவீதமாகவும் ஆக்கத்துறை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 50 சதவீதமாகவும் காணப்பட்டன.

புடவை, அணியும் ஆடைகள் என்பவற்றின் உற்பத்தி, ஏற்றுமதி என்பவற்றில் வலிவுள்ள பரவலான விளைவுகளைத் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது இந்த உற்பத்திப்படிமுறைகளில் இடை நிலைப் பொருட்களிலிருந்து முடிவுப் பொருட்கள் வரையிலான துறை வாரியான படிமுறை அமைப்பொன்றினை தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. புடவை உற்பத்திக்கும் ஆடைகள் உற்பத்திக்கும்

இடையே காணப்படும் காப்புரீதியிலான பரந்த பின் இணைவுகள் கைத்தொழிற் தளத்தை விரிவுபடுத்துவதன் மூலம் சில இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியைப் பிரதியீடு கொள்வதற்கு அரசாங்கம் வழங்கிய தேர்ந்த ஆதரவின் விளைவாக ஏற்பட்டவையாகும். (வெர்பூருகன்: 88:185)

தென்கொரியா மிக நெகிழ்வுள்ள கைத்தொழில் கொள்கை ஒன்றினைப் பின்பற்றியது. புறச்சூழல்களில் ஏற்பட்ட மாறுதல் கட்கிணங்க விரைவில் அது தன்னை மாற்றி அமைத்துக் கொண்டது. பல்லிழை உடன்பாட்டின் கீழ் இறக்குமதிப் பங்கீட்டுமுறை ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தென்கொரியா தனக்கெதிரான பேதப்படுத்தப்படலைத் தவிர்க்க வேண்டி நேர்ந்தது. இதற்காக அந்நாடுவிலையுந் தரமுங் குறைந்த பொருட்களையும் தரமும் விலையும் அதிகமான புடவைகளையும் ஒரே நேரத்தில் உற்பத்தி செய்யும் உத்தியைக் கைக்கொண்டது. கைத்தொழில்கட்கிடையேயான சீராக்கங்கள் மூலம் ''காப்பீட்டுக் கூட்டுக்களால்'' கைத்தொழில்கள் செயலற்றுப் போகும் நிலை விலக்கப்பட்டது. (சிங்: 296)

மேற்கின் தொகை வடிவிலான வரையறைகள் தென்கிழக்காசியாமீது சாதகமான விளைவுகளை ஏற்படுத்தின. செலவுகளைச் சுருக்குதல், உற்பத்தி மட்டங்களைச் சீர்திருத்துதல், பன்முகப்பட்ட சந்தைகளை நோக்கி நகர்தல் போன்றவற்றை கட்டாயப்படுத்தின. கிழக்கைரோப்பிய நாடுகள், ஆபிரிக்க நாடுகள் என்பவையே இவை நாடிய புதிய சந்தைகளாகும். தாமதமாக தாராளக் கொள்கைகளைப் பின்பற்றிய இலங்கை போன்ற நாடுகள் போட்டி நிலையைப் பேணுவதற்காக உயர்வான திறமையை எய்த வேண்டிய நிலையை இச்சீராக்கங்கள் தேவைப்படுத்தின.

தென்கொரியாவில் மொத்த ஏற்றுமதிகளில் ஆக்கத்துறையின் பங்கு உயர்த்த விகிதத்தால் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றது. 1962 இல் 27.0 சதவீதமாக இருந்த இத்தகைய ஏற்றுமதிகள் 1973 இல் 88.2 சதவீதமாக அதிகரித்தன. 1960 களின் ஈற்றுப்பகுதியில் முக்கிய உற்பத்திகளின் பங்களிப்பு அதிகளவிற்கு உறுதியாக காணப்பட்டமை பன்முகப்படுத்தலின் விளைவை பிரதிபலிப்பதாக உள்ளது. ஏனைய ஆக்கப் பொருட்களின் பங்கு அதிக வேகத்துடன் உயர்ந்து சென்றமையை இக்காரணி வெளிக்காட்டுகின்றது.

இலங்கையின் ஏற்றுமதித் துறை அமைப்பில் உற்சாகமூட்டும் இந்த அம்சம் காணப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை. பாரம்பரியமான மரப்பயிர்த் துறை ஏற்றுமதிக்குப் பெருமளவு பங்களிப்பை வழங்கி வந்த வேளையில் 1978 இல் 73 சதவீதமாக காணப்பட்ட அதன் பங்களிப்பு 1985 இல் 49 சதவீதமாகக் குறைவுற்றது. ஆக்கத்துறையின் பங்களிப்பு 1988 இல் 14 சதவீதத்திலிருந்து 1985 இல் 39 சதவீதமாக அதிகரித்துள்ளது. அமைப்பு முறையில் ஏற்பட்ட திருப்தியான மாற்றமென இதனை பொருள் கொள்ளல் ஆகாது. ஆக்கத்துறையின் உள்ளேயே சில உற்பத்திகள் குறிப்பாக பெற்றோலியம், புடவை ஆகிய இரண்டும் இணைந்து இக் காலப் பகுதியின் மொத்த ஆக்கத்துறை ஏற்றுமதிகளின் 79 சதவீத முதல் 95 சதவீதம் வரையிலான பங்களிப்பை வழங்கியுள்ளன.

இரு நாடுகளிலும் மிக அதிகளவு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தன. கொரியன் உற்பத்தி விளைதிறன் நிலையத்தின் மதிப்பீடுகளின்படி (வெஸ்டபால்: 75:82) 1969 இல் சகல பண்டங்களுக்குமான நேரடி இறக்குமதி செறிவு 41.7 சதவீதமாக இருந்தது. ஏற்றுமதி செய்யப்பட்ட ஆக்கப் பொருட்களை பொறுத்தவரை இது 53.8 சதவீதமாகக் காணப்பட்டது. இலங்கையிலுங்கூட இறக்குமதி செய்யப்பட்ட உள்ளடக்கம் மிக அதிகமானதாக காணப்பட்டது. குறிப்பாக பெற்றோலியம், புடவைகள் என்பவை முறையே ஏறத்தாழ 85 சதவீதம், 70 சதவீதமான இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை அடக்கியனவாகக் காணப்படுகின்றன. குறிப்பாக இலங்கை ஏற்றுமதித் துறை எந்தளவுக்கு அந்நிய ஆதிக்கத்துக்குட்பட்டதாக உள்ளது என்பதை இது சித்திரிக்கின்றது.

தென்கொரியாவில் ஆக்கப் பொருள் ஏற்றுமதி துறையின் வரிவாக்கத்தின் பரந்த விசாலிப்புக்கு ஏற்றுமதி துறைக்கு இடைநிலைப் பொருட்களை வழங்குவோருக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புக்கள் காரணமாக இருந்திருக்கக்கூடும். சலுகை அடிப்படையிலான கடன் வசதிகள், தீர்வை, வரிவிலக்குகள் என்பவை அவர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புகளாகும். பிலாசா கூறுவதைப் போல ''வெளி நோக்கிய கொள்கை உத்தி இறக்குமதிப் பிரதியீட்டுக்கு பாரபட்சம் காட்டி ஏற்றுமதிகட்கு சலுகைகளை வழங்கும் ஓர் உத்தியெனக் கொள்ளப்படலாகாது. மாறாக, உள்ளூர் சந்தைக்கும் ஏற்றுமதிச் சந்தைக்கும் உற்பத்தியை மேற்கொள்வதற்கு ஒரே தன்மையான ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுவதை அது தனது பண்பாகக் கொண்டது.'' இலங்கையைவிட தென் கொரியாவை பொறுத்தவரை இவ்விளக்கம் பொருத்தமானதாக இருக்கின்றது. ஏனெனில் தனியார் துறையினரிடம் தொழில்களை ஒப்படைப்பதற்காக அண்மைக் காலத்தில் சில எத்தனங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இலங்கையின் உள்ளூர் கைத்தொழில்கள் உயர்ந்த காப்பீடுகளைப் பெற்றனவாகவும் பொதுத் துறையின் தனியுரிமைகளாகவுமே காணப்பட்டன.

### அட்டவணை 3
### இலங்கை ஏற்றுமதிகளின் அமைப்பு 1978 - 85
### (மொத்த ஏற்றுமதிகளில் பிரதான வகைகளின் சதவீதம்)

| | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை | 48 | 37 | 35 | 31 | 30 | 33 | 42 | 33 |
| இறப்பர் | 15 | 16 | 14 | 14 | 11 | 11 | 9 | 7 |
| தென்னை | 10 | 11 | 7 | 7 | 7 | 8 | 6 | 9 |
| - எண்ணெய் | (25) | (30) | (4) | (14) | (24) | (23) | (14) | (31) |
| - துருவல் | (50) | (46) | (57) | (53) | (41) | (47) | (55) | (43) |
| பாரம்பரிய பயிர்கள் மொத்தம் | 73 | 64 | 56 | 52 | 48 | 52 | 57 | 49 |
| சிறு விவசாயம் | 5 | 6 | 5 | 7 | 7 | 6 | 4 | 4 |
| - கோப்பி | (12) | (12) | (5) | (5) | (7) | (11) | (17) | (21) |
| - கறுவா | (23) | (23) | (25) | (30) | (19) | (14) | (21) | (23) |
| - கராம்பு | (5) | (11) | (22) | (18) | (14) | (25) | (14) | ( 3) |
| - எள்ளு | (21) | (17) | (15) | (9) | (16) | ( 5) | (17) | ( 2) |
| - மரமுந்திரி | (13) | (1) | (4) | (5) | (4) | ( 6) | ( 5) | ( 3) |
| விவசாய மொத்தம் | 78 | 70 | 61 | 59 | 55 | 58 | 61 | 53 |
| இரத்தினக்கல் ஆபரணங்கள் | 4 | 3 | 4 | 3 | 3 | 4 | 2 | 2 |
| தயாரிப்பு கைத்தொழில்கள் | 14 | 24 | 31 | 34 | 38 | 35 | 34 | 39 |
| - கடல்படுபொருள் | (2) | (9) | ( 5) | (5) | (5) | (5) | (5) | (3) |
| - புடவை | (26) | (31) | (33) | (42) | (42) | (53) | (59) | (56) |
| - பெட்ரோலியம் | (53) | (53) | (57) | (53) | (40) | (31) | (26) | (27) |
| - தோல் | (.6) | (.3) | (.4) | (.2) | (.6) | (.9) | (2) | (2) |
| - இறப்பர் | (.2) | (.1) | (.4) | (.2) | (2) | (.6) | (.8) | (1) |
| - மட்பாண்டம் | (4) | (3) | ( 2) | (2) | (2) | (2) | (1) | (2) |
| - இயந்திர உபகரணம் | (9) | (150 | (15) | (5) | (2) | (2) | (2) | (2) |

உ.கு. (பிரதான வகைகளின் அளவு அடைப்புக்குள் தரப்பட்டுள்ளது.)

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கியின் (1978 - 86) வருடாந்த அறிக்கைகளின் அடிப்படைத் தரவுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

தென் கொரியாவில் இடைநிலைத் துறையில் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் செலவுகளை குறைப்பதற்கும் பொருளாதாரத்தில் பின்னிணைவுகளை ஏற்படுத்துவதற்கும் உதவியுள்ளன. இலங்கையில் இடைநிலை இறக்குமதிகள் மீதான பாதகமான நாணய மாற்றுக்கொள்கை உள்ளூர்க் கைத்தொழில் மயமாக்கத்தை சேதப்படுத்தும் கொள்கையில் பிரதிபலிக்கலாயிற்று. ஏற்றுமதிக்கான கைத்தொழில்களுக்கு ஆதரவாகக் காட்டப்பட்ட ஒரு பக்கச் சார்பு உற்பத்தி துறையானது பெருமளவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளில் தங்கியிருக்கவேண்டிய நிலையை மட்டுமின்றி குறிப்பிட்ட சில பொருட்கள் மீது அதிகளவு குவிப்பு ஏற்படுவதற்கும் வழிவகுத்தது.

இறுதியாக, தென் கொரியாவின் கைத்தொழில் மயக் கொள்கை அந்நாட்டைக் கைப்பற்றி இருந்த, 1910 - 1945 காலப்பகுதியிலேயே ஆரம்பித்துவிட்டது. ஜப்பானியரின் தொழினுட்ப முகாமைத்துவ ஆற்றல்களும் அந்நாட்டின் கைத்தொழிற்துறை பின் வந்த ஆண்டுகளில் எய்திய வியக்கத்தக்க சாதனைகட்கு மறைமுகமாகப் பங்களிப்புச் செய்திருக்கக் கூடும். கொரிய யுத்தமானது போக்குவரத்து தொடர்புறுத்தல் போன்ற உள்ளமைப்பு வசதிகள் கணிசமான அளவுக்குச் சேதப்படுத்துவதற்கு காரணமாக இருந்த போதிலும் தென் கொரியாவின் கைத்தொழில் வெற்றிக்கு 1920 களில் இருந்து 1940 கள் வரை ஜப்பானிய ஆட்சியின் போது அவர்கள் சம்பாதித்த கைத்தொழில் அனுபவம், தொழினுட்ப ஆற்றல்கள், முனைவு என்பவை ஓரளவுக்குக் காரணமாக அமைந்தன.

இதே நிலை இலங்கையில் நிகழவில்லை. 1960 வரை விவசாய பொருளாதாரமே இங்கு ஆதிக்கம் பெற்றதாக இருந்தது. அதிகாட்டமடுகள் வழங்கப்பட்ட ஆட்சிக் காலத்தில் பொதுத்துறை ஆதிக்கம் மிக்க பங்கினை ஆற்றும் சூழ் நிலையில் கைதொழில் வளர்ச்சி ஆரம்பமானது. விலை திறனையோ தரத்தையோ அபிவிருத்தி செய்யவேண்டிய தேவையில்லாத வசப்பட்ட சந்தை ஒன்றும் இக் கைத்தொழில் உற்பத்திகட்கு இருந்தது. தாராளக் கொள்கைகளை கடைப்பிடிக்க முன்னர் இலங்கை அரசாங்கம் இக் கருவியையும் கவனத்துக்கு எடுத்திருத்தல் வேண்டும்.

### இலங்கையினதும் தென் கொரியாவினதும் ஏற்றுமதிச் சாதனைகள் மீது புறக்காரணிகளால் ஏற்படுத்தப்பட்ட தாக்கம்

இயற்கை வளக் கொடைகளைப் பொறுத்தவரை வறியவையாகவும், கேள்வி நிரம்பல் என்பவற்றினூடாக சர்வதேசச் சந்தையில் தமது வலுவை நிலைநாட்ட முடியாதவையுமான, இலங்கை தென்கொரியா போன்ற நாடுகள் உலகளாவிய பொருளாதார நிலைகளில் ஏற்படும் தளம்பல்களால் மிக அதிகளவில் பாதிக்கப்படக் கூடியவையாகும். உற்பத்திக்காக இறக்குமதியிலும் அந்நிய செலாவணிச் சம்பாத்தியத்துக்காக ஏற்றுமதியிலும் தங்கியிருக்கவேண்டிய நிலை உயர்வடைந்து செல்லும்போது இந்நிலை மேலும் உக்கிரமடைகின்றது. இந்நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியில் இயக்க

முள்ள புறச்சூழல்கள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனால் பல்வேறு சீர்திருத்தங்களின் விளைவுகளைத் தீவிரமாக்கியிருக்கக்கூடிய அல்லது இல்லாதொழித்திருக்கக்கூடிய பெரிய புறக்காரணிகளை இனங்காணுவதற்கு இப்பகுதியில் எத்தனிக்கப்படுகின்றது.

நிலையான சந்தை விலைகளின் அடிப்படையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி நியதிகளில் கணிக்கும்போதும் ஆக்கத்துறையின் வளர்ச்சியின் உண்மை நியதிகளில் கணிக்கும்போதும் தென் கொரியாவில் சாதனை மெச்சத்தக்கதாகும்.

1963 – 73 காலப்பகுதியில் கைத்தொழில் நாடுகளின் உலகச் சாதனையைவிட மிக அதிகமான உயர் வளர்ச்சி விகிதத்தை தென் கொரியா பதிவு செய்திருந்தது. தென் கொரியாவின் வெற்றிக்கு இறக்குமதிகளை தாராளப்படுத்தியமை, யதார்த்தமான நாணய மாற்று விகிதம், ஏற்றுமதியாளர்கட்கு ஊக்குவிப்புக்கள் வழங்கியமை என்பவை காரணமாக அமைந்தன எனினும் சுமிட்ஷ் 'குறித்த சர்வதேச நிலைகள் காரணமாக ஒரே நேரத்தில் வளர்ச்சிபெற்ற நாடுகளின் சந்தைகளிற் பிரவேசிக்கச் சந்தர்ப்பம் கிட்டியமை பல தேசிய கூட்டாண்மை நிறுவனங்கள் தமது உற்பத்தித்தலங்களை புறப் பகுதிகட்கு இடமாற்றியமை போன்றவற்றின் பதிற் குறியாக சர்வதேச நிதிகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை'' என்பவையும்; இதன் காரணமாக இருக்கலாம் என வாதிடுகின்றார். இதனைவிட ''ஒடுக்கியாளும் தன்மை கொண்டிருந்தபோதும் வலிவு மிக்கதும் சகல நாடுகளாலும் நம்பிக்கை கொள்ளக் கூடியதுமான ஆட்சி நிலவியமை ........ இறக்குமதிப் பிரதியீட்டுக் கொள்கைகள் காரணமாக உருவாக்கப்பட்ட தொழினுட்ப உள்ளமைப்புக் காணப்பட்டமை ..... ...கைத்தொழில் வளர்ச்சிமீது அரச கட்டுப்பாடு'' ஆகியவை ''இந்த இயக்கமுள்ள வளர்ச்சியை ஏற்படுத்துவதில் பரந்ததும் முடிவானவையுமாகும்''

''மேற்கில் போரட்டப் போக்குக் கொண்ட தொழிலாளரின் பிரச்சினைகளையும் உயர் செலவுகளையும் எதிர்கொண்ட'' பல் தேசிய கூட்டாண்மை நிறுவனங்களுக்கு தென் கொரியா உட்பட்ட புதிய கைத்தொழில் நாடுகளின் அழைப்பு வரப்பிரசாதமாக அமைந்தது. (சில்: 84: 291) ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் கைத்தொழில்களின் செலவுகள் உயர்ந்து சென்றன. அத்துடன் ஜப்பானுடன் போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தமுங் காணப்பட்டது. இக் காரணிகள் மிகக் குறைந்த கூலியுடன் ஊழியத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் வரி விலக்குகள், கடன் வசதிகள் போன்ற தாராளமான ஊக்குவிப்புகளையும் பெறக் கூடியதாகவுமிருந்த தென்கிழக்காசியாவுக்கு கைத்தொழில்களை இடநகர்த்துவதற்கு ஏவாதுயமைந்தன.

பொருளாதார வளர்ச்சி வீதங்கள் திருப்திகரமாக இருந்தமையால் 1960களில ஆக்கப்பொருட்களின் ஏற்றுமதிக்கான சந்தை மீதான கட்டுப்பாடுகள் மிகக் குறைந்தளவினவாகவே இருந்தன. உண்மை நியதிகளில 1969ஐத் தவிர்ந்த ஏனைய ஆண்டுகளில் ஆக்கத்துறையின் வளர்ச்சி வீதம் 6 அல்லது 7 சதவீதமாக மட்டுமே காணப்பட்டது. இந்த ஆரோக்கியமான பொருளாதார நிலைகள் கைத்தொழில்நாடுகளில பெரிய பொருளாதார நடவடிக்கைகளை ஏற்படுத்தியதனால் கட்டுப்பாடுகள் தேவையானவையாக இருக்கவில்லை. 1967-73 காலப் பகுதியில் உலக வர்த்தகம் ஆண்டுக்கு 18 சதவீத வளர்ச்சி பெறும் வகையில் தீவிரமாக விரிவாக்கங் கண்டது.

1960 களிலும் 70 களிலும் மகத்தான வளர்ச்சிகண்ட பல தேசிய வங்கித் தொழில் சந்தை அதாவது இயூரோ டொலர், பெற்ரோ டொலர் ஆகியவற்றுக்காக சந்தைகள், இவ் விரிவாக்கத்துக்கும் பங்களிப்புச் செய்திருக்கக் கூடும். சர்வதேச நாணய நிதியத்தின் கண்டிப்பான நிபந்தனைகளைத் தவிர்ப்பதற்காக புதிய கைத்தொழில் நாடுகள் வர்த்தக அடிப்படையிலான கடன்களைப் பெறத் தொடங்கின. இதனால் அபிவிருத்தி நோக்கிய தேசிய கொள்கைகளை ஆக்குவதில் அதிகளவு நெகிழ்வுத் தன்மையை இவற்றால் பெறக் கூடியதாக இருந்தது.

தென் கொரியா போன்ற நாடுகளின், இறக்குமதிப் பிரதியீட்டுக் கொள்கைகளில் ஏற்பட்ட தோல்விகளின் காரணமாக பயன்படுத்தப்படாது வீணடிக்கப்பட்டிருந்த தகைமை கைத்தொழில் நாடுகளின் அதிகரித்த சந்தைக் கேள்விக்கிணங்க உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவற்றுக்கு உதவியிருக்கக் கூடுமெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (சுமிட்ஷ்: 84: 13). அத்துடன் 1960 களில் குறைவாக விருத்தியடைந்த நாடுகளின் போட்டியும் மிக குறைவாகவே காணப்பட்டது. இது இலங்கை தாராளக் கொள்கைகளைக் கடைப்பிடித்த காலப்பகுதியில் நிலவிய சூழலைவிட வேறுபட்டதாக அமைந்தது.

1970 களின் ஈற்றுப் பகுதியிலிருந்து உலகளாவிய பொருளாதார நிலைகள் முற்றிலும் வேறுபட்ட போக்கினை அடைந்தன. அமெரிகாவிலும், ஐரோப்பாவிலும் வேலையின்மை அதிகரித்துச் சென்றமையால் அவை காப்பீட்டுக் கொள்கைகளை அதிகளவில் கடைப்பிடிக்கத் தொடங்கின. இது சர்வதேச வர்த்தகத்தில் விரோத பாங்கினைத் தோற்றுவித்தது. மேற்குலகில், கடந்த சில தசாப்தங்களாக புடவை, ஆடை தயாரிப்பு, உருக்கு பாதணிகள் தயாரிப்புத் தொழில்கள் சர்வதேச போட்டியை எதிர்கொள்ள நேர்ந்தது. இறக்குமதிகளின் காரணமாகவே குறைவான இலாபங்

கள், வேலையின்மை, தொழிற்சாலைகளை மூடிவிடுதல் போன்றவை ஏற்படுகின்றன எனத் தொழிலாளர் அமைபுக்கள் வாதிட்டு வருகின்றன. உள்நாட்டு கைத்தொழில்கட்கு காப்பீடுகளை வழங்குவதே இதற்குத் தீர்வுகாணும் மார்க்கம் என்பது இவர்களின் கருத்தாக இருந்தது.

வேறு சிலரின் கருத்துப்படி 1970களில் மேற்குலகு கடைப்பிடித்த காப்பீட்டுக் கொள்கைகள் ''எண்ணெய் அதிர்ச்சி''யை ஒரு ''சாட்டாகக்'' காரணம் காட்டும் தன்மை கொண்டனவாக இருந்தனவேயன்றி உள்ளூர் கைத்தொழில்களின் திறனின்மைகளை மூடி மறைப்பதற்காகவே அவை காப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன.

பல்நார் உடன்பாட்டின் கீழ் குறைந்த உற்பத்திச் செலவுகளைக் கொண்ட குறைவாக விருத்தி பெற்ற நாடுகளின் ஏற்றுமதியாளர்களிடமிருந்து சுயமான இறக்குமதி வரம்புகளை விதிப்பதன் மூலம் வரையறுக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதிகளைப் பன்முகப்படுத்தி வருவதனைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது அதிகரித்துச் செல்லும் காப்பீட்டுப் போக்குகள் அண்மைய எதிர்காலத்தில் குறைக்கப்படமாட்டா எனவே தோன்றுகின்றது. 1970களில் குறைவாக விருத்தி பெற்ற நாடுகளிலிருந்து கைத்தொழில் நாடுகள் மேற்கொண்ட இறக்குமதிகளின் பங்கு அதிகரித்துச் செல்லும் போக்கினைக் கொண்டதாகக் காணப்பட்டது. தயாரித்த ஆடைகள், புடவை, தோல் பொருட்களின் ஏற்றுமதியில் ஏற்பட்ட முழுமையான வளர்ச்சி 7.8 சதவீதமாக இருந்த வேளையில் குறைவாக விருத்தி பெற்ற நாடுகளிலிருந்து செய்யப்பட்ட இறக்குமதிகளின் வளர்ச்சி 14.8 சதவீதமாக இருந்தது. உலோகமல்லாத கனியங்களைப் பொறுத்தவரை விருத்தி குன்றிய நாடுகளின் ஏற்றுமதி 13.2 சதவீத வளர்ச்சியைக் கண்டது. இது சராசரி வளர்ச்சியான 5 சத வீதத்தை விட மிக அதிகமானதாகும். பொறிகள் கருவிகளின் சராசரி இறக்குமதி வளர்ச்சி விகிதம் 7 சதவீதமாக இருக்கையில் குறைவாக விருத்தி பெற்ற நாடுகளிடமிருந்து பெற்றுக்கொண்ட இறக்குமதிகள் 21.8 சதவீதமாக இருந்தன.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் 1970 — 79 காலப்பகுதியில் ஆக்கத்துறை இறக்குமதிகளின் மொத்த வளர்ச்சி விகிதம் 8.1 சதவீதமாகக் காணப்பட்டது. (ஹியூஜஸ், வியல் புரேக்: 81: 135) '' எனவே புதிய கைத்தொழில் நாடுகளின் மாதிரியைக் கொண்டு ஆராயுமிடத்து விருத்தி குன்றிய நாடுகளின் ஏற்றுமதி குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற மாட்டாதென்பதுடன் இன்னும் அதிகமான காப்பீட்டு நடவடிக்கைகள் மேலுந் தூண்டிவிடப்படக் கூடுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

''சர்வதேச வர்த்தகமே காப்பீட்டுக்கான கோலங்களை ஊடுருவுவதாக உள்ளது. ஆரோக்கியமான ஒரு பொருளாதாரத்தில் வர்த்தகம் வளர்ச்சிக்கு அடிகோலுகின்றது. மாற்றங்களுக்கான சீராக்கங்கள் எளிமையாக்கப்படுகின்றன. தாராளப் போக்குகள் ஆதிக்கஞ் செலுத்துகின்றன. நோய்வாய்ப்பட்ட உலகளாவிய சூழலில் உற்பத்திக் காரணிகளின் வேலையின்மைக்கு அல்லது அவற்றின் குறை பயன்பாட்டுக்குக் காரணமானதென கிரகிக்கப்படுகின்றது. எனவே சீராக்கங்களை இவை கஷ்டமானவையாக்குகின்றன. இவற்றின் வாயிலாக காப்பீட்டை நோக்கி இவை இட்டுச் செல்கின்றன.''

புதிய கைத்தொழில் நாடுகள் புடவை, பொறிகள், தோற்பொருட்கள் போன்ற கைத்தொழில்களில் ஏற்கனவே திறமை பெற்றுள்ளன. எனவே இலங்கை போட்டிபோடக்கூடிய நிலையை அடைவதற்கு உயர் மட்ட திறமையை அது பெற்றுக்கொள்ளல் வேண்டும். நுண்பாக இலத்திரனியலை அடிப்படையாகக் கொண்ட தொழினுட்பத்தில் ஏற்படும் முன்னேற்றம் விரக்தி குன்றிய நாடுகளில் கிடைக்கும் - குறைந்த கூலியில் தொழிலாற்ற முன்வரும் தொழிலாளரைப் பயன்படுத்துவதால் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒப்பீட்டளவான அனுகூலங்களை வஞ்சனையாற் கெடுப்பதாக உள்ளது.

அத்துடன் அதிகளவு கடன்பட்ட நிலையும் வர்த்தகக் கடன்களுக்கு உயர் வட்டி விகிதம் அறவிடப்பட்டாலும் சர்வதேச நாணய நிதியத்தை பல நாடுகள் நாடுவதற்கு வழிவகுக்கின்றன. தேசிய பொருளாதாரக் கொள்கைகளை கடைப்பிடிப்பதில் நெகிழ்வுத் தன்மையை வெகுவாக மட்டுப்படுத்தும் விதத்தில் இந் நிதியத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. தென் கொரியாவில் நிகழ்ந்தது இதுவேயாகும்.

ஏற்றுமதி நோக்கிலான கொண்ட வளர்ச்சி தொடர்பாக தென் கொரியாவின் அனுபவம் ''மத்திய அரசாங்கத்தின் மிக அதிகமான நெறிப்படுத்தலின் கீழ் மேற்கொள்ளப்பட்டமையால் அது பண்டைய தலையிடாக் கொள்கை வகையைச் சேர்ந்ததல்ல'' (லெபருகன்: 85: 174) தனிப்பட்ட குறிக்கோள்களை தேசிய பொருளாதார உணர்வுகளுடன் தொடர்புபடுத்தக்கூடிய நன்கு கல்வி கற்ற, ஊக்கமுள்ள, இடம்பெயரக் கூடிய, போராடும் போக்கு கொண்டிராத கூலிப்படையும், முனைவோர் வர்க்கமும்'' தேசத்தின் பெருஞ் சொத்துக்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த அகக் காரணிகள் உலகளாவிய பொருளாதார அபிவிருத்தியுடன் இணைந்து 1960களிலும் 70களிலும் தென் கொரியா அடைந்த வியத்தகு வளர்ச்சிச் சாதனைகட்கு உதவிபுரிந்தன.

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 300 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 800 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

# பொருளியல் நோக்கு

பிரதி விலை
ரூ. 7.50
வருட சந்தா விலை
ரூ. 90.00

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

Printed at I.G.M. Limited, 24, Katukurunduwatte Road, Ratmalana.